www.tamilarangam.net


# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடவை 02 (16.06.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவருஞ் செய்தித்தாள் அன்பளிப்பு: 40p


**ஈழத் தமிழனே!**

உனது வீட்டிலேயே
குண்டுகள் விழ்ந்து
உன் அம்மா–அப்பா,
உன் அக்கா–தங்கைகள்,
உன் அண்ணா–தம்பிகள்
கோரமாகக் கொல்லப்
–படுகின்றனர்
இதைத் தடுத்திட
உன் பங்குதான் என்ன?

# பெரும் படை எடுப்பிற்காக வவுனியாவில் படைகள் குவிப்பு

வன்னியில் பெரும் படை நடவடிக்கையொன்றை மேற்கொள்ளுவதற்காக சிறீலங்காப்படைகள் வவுனியா நகருக்கு அருகில் ஆயிரக்கணக்கில் குவிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினரைக் குவிப்பதற்கு வசதியாக வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், காமினி மகா வித்தியாலயம், மற்றும் கொரவப் பொத்தானை-மதவாச்சி வீதியிலுள்ள நான்கு தமிழ்ப் பாடசாலைகளையும் தற்காலிகமாக சில தினங்கள் இராணுவத்தினருக்கு ஒப்படைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

வடபகுதிக்கு வரமுடியாத நிலை யில் வவுனியாவில் தரித்து நின்ற பல லொறிகளும், வடக்கே உணவுப் பொருள்களை எடுத்து வரவென அரச அனுமதியுடன் வவுனியாப் பகுதிக்குச் சென்ற பல லொறிகளும் இராணுவ தேவைக்கென எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. அனுராதபுரம், மதவாச்சி ஆகிய பகுதிகளில் உள்ள மருத்துவமனைகள் இராணுவத்தினரின் அவசர தேவைகளுக்காக மாற்றம் செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தின் இவ்வுத்தேசத் திட்டம் குறித்துத் தெளிவான தகவல்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. எனினும் பூவரசங்குளம் ஊடாக மன்னார் வீதிக்கோ அல்லது தாண்டிக்குளம் ஊடாக யாழ். வீதிக்கோ அல்லது அண்மையில் விடுதலைப் புலிகளின் பல தாக்குதல்கள் இடம்பெற்ற கொரவப் பொத்தானை மூலமாக திருகோணமலை வீதிக்கோஅல்லது பூவரசம்குளம், மடு, விடத்தல் தீவு ஊடாக பூநகரிவரைக்கோ முன்னேறுவதை இலக்கு வைத்து இராணுவம் முன்னேற்ற முயற்சிகளைச் செய்யக்கூடும் என ஊகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் பதட்டம்

இராணுவ முன்னெடுப்புக்களை

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# மட்டக்களப்பு - தாண்டியடி வாழைச்சேனையில் ஒரு மணி நேர கடும் மோதல்

## □ 15 இராணுவம் பலி □ பலர் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் மோதல் ஒன்றில் 15க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அண்மையில் இடம்பெற்ற இம் மோதலின்போது போராளி ஒரு-வரும் வீரச்சாவடைந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை என்னும் இடத்திலிருந்த விடுதலைப் புலிகளின் முகாமைச் சற்றிவளைக்க இராணுவம் முயன்றபோதே இம்மோதல் ஏற்பட்டது. சுமார் 200 பேருக்கு மேற்பட்ட இராணுவ அணி ஒன்றே விடுதலைப் புலிகளின் அம்முகாமைச் சுற்றி வளைக்க முனைந்தனர். காலை 7.00 மணியளவில் சுற்றி வளைக்கும் இம்முயற்சி மேற் கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட சண்டையானது சுமார் ஒரு மணித்தியாலத்திற்குமேல் நீடித்தது. இக்கடும் சண்டையில் 15க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு பலர் காயமடைந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டாம் லெப். வேலவன்(சபாநாயகன் அருளம்பலம்-மட்டக்களப்பு) வீரச்சாவடைந்தார்.

## தந்திரமலையில் மினி-முகாம் தாக்குதல்

தந்திரிமலைப் பகுதி சிறீலங்கா இராணுவ மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். 03.06.95 சனிக் கிழமை நள்ளிரவு 1230 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலின்போது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன் 6 பேர் படுகாயமடைந்ததாகத் தெரியவருகிறது.

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்



# தட்டுவன் கொட்டியில் புலிகள் தாக்குதல்

7 படையினர் பலி: 14 பேர் படுகாயம்

இரு போராளிகள் வீரச்சாவு

ஆனையிறவு இராணுவமுகாம் தட்டுவன் கொட்டி காவல் அரணிலிருந்து முன்னேறிய இராணுவத்தை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்குதல் நடத்தி-னர். இத்தாக்குதலில் ஏழுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகி-னர். 14 பேர் படுகாயமடைந்தனர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப் புலிக-ளினாற் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலில் இரு விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தட்டுவன்கொட்டிக் காவலரணிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரே விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகினர். இத்தாக்குதல் 20 நிமிடங்கள் நீ-டித்தது. இதில் இரண்டு போரா-ளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

விடுதலைப் புலிகள் நடத்திய இத்தாக்குதல் குறித்துத் தகவல்

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# சந்திரிகாவின் தடுமாற்றம்

-இனிப்புலிகளுடன் பேச்சுவார்த்தை இல்லை

-இனிப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டாலேயே பேச்சுவார்த்தை

தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் போரிட நிர்ப்பந்தித்த சந்திரிகா சிறீலங்கா இராணுவம் அடுக்கடுக்காகச் சந்திக்கும் தோல்விகளை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தடுமாறுகின்றார்.

சந்திரிகா முழு அளவிலான போரில் இன்னும் சிறீலங்கா அரசு இறங்கவில்லை எனவும் தற்பாதுகாப்பு இராணுவ நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவித்துள்ளார். இதன் மூலம் ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்தச் சந்திரிகா முயல்கின்றார். முதலில் சிறீலங்கா இராணுவம் அடுக்கடுக்காகச் சந்திக்கும் இராணுவத் தோல்விகளைச் சமாதானப்படுத்துவதற்காகவும், வெளிநாடுகளுக்கு தமிழர்மேல் தான் போர் தொடுக்கவில்லை ,எனக்காட்டுவதற்காகவும் இவ்விதம் பேசும் சந்திரிகா செய்தித்தாள்கள்மேல் பாயத் தொடங்கியுள்ளமை அவரின் இயலாமையைக் காட்டுகிறது. "இராணுவ இரகசியங்களை வெளியிடும் செய்தித்தாள்களின் முயற்சிகளைத் தடுப்போம்" எனும் பெயரில் தோல்விச் செய்திகள் சிங்கள மக்களிடை பரவுவதால் ஏற்படும் கொந்தளிப்பு மனோநிலையில் இருந்து தப்ப முயற்சிக்கும் சந்திரிகா, முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வருகிறார். "இனிப் புலிகளுடன் பேச்சுவார்த்தையே இல்லை" என ஒருமுறை கூளுரைக்கும் சந்திரிகா மறுமுறை "ஆயுதங்களைக் கீழே வைத்தாலே இனிப் புலிகளுடன் பேச்சுவார்த்தை" என நிபந்தனை விதிக்கிறார். இதன்மூலம் விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமைக்கு முகம் கொடுக்க இயலா நிலையில் சிறீலங்கா. தவிப்பது தெளிவாகிறது.

தாம் தமிழர்களுடன் அல்ல

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# 48 மணி நேர மோதலில் 32 இராணுவத்தினர் காயம்

பலாலியிலிருந்து நாற்பத்தியெட்டு மணிநேரத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது 32 இராணுவத்தினர் காயமடைந்ததாக வடபகுதியிலுள்ள சிறீலங்காப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விராணுவ நடவடிக்கைக்குப் பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் ஈடுபட்டதாகவும் இதனைத் தொடர்ந்து பலாலிப் படைமுகாம் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பலாலி விமானத்தளத்தை விஸ்தரிக்கும் நோக்குடனேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பலாலிப் பகுதியிற் படைகளின் நிலைகள் பலப்படுத்தப்பட்டுள்ள போதும் விமான எதிர்ப்பு ஆயுதங்களுக்கு எதிரான ஆயுதங்கள் வந்து சேரும் வரை விமானங்கள் அங்கு தரையிறங்க மாட்டாது எனச் சிறீலங்காப் பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழக்கு முகாம்களை முடக்க விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளனர்

## சண்டே ஐலண்ட் அரசியல் விமர்சகர்

விடுதலைப் புலிகள் தற்போது கிழக்கில் நடத்தும் தாக்குதல்களை நோக்கும் போது கிழக்கில் படையினரின் கால் நடை ரோந்தைக் கட்டுப்படுத்தவும் தனியாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றவும் நோக்கமாகக் கொண்டு நடைபெறுவதாக சண்டே ஐலண்ட் பத்திரிகையின் அரசியல் ஆய்வாளர் ஷாமிந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

இதேபாணியைத்தான் முன்னர் வடக்கில் மேற்கொண்டு படைமுகாம்களை புலிகள் முடக்கி வைத்தனர். சில முகாம்களைத் தாக்கினால் சில முகாம்கள் மூடப்படும் என்ற வகையிலும் புலிகள் கருதுகின்றனர். கொக்காவில், மாங்குளம் முகாம்கள் வீழ்ந்தபோது இவ்வாறே கிளிநொச்சி முகாம் மூடப்பட்டது. கிழக்கில் தற்போது விமானப்படை நடவடிக்கையும் பெரும்பாலும் முடக்கப்பட்டுவிட்டது.

கிழக்கில் விடுதலைப் புலிகளை ஒடுக்க பெருமளவிலான தரைப்படையினர் தேவையாக உள்ளது என சில அதிகாரிகள் தனிப்பட்ட வகையில் பேசும்போது கூறுகின்றனர்.

இதற்காக வடக்கிலிருந்து படைப் பிரிவுகளை அழைக்கமுடியாது இது பின் பேரழிவாகி விடும் என அவர்கள் கருதுகின்றனர்.

புலிகளின் வடக்கு-கிழக்கில் மேலோங்கிய இன்றைய நிலையில் படை உயர்பீடம் முன்னேற்றகரமான எந்தத் திட்டத்தையும் இதுவரை முன்வைக்கவில்லை என சில அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆட்சேர்ப்பு, பின்னர் அவர்களுக்கான பயிற்சி என்பவற்றுக்கு நாள் எடுக்கும்.

வான், தரை தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் வடக்கில் முகாம்கள் உள்ளன. எந்த முகாம் தாக்குதலுக்குள்ளாகும் எனத் தெளிவாகத் தெரியவில்லை. பெரும்பாலும் பூநகரி அல்லது ஆனையிறவு-வெற்றிலைக்கேணி முகாம்கள் தாக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. இரண்டாம் கட்ட ஈழப் போரில் கடற் புலிகளின் விரிவாக்கமும், மூன்றாம் கட்ட ஈழப் போரில் விமான எதிர்ப்புப் பிரிவும் வளர்ச்சி கண்டிருக்கின்றன என்றும் ஷாமிந்த பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

# அகோரச் செல் வீச்சில் ஏழு பேர் படுகாயம்

வடமராட்சி மற்றும் அச்சுவேலி, அளவெட்டிப் பகுதிகளில் இராணுவத்தினர் நடத்திய அகோர எறிகணை வீச்சில் ஏழுபேர் காயமடைந்துள்ளனர்.

தொண்டமனாறு, செல்வச்சந்நிதி ஆலய மண்டபப் பகுதியில் தங்கியிருந்த நாகலிங்கம் கந்தையா (வயது 61) காரைநகர், அப்பாத்துரை நாகரத்தினம் (வயது 61) சன்னாகம் மற்றும் வேலுப்பிள்ளை இராமலிங்கம் (வயது 71) ஆகியோர் எறிகணை வீச்சினால் காயமடைந்துள்ளனர். சந்நிதி ஆலயப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையினாலேயே இவர்கள் காயமடைந்தனர்.

இவர்கள் அவசர சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் தொண்டமனாற்றுப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் திருமதி சவுந்தரநாயகி (வயது 45) என்ற குடும்பப் பெண்ணும் காயமடைந்துள்ளார்.

இதேவேளை இப்பகுதியில் சில மாணவர்களும் காயமடைந்ததாகக் கூறப்படுகின்றது - எனினும் இத்தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை.

அச்சுவேலிப் பகுதியில் நடத்தப்பட்ட எறிகணை வீச்சிற்கு முருகேசு சிவக்கொழுந்து (வயது 45) என்பவரும், அளவெட்டியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளுக்கு இருவரும் படுகாயமடைந்தனர். அளவெட்டியைச் சேர்ந்த கவிதா (வயது 18), அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சின்னையா நடராசா (வயது 60) ஆகியோர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பதுங்கியிருந்து தாக்க முயன்ற இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையிற் சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் மீது பதுங்கியிருந்து தாக்குதல் நடத்த முயன்ற வேளை புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தியதில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார். ஏனையோர் பின் வாங்கிச் சென்றுவிட்டனர்.

அதிகாலை 4.00 மணியளவிற் பட்டிக்குடியிருப்புக்கும் பெரிய குளத்திற்கும் இடையில் 100க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் போராளிகள் மீது பதுங்கியிருந்து தாக்குதலை நடத்த முயன்றபோது இத் தாக்குதலிடம்பெற்றது.

# அதிரடிப்படை அம்பாறையில் வெறியாட்டம்

## மூன்று பொதுமக்கள் சூட்டுக்கு காயம்

## 85 தமிழர் வீடுகள் எரித்து அழிப்பு

அம்பாறை மாவட்டம் பொத்துவிலிலிருந்து இன்ஸ்பெக்டர் ஏத்தம் என்னுமிடத்திற்கு காவல் கடமைக்கு வந்து விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் மிதி வெடியில் சிக்கி காலிழந்தார். இதையடுத்து படையினர் அப் பகுதியில் மூவரை சுட்டுக் காயப்படுத்தியதுடன் பலரைத் தாக்கியும் சுமார் 85 வீடுகளை எரித்தும் உள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, மிதிவெடியில் படையினர் ஒருவர் காலிழந்ததையடுத்து படையினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் ஒரு பொதுமகன் காயமடைந்தார் வேறு இரு மாணவர்களையும் படையினர் பிடித்துச் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து இன்ஸ்பெக்டர் ஏத்தத்திலுள்ள மக்கள் அனைவரையும் உடைமைகள் எடுத்துச் செல்ல அனுமதிக்காமல் விரட்டியடித்தனர். தொடர்ந்து பொதுமக்களின் 85 வீடுகளைத் தீமூட்டி எரித்ததுடன் வேறு பலரையும் அடித்துத் துன்புறுத்தியுள்ளனர்.

அப்பகுதி மக்கள் உடைமைகள் அனைத்தும் அழிக்கப்பட்ட நிலையில் அகதிகளாக அயல் கிராமங்களான கோமாரி, திருக்கோவில் ஆகிய

# படைமுகாம்களுக்கான விநியோகம் பெருமளவில் பாதிப்பு

## படையினர் மனநிலையைப் பேண சுப்பர்சொனிக் பறப்பு

விடுதலைக் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து விமானப் படையின் 100 ஆசனங்கள் கொண்ட இரண்டு சீனத் தயாரிப்பு வை-8 விமானங்கள், 50 ஆசனங்களைக் கொண்ட எஞ்சிய மூன்று பிரிட்டிஷ் தயாரிப்பு அவ்ரோ விமானங்கள், 14 ஆசனங்கள் கொண்ட சீனத் தயாரிப்பு வை-12 விமானங்கள், ரஷ்யாவின் எம்ஐ. 17

உலங்குவானூர்திகள் ஆறு மற்றும் அமெரிக்க பெல்-212 ரக உலங்குவானூர்திகள் என்பன தரையிலேயே தொடர்ந்து தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் படையினருக்கு பெரியளவில் உணவுப் பொருட்களை அனுப்புவது தடைப்பட்டுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது. பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பித்தால் கடல் வழி மூலம் விநியோகம் மேற்கொள்வதும் சிரமமாய் விடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையிடம் 100 தொன் விநியோகத்தை எடுத்துச் செல்லக்கூடிய தரையிறங்கும் கப்பல்கள் உள்ளன. மேலும் இரண்டு சிறிய ரக தரையிறக்கும் கப்பல்களும் உண்டு. இதில் ஒன்று மூன்றாம் கட்டப்போர் ஆரம்பிக்க சில நாட்களுக்கு முன் சீனாவிலிருந்து வந்து சேர்ந்ததாகும் மேலும் ஒரு பாரிய தரையிறக்கும் கப்பல் ஐப்பசியில் சீனாவிலிருந்து தருவிக்கப்படவுள்ளது. ஆனால் இது காலம் பிந்தியதாகி விடும். தற்போது விநியோகம் மேற்கொள்ள வேண்டியதே அவசியமானது.

புலிகளின் முகாம்களை விமானப்படை தாக்குவதாக அரச தொடர்பு சாதனங்கள் சிறுவர்க்கான கதைகளைக் கூறிக் கொண்டு இருக்கின்றன. தனியே எப்-7 சுப்பர்சோனிக்விமானங்களே தாக்குதல்களை நடத்துகின்றன. இத்தகைய விமானங்கள் நான்கு இருந்த போதும் இதன் மிகையான வேகமானது இலக்கைக் குறியாகத்தாக்கும் திறன் அற்றதாக்கிவிடுகிறது. இவ்விமானங்கள் மூலம் படையினர் மன உறுதியைப் பேணவே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என ஐலண்ட் பத்திரிகையின் இராணுவத்துறை செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# திருமலை கடற்படைத்தளம் அதிவிசேட பாதுகாப்பு

## வலயமாக சிறிலங்கா அரசால் பிரகடனம்

திருமலைக் கடற்படைத்தளம் அதிவிசேட பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி மேலுந் தெரியவருவதாவது;

கடந்த திங்கள் இரவு இனந்தெரியாத இளைஞர் ஒருவர் கடற்படைத் தளத்தினுள் நுழைந்துள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்து பெரும் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடற்படைத்தளம் அதிவிசேட பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

நள்ளிரவில் கடற்படை சைரன் ஒலிக்கப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டது. இத்தேடுதல் மறுநாள் நண்பகல் வரை நீடித்தது. இதனால் கடற்படைத் தளத்திற்கு அருகே உள்ள திஸ்ஸ வித்தியாலயம் இயங்கவில்லை. அத்துடன் துறைமுகத்தில் வேலை செய்வோரையும் படையினர் அனுமதிக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

# தொண்டமனாற்றுப் பகுதி நோக்கி பலத்த செல்வீச்சு

பலாலி இராணுவ முகாமிலிருந்து தொண்டமனாறு நோக்கி இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடத்தினர். காலை முதல் இடையிடையே எறிகணைகள் தொண்டமனாற்றுப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. நண்பகல் 1.30 மணியளவில் இருந்து 2 மணி வரை தொடர்ச்சியாகப் பல எறிகணைகள் அப்பகுதியில் வீழ்ந்து வெடி த்தன.

அண்மைக்காலமாக அப்பகுதியில் எறிகணைத் தாக்குதல்கள் மழைபோலப் பொழியப்பட்டுள்ளன. ஒருநாளில் மட்டும் சுமார் நாற்பதுவரையில் வீழ்ந்து வெடித்திருக்கின்றன. பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் பெரிய அளவு உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை.

அண்மையில் இடம்பெயர்ந்த மக்கள் சிலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியபோதிலும் விமானக்குண்டுவீச்சு, எறிகணை வீச்சுக்களை அடுத்து மீண்டும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேசமயம் இக்கடும் எறிகணைத் தாக்குதல்களால் செல்வச் சந்நிதி ஆலயம் பலத்த சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

# சுப்பர்சொனிக்கிலிருந்து நேபாம் குண்டு வீச்சு

## தந்தைக்கும் மகளுக்கும் எரிகாயம்

தொண்டமனாறு வீதியாற் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது சிறிலங்கா சுப்பர்சொனிக் குண்டுவீச்சு விமானம் வீசிய நேபாம் குண்டுகளுக்குத் தந்தையும் மகளும் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் அண்மையில் 8.50 மணியளவிற் தொண்டமனாறு சங்கக்கடைப் பகுதியில் நடந்தது. திடீரென இப்பகுதிக்கு விரைந்து வந்த இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் அப்பகுதியில் இரண்டு நேபாம் குண்டுகளை வீசியதில் தொண்டமனாற்றைச் சேர்ந்த கூதன் வைரமுத்து(43) அவரது மகள் வைரமுத்து சூரியகலா(13) சந்தரேஸ்வரி பத்மராணி (42) ஆகியோரே எரிகாயங்களுக்கு இலக்காகிப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

சுப்பர்சொனிக் விமானங்களின் நேபாம் குண்டுகளுக்கு இலக்கான இருவரும் கை, கால், நெஞ்சு உடல் முழுவதும் எரிந்த நிலையிற் சிகிச்சை பெற்று வருகின்றனர். இரண்டு நேபாம் குண்டுகளை வீசிய இவ்விமானங்கள் உடனேயே கடலோரமாக ஓடி மறைந்தன. விமானங்கள் குண்டுகளை வீசிவிட்டு ஓடி மறைந்த பின்னரே குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டது. இதேவேளை தொண்டமனாறு கடற்பகுதியிலிருந்து வளலாய் தொண்டமனாறு பகுதிகள் நோக்கிக் கடற்படையினர் பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். காலை 7.40 மணியளவில் இத்தாக்குதற் சம்பவம் நடந்தது. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

www.tamilarangam.net



# இனி ஒரேவழி

தமிழ்மக்களைப் போரொன்றின் மூலம் அடக்கி ஆள்வதே, இனியுள்ள ஒரே வழி என அமைதிப்புறாவாக நடித்த சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா போர்ப்பிரகடனம் செய்து நிற்கிறார்.

"நாம் தமிழ் மக்களுடன் போர் செய்யவில்லை, சமாதானத்திற்கு எதிரான குழு ஒன்றுடனேயே போரில் ஈடுபட்டுள்ளோம்" என்பது அம்மையாரின் முதல் தந்திரம். "விடுதலைப் புலிகள் சிறிலங்காவுக்கு எதிராகப் போர் நடத்தவில்லை, தமிழர்களுக்கு எதிரான போரையே நடாத்துகிறார்கள்" என்பது அம்மையாரின் புது விளக்கம்.

இத்தகைய போலித்தனமான, பிரச்சாரம் ஒன்றை மேற்கொள்வதற்கான திட்டமிட்ட முதற்படியாகவே அம்மையார் 'பேச்சுவார்த்தை' நாடகத்தைத் தொடங்கினார். இலங்கைத்தீவில் 1983 முதல் தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் சிறீலங்காவின் இறைமை செயலிழந்து விட்டதையும், விடுதலைப் புலிகளின் 'கட்டுப்பாட்டுப் பகுதிகள்' எனும் மீட்கப்பட்ட பகுதிகளில் தமிழீழ அரசநோக்கிய அரச தெளிவாக செயற்படுவதையும் அனைத்துலகிற்கு மறைத்து, "இலங்கைத்தீவு ஒற்றையாட்சி-ஒருமைப்பாட்டை தொடர்ந்தும் பேணுகிறது" எனக்காட்டுவது ஒரு நோக்கு. "விடுதலைப் புலிகளும் தமிழர்களும் ஒன்றல்ல, நாம் தமிழர்களுக்கு நன்மை செய்யவே விரும்புகிறோம். விடுதலைப் புலிகள் இதனை அனுமதிக்கிறார்களில்லை" எனக்காட்டுவது மறுநோக்கம். இவை இரண்டுடனும் சேர்த்து "நாம் பேச்சுவார்த்தையையே விரும்புகிறோம், விடுதலைப் புலிகள் அனுமதிக்காததினால் அவர்களை அழித்துவிட்டு தமிழ்மக்களுக்குத் தீர்வுகாட்ட நாம் போர் செய்கிறோம்" எனும் தத்துவத்தைத் தோற்றுவித்து, சிங்கள-பௌத்த பேரினவாத இராணுவ ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துவது பெரும் நோக்கம்.

இத்தகைய இதய சுத்தியற்ற கபடநோக்குடன் அம்மையார் பேச்சுவார்த்தையைத் தொடங்கியதினாலேயே, மக்கள் மீதான பொருண்மியத் தடை, மீன் பிடித் தடை, போக்குவரத்துத் தடை போன்ற இன்னொரன்ன மனித நேயமற்ற தடைகளையும், சிறிலங்காப் படைகள் ஏற்படுத்திய, ஏற்படுத்தக்கூடிய அழிவுகளையும் இல்லாமல் செய்ய விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோள்களைக்கூட, பரிசீலிக்க இயலாமல் போனது.

மாறாக விடுதலைப் புலிகளோ, தமது சமாதானத்தின் மீதான நல்லெண்ணத்தையும் பரஸ்பர உறவைக்கட்டி எழுப்புவதற்கான நம்பிக்கையையும் வெளிப்படுத்தக் கூடியமுறையில் சிங்களப் போர்க்கைதிகளை விடுதலை செய்ததும் அல்லாமல், உண்ணாவிரதம் இருந்த சிங்களப் போர்க்கைதிகளையும் மனிதாயத்திற்கு மதிப்பளித்து நிபந்தனையின்றி விடுதலை செய்தனர். அமைதிக்கு மதிப்பளித்து பூரண போர்நிறுத்தத்தைக் கோரினர். பிரச்சினைக்கான ஒரேதீர்வாக தமிழீழத்தை விடுதலைப் புலிகள் முன்வைத்த நிலையிலும், தாயக உரிமையை அங்கீகரிக்கும் மாற்றுத்தீர்வுகளை சிறீலங்கா முன்வைத்தால் பரிசீலிக்கத் தயார் எனவும் அறிவித்தனர்.

இத்தனை செய்தும், அத்தனையையும் தனது படைகளுக்கு இழப்பு இல்லாநிலையில், படைகளைப் பலப்படுத்துவதற்கான காலஅவகாசமாக அம்மையார் மாற்றினாரே தவிர, அவரது அரச அதிகாரிகளுடன் இணக்கம் காணப்பட்ட புனர்வாழ்வு-புனரமைப்பு நடவடிக்கைகளைக் கூட செயற்படுத்தவில்லை. மாறாக, அவரின் இராணுவ ஆக்கிரமிப்பாளர்கள் தென்தமிழீழத்திலும், தமிழீழ எல்லைக்கிராமங்களிலும் மக்கள் மீதான முற்றுகை, மண்பறிப்புநடவடிக்கை என்பனவற்றைத் தொடர்ந்ததுடன் உயிரிழப்புக்களையும் உருவாக்கினர். இக்காலகட்டத்தில்கூட, காலக்கெடு விதித்து அமைதிமுயற்சிகளை முன்னேற்றுவிக்க விடுதலைப் புலிகள் முயன்றனர். ஆயினும் சிறீலங்கா, விடுதலைப் புலிகளைப் போரில் ஈடுபட நிர்ப்பந்தித்தது. மீளவும் சிறீலங்காவால் தமிழர்கள்மேல் போர் திணிக்கப்பட்டுள்ளது.

போர் தொடங்கிய பின்னர் சிறீலங்கா பலத்த ஆளணி, பொருளணிச் சேதங்களை அனுதினமும் பெற்றுவருகிறது. தென்தமிழீழமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் தான் உள்ளது என்னும் உண்மையை, விடுதலைப் புலிகள் தென்தமிழீழத்தில் பரவலாக நடாத்திவரும் வெற்றிகரத் தாக்குதல்கள் உறுதியாக்குகின்றன. தரை-கடல் வழிமார்க்கங்கள் மட்டுமல்ல, வான்வழி மார்க்கமும் விடுதலைப் புலிகளினால் தடுக்கப்படும் இக்கட்டான நிலையினைச் சிறீலங்காப்படைகள் அனுபவிக்கின்றன. சிறீலங்கா இராணுவத்தினர் மனோபலம் குன்றியும் காணப்படுகின்றனர். அவர்களுக்குத் தென்பூட்டுவதற்காக, "வெளிநாட்டு உதவி-கொண்டு வெல்வோம்" என தனது படையினர்க்கு பிராணவாயு வழங்கிக் கொண்டிருக்கிறது சிறீலங்கா.

இந்நிலையில் இனி ஒரே வழி 'தமிழீழம்' ஒன்றுதான். இதுவே பிரச்சினைக்கான இறுதியான ஒரே தீர்வாகவும், அமைதிக்கான ஒரே வழியாகவும் உள்ளது. ஆகவே அனைத்துலக சமூகம் எவ்வளவு வேகமாக தமிழீழத்தை அங்கீகரிக்கின்றதோ, அவ்வளவு விரைவாக இலங்கைத் தீவில் அமைதி ஏற்படும் என்பதே யதார்த்தம். இந்த யதார்த்தத்தை அனைத்துலகிற்கு உரமாகச் சொல்லி, கருவான தமிழீழம் உருவாகி வளர்வதை விரைவாக அங்கீகரிக்க வைக்கவேண்டிய கடமை வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழரதும் ஒரே வழியாக இருக்கட்டும்.

# வவுனித்தீவில் புலிகள் அதிரடி நான்கு படையினர் பலி

## ☐ பலர் காயம் ☐ ஆயுதங்களும் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவில் இராணுவச் சோதனைச் சாவடிமீது புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 2 பொலிசாரும், 2 இராணுவத்தினருமாக நான்கு படையினர் கொல்லப்பட்டனர்.

வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து ஐம்பது யார் தொலைவில் உள்ள சோதனைச் சாவடிமீது உழவு இயந்திரத்திற் சென்ற விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் இல்லை.

இத்தாக்குதலில் மேலும் ஒரு பொலிசாரும் ஒரு இராணுவச் சிப்பாயும் காயமடைந்ததாக ரூபவாகினி அறிவித்தது.

இதேவேளை குறிஞ்சாமுனை என்னுமிடத்திற் தடைகளை அகற்றவந்த படையினர்மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலிற் படையினருக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

வவுணதீவு அதிரடித் தாக்குதலிற் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்:

ரி-56.2 -01, ரி-56.1 -02, ரி-56 மகசீன் -03, நடுத்தர ரவை -50

# இனப்பிரச்சினை தொடர்பாக ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் எட்டு அம்சத் திட்டம் முன்வைப்பு

இனப்பிரச்சினை தொடர்பாக ஐரோப்பிய சங்கத்தைச் சேர்ந்த பல நிறுவனங்கள் ஆலோசனை தெரிவித்துள்ள எட்டு அம்சத் திட்டமொன்று ஐரோப்பிய பாராளுமன்றத்தில் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

சமாதான முயற்சிகளைப் புதுப்பிப்பதற்கான சிறீலங்கா அரசின் முயற்சிகளை ஆதரிப்பதற்குச் சகல அரசியல் பொருண்மிய வழிகளையும் பயன்படுத்துமாறு ஐரோப்பிய சங்கத்திடமும் அதன் ஐரோப்பிய நாடுகளிடமும் கோரப்பட்டுள்ளது.

ஐரோப்பிய பாராளுமன்றம் புலிகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய வேண்டாம் என்றும், புலிகளுக்கு ஆயுதங்கள் செல்லாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் ஐரோப்பிய சங்க நாடுகளிடமும் கோரியிருக்கின்றது.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிற் தற்போது இடம்பெற்றுவரும் நிலைமையைக் கருத்திற் கொண்டு விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு வற்புறுத்துமாறும் கேட்டுள்ளது.

அத்துடன் சிறீலங்கா அரச அதன் மனித உரிமைகள் சட்டத்தை மேலும் விருத்தி செய்யுமாறும் கோரப்பட்டிருக்கிறது. புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவேண்டுமென்று இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள நாடுகளின் அரசுகள் விசேடமாக 'சார்க்' நாடுகள் புலிகள் இயக்கத்தை வற்புறுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

# கைது செய்த தமிழனை காட்சிக்கு வைத்த காவல் துறை

மொரட்டுவையில் சில தமிழ் இளைஞர்களைப் பொதுமக்களின் தகவலை அடுத்துக் காவற்துறையினர் கைது செய்தனர். அவர்களிடமிருந்து மின்னிணைப்புச் சுருள்களும், மேலும் சில கருவிகளையும் கண்டுபிடித்தனர். இதையடுத்துக் கண்டுபிடித்த பொருள்களையும் இளைஞர்களையும் குண்டுத் தாக்குதலுக்கு வந்தவர்கள் என்றுகூறி மக்களின் பார்வைக்கு வைத்தனர் சிறீலங்கா காவற்துறையினர்.

சிறிது நேரத்திற் பொதுமக்கள் கூடினர். சில தொலைத் தொடர்பு நிறுவன ஊழியர்கள் தமது சகாக்கள் தான் என்பதை அறிந்து அந்த இளைஞர்களை விடுவித்தனர். தொலைத் தொடர்பு நிறுவனத்தில் வேலைசெய்யும் இவ்விளைஞர்கள் திருத்த வேலைகளை மேற்கொண்டிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் இராணுவக் கொடுமைகள்

கிண்ணையடியில் மீன்பிடித்து கொண்டிருந்த 35 வயதான தங்கராசா கனகராசாவை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுவிட்டு தம்மை தாக்கவந்ததாகக் கூறியுள்ளனர். மேலும் 71 வயதான சீனித்தம்பி என்பவரையும் 21 வயதான பாஸ்கரனையும் தெருவில் இடைமறித்த சிறீலங்காப் பாதுகாப்புப் படையினரால் கொடூரமாகத் தாக்கியதில் சீனித்தம்பி மூர்ச்சையானார். மேலும் தியாகராசா இராசலட்சுமி என்ற 40 வயதுப் பெண்மணி மட்டுநகரில் உள்ள அததிமுகாம் மீது சிறீலங்கா இராணுவத்தினர் ஏவிய எறிகணை தாக்கியதில் மரணமாகியுள்ளார். இதற்கிடையே பொத்துவில் 'இன்ஸ்பெக்டர் ஏற்றம்' எனுமிடத்தில் 87 வீடுகளை எரித்த படையினர் நாலு பேரை வீட்டுக்குள் போட்டு எரித்துள்ளதாக தெரிகிறது. வயல்களை எரித்தும் வேலிகளை வெட்டி வீசியும் தென்னைமரங்களை அழித்தும் மட்டக்களப்பின் விவசாய தன்மையை பாழடிக்கும் வேலைகளிலும், பெண்களை மானபங்கம் செய்யும் செயல்களிலும் சிறீலங்காப் படைகள் கடுமையாக செயல்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# இராணுவ உதவி வேண்டாம்

## ■ பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் இராமமூர்த்தி கருத்து

இந்தியாவோ மற்ற நாடுகளோ தமிழர்களுக்கு எதிரான போரிற்குச் சிறீலங்கா அரசுக்கு எந்த வகையில் உதவி செய்தாலும் அது உலகில் வாழும் ஒன்பது கோடி தமிழர்களின் மீது தொடுக்கப்பட்ட போராகக் கருத வேண்டியிருக்கும் என்று எச்சரிக்கை செய்வதாகப் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழப் பிரச்சினை சமாதான முறையிற் தீர்த்துவைக்கப்படப் பிறநாடுகளின் தலையீடு இருக்க வேண்டுமே தவிர, இலங்கைத் தீவில் வாழும் 35 இலட்சம் தமிழ்மக்களின் நியாயமான உரிமை களைப் புறக்கணிப்பதற்கு உதவு வதாக இருக்கக்கூடாது.

இந்தியா சிறீலங்காவிற்குப் போரில் உதவி செய்தால் அது இந்தியாவிலுள்ள ஏழு கோடி தமிழர்களின் சுயமரியாதையின் மீது கைவைக்கும் தேவையற்ற செயலாகும்.செக்கோஸ்லோவாக்கியா சமாதானமுறையில் இருநாடுகளாகப் பிரிந்து சென்று சுதந்திரமாக இயங்குவது போல தமிழீழப் பிரச்சினையும் சமுகமாகத் தீர்க்கப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மட்டு - வாழைச்சேனை வீதிக் காடுகள் படையினரால் அழிப்பு

மட்டக்களப்பு-வாழைச்சேனைப் பிரதான வீதியில் சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை வீதியோரக் காடுகள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டு வருகின்றன. பிரதான வீதியிலிருந்து புகையிரதப் பாதை வரை மரங்களை முற்றாக அழிக்கும் வேலையில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

இதேசமயம் வயலுக்கு வேலைக்குச் செல்லும் கூலித்தொழிலாளர்கள் கிரான் பாலத்தடி இராணுவ முகாமில் பதுங்கு குழி மற்றும் காவலரண்கள் அமைக்கும் வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். கிரானில் புகைவண்டிப் போக்குவரத்துக்கான தமது பாதுகாப்பு நடவடிக்கையின்போது இராணுவத்தினர் பொதுமக்களைக் கேடயமாகப் பிடித்துச் செல்கின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓட்டமாவடியில் தேடுதல் நடத்திய இராணுவம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல்

## - ஆறு இராணுவத்தினர் காயம்

ஓட்டமாவடிக்கு மேற்கே உள்ள மூக்கர் குளம் எனும் வயல் பகுதியில் தேடுதல் நடத்தச் சென்ற இராணுவம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். காலை முதல் நண்பகல் வரை கடும் துப்பாக்கி வேட்டு ஒலிகள் கேட்டன. படையினர் இடையிடையே செல் தாக்குதலும் நடத்தினர். இம்மோதலில் காயமடைந்த 6 இராணுவத்தினர் பொலநறுவை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

# தெற்காசியாவில் பீதியாம்

விடுதலைப்புலிகள் அண்மையில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தியமை தென்னாசியாவில் பீதியை ஏற்படுத்தியுள்ளதாகவும் இது குறித்துத் தாம் கவலை கொண்டுள்ளதாகவும் சார்க் நாட்டுத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

சார்க் அமைப்பில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, சிறிலங்கா, பூட்டான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

# சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள துறை நீலாவணைக்கிராமம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. அப்போது நூற்றிஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படையினரால் மிகமோசமாகத்தாக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இருபதுபேர் கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றும் சுமார் நூற்றிநாற்பது பேர்வரையில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

# பாரிய நடவடிக்கைக்கு இராணுவம் திட்டமிடுகிறதா?

கிழக்கில் இப்போது மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எதிர்காலத்திற்கான நடவடிக்கைகள் குறித்துத் திட்டமிடப்படுகிறது. மேற்கொண்டு இது குறித்து விபரங் கூறமுடியாது. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்றைய வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எந்தநேரமும் புலிகள் தோற்கடிக்கப்படும் வகையில் இராணுவத்தினர் பயிற்சி பெற்றுள்ளனர். சிறிலங்கா இராணுவம் கட்டுக்கோப்பாகச் செயற்படுகிறது. விடுதலைப்புலிகளை விட பாதுகாப்புப்படையினர் திறமையுள்ளவர்கள். புலிகள் நவீன ஆயுதங்களைப்பெற்றிருந்தபோதிலும் படையினர் ஒருபோதும் தமது திடசங்கற்பத்திலிருந்து விலகி நடக்கமாட்டார்கள் என்றும் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

முன்பு இராணுவப்பேச்சாளராக இருந்த கேணல் சரத் முனசிங்க பிரிகேடியராக பதவி உயர்த்தப்பட்டு மணலாறு பகுதி இராணுவப் பொறுப்பதிகாரியாக அனுப்பப்பட்டார். தற்போது மூன்றாங்கட்ட ஈழப்போர் ஆரம்பித்துள்ள நிலையில் அவர் மீண்டும் கொழும்பிற்கு அழைக்கப்பட்டு இராணுவப் பேச்சாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இராணுவத்தின் உளவியல் நடவடிக்கைப்பிரிவின் இயக்குனராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா தலையிடுகிறதா?

## மேற்கு அவதானிக்கிறதாம்

சிறிலங்காவின் இனப்போர் விவகாரத்தில் இந்தியா இராணுவரீதியாகத் தலையிடுகின்றதா என்பதை தாம் அவதானித்து வருவதாகக் கொழும்பில் உள்ள மேற்குலகத் தூதரக இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியத் தலையீடு குறித்துத் தம்மால் கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது என்றும், எனினும் இது ஒரு முக்கிய பிரச்சினை எனவும் இந்த இராஜதந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பலம் கூடியுள்ளமை அரசை சிக்கலில் மாட்டியுள்ளது என்பதை தாம் உணர்வதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆப்கானில் இருந்து புலிகள் ஏவுகணைகளைப் பெற்றிருக்கலாம் என இந்திய அதிகாரிகள் கூறுவதை நிராகரித்த மேற்குநாட்டு இராஜதந்திரிகள் வேறுவழி மூலம் அவ் ஏவுகணைகள் பெறப்பட்டிருக்கலாம் என்றும் குறிப்பிட்டனர்.

# விடுதலைப்புலிகளை போரில் வெல்வது முடியாத விடயம்

-அட்றியன் விஜேமான-

விடுதலைப் புலிகளைப் போரில் வெல்ல முடியாது. இவ்வாறு சண்டே லீடர் இதழில் அட்றியன் விஜேமான தெரிவித்துள்ளார்.

அவர் மேலுங்குறிப்பிடுகையில், வடக்கு-கிழக்குப் பகுதியில் ஒவ்வொன்றிலும் சுமார் 25,000 துருப்புக்கள் மேஜர், ஜெனரல்களின் தலைமையின் கீழ் இருக்கின்றன. விடுதலைப்புலிகளில் சுமார் எட்டாயிரம் பேர் உள்ளனர். இதில் பலத்தைக் கணக்கிட்டால் 16:1 என்ற விகிதத்தில் வரும். ஆயினும் இந்தப் போரில் சிறிலங்காப்படைகளால் ஒரு போதும் வெல்ல முடியாது. போர் முஸ்தீபுகள் நீண்ட காலம் போர் நீடிப்பதற்கே வழி வகுக்கும். அது தவிர வேறு எதையுங் காணமுடியாது. தாக்கிவிட்டு தப்பிவிடும் தந்திரத்தையும், கரும்புலி, மற்றும் கடற்புலி அமைப்புகளின் போர் யுக்திகளையும், மரபு வழி இராணுவத்தால் வெல்ல முடியாது. இதனைக் கடந்த காலத்திலிருந்து முப்படைத்தளபதிகளும் உணர்ந்திருக்கவேண்டும். இப்போது நடைபெறும் போரை பொசனியாவின் நிலைமைக்கு ஒப்பிடலாம். இங்கு பொசனிய சேர்பியர்கள் ஒரு பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். வட அயர்லாந்து நிலமையை எடுத்துக் கொண்டால் அது நீண்டகாலம் நீடித்து வருகிறது. ஆனால் விடுதலைப்புலிகளின் அமைப்புப் போலிருக்கும் கெரில்லாக்களுடன் போரிட்டு வெற்றி கொள்ள அந்த அரசினால் இயலவில்லை.

எதியோப்பியாவிலும் நாடு பிளவுபட்டது. நாடுகள் பிளவுபட்டு வருகின்றனவே தவிர போரினால் அரசுகள் வெல்ல முடியவில்லை. விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புக்களை அரசுகளால் அடக்க முடியவில்லை. யுத்தம், பேச்சுவார்த்தை என்ற நிலையிலேயே உள்ளது. விடுதலைப்புலிகள் தரையிலிருந்து வானுக்கு ஏவும் ஏவுகணைகளைப் பெறுமளவுக்கு முன்னேறியுள்ளனர். ஆனால் மேற்கூறிய நாடுகளில்கூட ஏவுகணைகளைப் பயன்படுத்தும் நிலை வரை வளர்ந்துள்ளனர்.

மேலும் சனாதிபதி அவர்களே போரினால் நிமிடத்திற்கு 41,000 ஆயிரம் ரூபா செலவிடப்படுவதாகக் கூறுகிறார். இதன் தன்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே கடந்தகாலத்தில் முப்படைத்தளபதிகளின் பிழைகளாலும் மற்றைய நாடுகளின் நிலமைகளை சரிவர உணராமையாலும் விடுதலைப் புலிகளுடனான போரை வெல்லுவது கடினமானது. யுத்தத்தால் இதனை வெல்ல முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# விறகு வெட்டச் சென்றவர் படையினரின் வேட்டுக்குப் பலி

அளவெட்டிப் பகுதியில் அண்மையில் விறகுவெட்டச் சென்ற இளைஞர் ஒருவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலியானார்.

ஊரெழு மேற்குச் சன்னாகத்தில் வசித்துவந்த மகாலிங்கம் சிவா (வயது 25) என்பவரே இவ்வாறு பலியான-வராவார்.

விறகு வெட்ட சென்ற இவரைக் காணாததால் அன்றைய தினம் உறவினர்கள் தேடிச் சென்று வயலொன்றில் கண்டெடுத்தனர்.

# மண்மீட்புப் போரில் நூறு கலைஞரும் தம்மை ஆகுதியாக்கியுள்ளனர்

-புதுவை இரத்தினதுரை

மண்மீட்புப் போராட்டத்திலே ஏழாயிரம் போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர். இதில் நூறு கலைஞர்களும் தங்களை ஆகுதியாக்கியிருக்கின்றனர். இந்த வீரர்களது வரலாறும் அவர்களை மடி சுமந்தவர்களது வரலாறும் பதியப்படவேண்டும்.

'வேலணைத்தீவுப் புலவர்கள் வரலாறு' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு அறிமுக உரையை நிகழ்த்திய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

வேலணை ப. நோ. கூ. சங்கத் தலைவர் பொ. மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில், எவன் தன்னுடைய வீட்டை நேசிக்கின்றானோ அவன்தான் தன்னுடைய நாட்டை நேசிப்பான். எவன் தன்னுடைய கிராமத்தை நேசிக்கின்றானோ அவன்தான் தன்னுடைய நாட்டுக்காக ஏதாவது செய்யவேண்டும் என்ற துடிப்புடன் எழுவான். தனது வீட்டைத் தனது கிராமத்தை நேசிக்கும் எண்ணம் விரிவடைந்து தனது நாட்டை நேசிக்கும் அளவிற்கு அது வியாபிக்கின்றது. புலவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்களது வரலாறுகளைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த நிலையிலேதான் இந்த 'வேலணைத்தீவுப் புலவர்கள் வரலாறு' என்னும் நூல் வெளிவருகின்றது என்றார்.

தொடர்ந்து இவ் விழாவில் வெளியீட்டுரையை நூலாசிரியர் தில்லைச்சிவன் நிகழ்த்த, ஆய்வுரையை வட-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதி செயலாளரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் உரை நிகழ்த்தினர். முதற்பிரதியை சுப்பிரமணியம் பெற்று க்கொண்டார். நன்றியுரையை வேலணை ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் வே. செல்லத்துரை நிகழ்த்தினார்.

# தமிழர்களின் போராட்டத்தால் சிங்களத்தலைமை குழம்பியுள்ளது

பாலகுமாரன்

காலங்காலமாக நடைபெற்ற இனக் கலவரங்களில் அடிவாங்கிய தமிழர்கள், எதிர்த்து அடிக்கத் தொடங்கியமை சிங்கள அரசியல்த் தலைமைகளுக்கு வியப்பை ஊட்டியது. விடுதலைப்புலிகள் விடுக்க வேண்டிய எச்சரிக்கைகளையும், இராணுவ நிலைப்பாடுகளையும் சிங்கள அரசும், அரசியல்வாதிகளும், செய்தித்தாள்களும் தமக்குள் தாமே விடுத்து வருகின்றன. குழம்பிய நிலையில் உள்ளன. இவ்வாறு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் 'குறுகத்தறித்த குறளும், இறுகச் செறிந்த போராட்டமும்' என்னும் பொருளில் கருத்துரையாற்றும் போது குறிப்பிட்டார். உரும்பிராய் அன்னை பூபதி கலையரங்கில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலுங் கூறுகையில், ஆறு மாதங்களுக்கும் மேலாக விடுதலைப்புலிகளுடன் திருமதி சந்திரிகா அரச நடத்திய பேச்சுக்களின் நிறைவேற்றப்படாத அன்றாடப் பிரச்சினைகள் பற்றி கொழும்பிலுள்ள குழுக்களுடன் சந்திரிகா பேச்சு நடத்தியுள்ளார். வவுனியாவிலுள்ள உணவு வாகனங்களை அனுப்புவது பற்றியும் கிளாலிப்பாதை பற்றியுமே பேச்சுக்கள் நடந்ததாம். தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி புதிதாகத் தெரிந்து கொள்பவர் போல சிறிலங்கா சனாதிபதி குழுக்களிடம் கருத்து கூறியுள்ளது; தனது இராணுவத்திற்கு பயந்துகொண்டே சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியது. என்பதையும் இதனாலேயே அரசாங்கத்தால் தீர்வுகளைக்காண முடியாமற்போனதுஎன்பதையும் எடுத்துக்காட்டுகிறது. சிறிலங்காவின் முன்னாள் சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரச்சனை அரசியல்வாதிகளின் கையிலிருந்து நழுவிப்போய் விட்டது எனவும், திருமதி சந்திரிகா புத்திசாதுரியமற்ற அரசியல் நடத்துகிறார் எனவும், கேலி செய்துள்ளார் எனச் சுட்டிக்காட்டினார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றோடு வள்ளுவத்தின் படைத்துறை மற்றும் அரசியல் தொடர்பான அதிகாரங்கள் எவ்வாறு பொருத்தப்பாடுடையதாகிறது என்பதையும் அவர் எடுத்து விளக்கினார். இக் கருத்தரங்கை தமிழீழ திருவள்ளுவர் மன்றம் ஏற்பாடு செய்து இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அனைத்துலகெங்கும்...

## இலண்டனில்...

**அம் மகஜரில்:** 'சமாதான முயற்சிகள் முறிவுற்றதற்கு ஒரு தரப்பினரை மட்டும் அவசரப்பட்டுக் குற்றம் சமத்துவதனால் எந்தப் பயனும் ஏற்படாது; சமாதான முயற்சிகள் முறிவுற்றமைக்கான காரணங்களை அமைதியாகப், பாரபட்சமற்ற முறையில் ஆராய்வதன் மூலமே, சமாதானம் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகும். பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட்ட 4 கோரிக்கைகளையும் நிறைவேற்றும்படி சிறிலங்கா அரசை அறிவுறுத்துவதன் மூலம் பிரித்தானிய அரச சமாதான முன்னெடுப்புக்களில் உதவலாம். இலங்கையில் நடைபெறும் ஆயுதப் போராட்டமும் உலகின் வேறுபாகங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சுயநிர்ணயப் போராட்டத்தையே ஒத்தது. சிறிலங்காவின் அரச பயங்கரவாதமே தமிழ் மக்களின் நியாயபூர்வமான ஆயுதப் போராட்டம் வலுப்பெறக் காரணமாக இருந்தது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை அங்கீகரிப்பதே ஒரு தீர்க்கமான முன்னெடுப்பாகும். சிறிலங்காவுக்கு வழங்கப்படும் நிதியுதவி கூடப் போரைத் தொடரவும் தமிழ்மக்களைக் கொல்லவுமே உபயோகப்படுத்தப் படுகின்றது" எனத் தெளிவுபடுத்தப் பட்டுள்ளதோடு, தமிழ் மக்களின் தாயகத்தையும், தமது அரசியல் அந்தஸ்த்தைத் தாமே சுயமாக நிர்ணயிக்கும் உரிமைகளையும் அங்கீகரிக்கும்படி சிறிலங்கா அரசிற்கு, வேண்டுகோள் விடுக்கமாறு, பிரித்தானியா அரசிடமும் மற்றும் சர்வதேச சமூகத்திடமும் வேண்டப்பட்டுள்ளது. இறுதியாகத், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நீதியை அங்கீகரிக்கும்படி பிரித்தானியா அரசிற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டதோடு, "நீதியில்லாமல் சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது" எனவும் அம்மகஜரிற் சுட்டிக்காட்டப்பட்டது".

பேரணியின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில், சிறிலங்காவின் அரச பயங்கரவாதத்திற்கெதிராகக் குரல் கொடுத்துவரும் அமைப்பைச் சேர்ந்த செல்வி. டியற்றி மெக்கோனல் உரையாற்றுகையில்,

"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே ஆரம்பத்தில் இருந்து சமாதானத்தை முன்னெடுத்து வந்துள்ளார். சந்திரிகா அரசுடன் சமாதானப் பேச்சுக்கு அத்திவாரமிட்ட விடுதலைப்புலிகள், அதன் நல்லெண்ணச் சமிக்கையாகப் போர்க் கைதிகளை விடுதலை செய்தனர். சமாதானத்திற்கான எல்லா வழிகளையும் பயன்படுத்தினர். ஆனால் சிறிலங்கா அரசு பிரச்சாரம் செய்கின்றது, விடுதலைப் புலிகளே பேச்சுவார்த்தையை முறித்து விட்டனர்-அவர்கள் போரையே விரும்புகின்றனர்-அவர்களுக்குச் சமாதானத்தில் நாட்டமில்லை என்று. இது உண்மைக்குப் புறம்பானது. வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்காகச் சிறிலங்கா அரசே சமாதானத்தில் ஆர்வமுடையதாகக் காட்டிக் கொண்டது. கால இழுத்தடிப்புச் செய்து அக்காலத்தை இராணுவப் பலப்படுத்தலுக்காகப் பயன்படுத்தியதே ஒழிய, தமிழ் மக்களின் நியாயமான குறைந்தபட்சக் கோரிக்கைகளைக்கூட நிறைவேற்றவில்லை. மறைமுகமாக அரசு போரையே விரும்பியது. ஏனெனில் விடுதலைப் புலிகள் 'நிரந்தரப் போர் நிறுத்தம்' ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தியபோதும் அரசு, இராணுவத்தைப் பலப்படுத்த உதவக்கூடியவகையில் 'மோதல் தவிர்ப்பு' நடவடிக்கை ஒன்றையே கொண்டு வந்தது, அதையும் சரிவர அமுலாக்கவில்லை. பெறப்படும் உதவியிற் பெரும்பகுதி வடக்கு-கிழக்குப் புனர்நிர்மாணத்திற்கே பாவிக்கப்படும் என்று பாரிசிற் கூடிய உதவிவழங்கும் நாடுகளிடம் சந்திரிகா கூறினார். ஆனால் இந்த வெளிநாட்டு உதவிகள் அழிவுகளை உண்டாக்கும் குண்டுகள் வடிவிலேயே தமிழ்ப் பிரதேசங்களுக்குச் செல்கின்றன. நான் இப்போது கேள்விப்படுகின்றேன், தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிக்கின்றன என்று. இவற்றைச் சர்வதேச சமூகம் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனையானது" என்று கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "எங்கள் கைகளில் பெரிய பொறுப்பு உள்ளது. வடக்கு-கிழக்கில் நடக்கும் உண்மைகளை உலகறியச் செய்ய வேண்டும். இங்கு கூடியிருக்கும் நாங்கள் இதைச் செய்யாதுவிட்டால், வேறு யார் செய்யப் போகின்றார்கள்" எனவும் கேள்வி எழுப்பினார்.

"பல்வேறு தியாகங்களைச் செய்து தம்மக்களின் விடுதலைக்காகப் போராடிவரும் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள் என சிறிலங்கா அரசு பிரச்சாரம் செய்கின்றது. நான் கூறுகின்றேன், விடுதலைப் புலிகளுடன் போராடுகின்றோம் எனக் கூறிக்கொண்டு, அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைக் கொடுமைப்படுத்திக் கொன்றுகுவித்துவரும் சிறிலங்கா ஆட்சியாளர்களே உண்மையான பயங்கரவாதிகள் என்று. ஒரு காலத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும் பயங்கரவாதி என்றே அழைக்கப்பட்டார். ஆனால் தென்னாபிரிக்காவில் நடந்தது என்ன என்பதை நாம் அறிவோம். விடுதலைப் புலிகள் தேச விடுதலைக்காக மட்டும் போராடவில்லை. பெண் ஒடுக்குமுறை கடுமையாகச் செயற்படுத்தப்படும் ஒரு சமூகத்திற், பெண் விடுதலைக்காகவும் விடுதலைப் புலிகள் போராடுகிறார்கள்" எனக்கூறிய செல்வி டியற்றி அவர்கள், "தமிழீழ விடுதலைப் போராட்டம் முக்கியமானதொரு கால கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் நாமெல்லோரும் உண்மைக்காகவும், நீதிக்காவும் போராடுவதோடு, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைப்பெற ஒன்றிணைந்து கடுமையாகச் செயற்பட வேண்டும்" எனவும் கேட்டுக்கொண்டார்.

விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளையின் சார்பில் உரையாற்றிய பொறுப்பாளர், "சந்திரிகா அரசினால் தமிழினம் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்திலேயே நாம் இவ் வூர்வலத்தை நடாத்தியிருக்கின்றோம். அதனால் இது தமிழின வரலாற்றில் ஒரு முக்கியமான சம்பவம். சமாதானப் பேச்சுவார்த்தையையும் மோதல் தவிர்ப்பு நடவடிக்கையையும் பயன்படுத்தித் தனது இராணுவத்திற்கு ஏற்பட்ட ஆளணி, பொருள் வழிச் சேதங்களை ஈடுசெய்வதில் ஈடுபட்ட சந்திரிகா அரசு, இன்று சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கும் அதன் தலைமைக்கும் களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. விடுதலைப் புலிகளைச் சாட்டாக வைத்து அந்நியநாட்டு ஆயுத உதவிகளைப் பெற்றுத் தமிழின அழிப்பில் ஈடுபட்டுவரும் சிறிலங்கா அரசின் சதிமுயற்சிகளைச் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துவது எமது கடமை. அத்துடன் எம்மிடமிருக்கும் சகல பல்துறை வளங்களையும் தமிழீழத் தேசத்தின் உருவாக்கலுக்காய் பகிர்ந்து கொண்டு, கைகோர்த்து உழைக்க உறுதி கொள்வோம். இன்று முதல் தமிழீழம் அனைத்துலகில் ஒரு முழுமையான சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்படும் வரை ஒன்றாய் ஒரு குடும்பமாய் உழைப்போம் என்னும் உறுதியுடன் விடைபெறுவோம்" எனக் கேட்டுக் கொண்டார்.

# கிழக்கு மாகாணத்தில் கோரக் கொலைகள்

இலங்கையின் பாதுகாப்புப் படைகள் போராளிகளுடனான போரில் கீழ்த்தரமான தந்திரோபாயங்களைக் கையாள்கின்றன. இவ்வாறு மட்டக்களப்பிலிருந்து 'கார்டியன்' செய்தித்தாள் நிருபரான சுசான் கோல்டன்பேர்க் (Suzanne Goldenberg) எழுதுகின்றார். மட்டக்களப்பில் உள்ள திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கும் பொலிஸ் முகாமிற்கும் இடைப்பட்ட திறந்தவெளியில் 4 தமிழ் இளைஞர்கள் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் துப்பாக்கிப் பிடியினால் ஏ வடிவில் வரும்வரை தாக்கப்பட்டனர். பின் 25 யார் பின்நோக்கி நகர்ந்த பொலிசார் தன்னியக்க துப்பாக்கியினால் 5 வினாடிகள் தொடர்ச்சியாக சுட்டனர். இளைஞர் அனைவரும் தரையில் விழுந்தனர். இச்சம்பவத்தில் ஒரு இளைஞன் தப்பியிருக்காவிட்டால் இலங்கைப் பாதுகாப்புப் படையின் இந்தக் கீழ்த்தரமான செயல்கள் வெளியுலகத்திற்கு மறைக்கப்பட்டிருக்கும். தப்பிய 17 வயதானவர், வலது கை துப்பாக்கி ரவைகளால் கடுமையாகக் காயப்படுத்தப்பட்ட போதும் வலியினால் முனகாமல் சற்றுநேரம் அசையாமல் படுத்திருந்தார். பொலிசார் மெதுவாக தமது முகாம்களுக்குத் திரும்பியதை அவதானித்த பின் 5 சுற்று முட்கம்பிகளின் ஊடாகவும், அகழிகளின் ஊடாகவும் தவழ்ந்து சென்று பாதுகாப்பான இடத்தையடைந்தார். அவ்விடத்திற்குத் திரும்பிய பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் திருக்குடும்பக் கன்னியர் மடத்தின் சுவர் சேதமடைந்தது. ஆனால் அவர்கள் அந்த இளைஞனைத் துரத்தவில்லை.

மட்டக்களப்புப் புறநகர்ப் பகுதியில் உள்ள ஜெயந்திபுர முகாமில் நடக்கும் படுகொலைகள், மட்டக்களப்பு நகரிலும், அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலும் அதிகரித்துவரும் இலங்கைப் பாதுகாப்புப் படையின் மிகக் கொடூரமான பல அராஜக நடவடிக்கைகளில் ஒன்றேயாகும்.



அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஆழமாக ஊடுருவித் தாக்குதல்கள் நடத்துகின்றனர். இதனால் பயமும் விரக்தியும் அடைந்த இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களினால் பெரும்பான்மைத் தமிழர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

பட்டப்பகலில் நடாத்திய இப்படுகொலையின் பின் ஜெயந்திபுரத்திற்கும், இருதயபுர பொலிஸ் முகாமிற்கும் இடையில் செறிந்துவாழும் தமிழ் மக்களைப் பீதியடைய வைப்பதற்காக இரவு முழுவதும் பொலிஸ் படைகள் தொடர்ச்சியாக சுட்டுக்கொண்டிருந்ததாக சாட்சிகள் கூறுவதாகவும் எழுதியுள்ளார்.

முதலில் ஒரு கிரனேட் சத்தமும் பின் 'டம், டம்' என எல்லாவகைத் துப்பாக்கிச் சத்தங்களும் தொடர்ந்து பதின்மூன்று மணித்தியாலங்களாக விடியும்வரை கேட்டதாக அங்கு வாழும் ஒரு பெண்மணி கூறியதாக ஆதாரம் காட்டியுள்ளார். அத்துடன் அப் பெண்மணி தனது தோட்டத்தில் இருந்தும் வீட்டுக்குள் இருந்தும் சுடுபட்ட வெற்று ரவைகளை சேர்த்துக் காட்டியபோது அவர் கைகளில் நிறைந்து வழிந்ததாகவும் எழுதியுள்ளார்.

பாதுகாப்பு வட்டாரம் இதற்கு விளக்கம் அளிக்கவில்லையாயினும் சுட்டுக்கொல்லப்பட்ட இவ் அப்பாவித் தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகளாக வர்ணிப்பார்கள் என அப்பகுதி மக்கள் கூறினார்கள். இவர்களின் குடும்பங்கள் அவ்விளைஞர்களின் உடல்களைப் பெற அனுமதிக்கப்பட்டபோது ஏற்கனவே 24 மணிநேரம் அவர்கள் மண்ணிற்குள் புதைக்கப்பட்டிருந்தாகவும் அவ் உடல்களைப் பார்வையிட்ட மக்கள் அவர்களின் முகங்கள் எரிக்கப்பட்டு உடம்பெல்லாம் ஊதியிருந்ததைப் பார்க்க அவர்களின் மேல் 'அசிட்' ஊற்றப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூறினர்.

இரவு நடந்த இச்சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த ஒரு சம்பவம் அல்ல. ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் 13 வயதான இளம் சிறுமிகள் உட்பட ஒவ்வொரு நாளும் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்படுகின்றனர். அதுவும் போராட்டத்திற்கு ஆதரவு எனக் கருதப்படும் கிராமங்களில் தொடர்ச்சியாக அதிகூடிய வன்முறைகளை சிறிலங்காப் படையினர் கையாளுகின்றனர். மக்களை தன் கண்ணிவெடிகள் மேல் நடக்கச்செய்தும், மோட்டார் தாக்குதல் நடக்கும் இடங்களில் அவர்களை ஒரு வேலியாகவும் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு கிராண் எனும் கிராமத்தில் இரு தமிழ்ப் பெண்களைக் கண்ணிவெடிகளை அடையாளம் காண அதிகாலை வேளையில் கண்ணிவெடிகளின் மேல் நடக்கச் செய்த பொழுது அவர்களின் கால்கள் வெடித்துச் சிதறியதாகவும் மனித உரிமைக் குழுக்களும் வைத்தியசாலைச் செய்திகளும் கூறுகின்றன.

இதன் விளைவுகள் அங்கு வாழும் மக்களின் மனோநிலையைப் பெரிதும் பாதித்துக்கொண்டிருக்கின்றன. இதனால் இக்கிழமை செங்கலடிக் கிராமத்தில் வாழும் ஒரு இளைஞன் நஞ்சருந்தித் தற்கொலை செய்துள்ளார். இராணுவம் தன்னை பிடித்து சித்திரவதை செய்யும் முன் தானே தனது உயிரை முடிக்கப் போவதாக இவர் கூறியதாக இவரின் மாமியார் செவ்வி கொடுத்துள்ளார்.

சித்திரவதைகளும், தமிழ்மக்கள் காணாமல் போவதும் முன்னரும் அடிக்கடி மட்டக்களப்பில் நடந்திருக்கின்றன. முக்கியமாக 1990-1991 காலப்பகுதியில் அதுவும் சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளிடம் இருந்து அவ்விடங்களை மீட்டெடுத்த பின்னர் இவ்வாறு நிகழ்ந்தது.

ஆனால் இந்தமுறை கொழும்பில் இருக்கும் உயரதிகாரிகள் இம் மனித உரிமை மீறல்களை மூடிமறைக்க மிகவும் முயற்சி செய்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்

www.tamilarangam.net



# தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் சனாதிபதி சந்திரிகாவே சமாதானத்தின் எதிரி !

"விமானப் படையின் கடைந்தெடுத்த முட்டாள் தனத்தால் ஒன்றல்ல இரண்டு விமானங்களை ஒரே விமான தளத்தில் சில மணித்தியால வித்தியாசத்தில் இழந்தது. இது மூன்றாம் ஈழப்போர் 19ம் திகதி மூளத் தொடங்கியபோது முப்படையினரும் எந்தவித ஆயத்தங்களுமின்றி இருந்த பரிதாபத்தை விளக்குகிறது.

இதைவிடப் பரிதாபம் விமானம் இயந்திரக் கோளாறினாற்தான் விழுந்து நொருங்கியது என்று மூடிமறைக்க எடுத்த முயற்சியாகும்.

விமானப் படை ஒரு விமானத்தை இழப்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால் இரண்டாவது விமானத்தையும் இழந்தது மன்னிக்க முடியாததாகும் (Unpardonable)".

இந்த அர்ச்சனைகள் யாருக்கு விழுகிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். ஆனால் அர்ச்சிப்பவர் யாரென்பதுதான் உங்களுக்குத் தெரியவில்லை.

பாதுகாப்பு நிருபர் ஸ்ரீலங்கா விமானப் படையை ஒப்பாரிக்கு மத்தியில் சபித்தும் இருக்கிறார்.

இவர் மட்டுமல்ல Sunday Times பத்திரிகையாளர்கள் உட்பட எல்லோருமே ஒரு பாட்டம் அழுது தொலைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா விமானப் படையைச் சேர்ந்த இரண்டு அவ்ரோ விமானங்கள் விடுதலைப் புலிகளது விமான எதிர்ப்புப் படையணியால் தாக்குதலுக்கு இலக்காகி அழிக்கப்பட்டது. பன்னிரண்டு வருடகால ஈழப்போரில் முக்கிய திருப்புமுனை என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும்.

ஸ்ரீலங்காவின் தரைப்படைக்கும், கடற்படைக்கும் ஈடுகொடுத்த தமிழீழத்தரைப் படையும் கடற்படையும், தமிழீழ வான்பரப்பில் ஆதிக்கம் செலுத்திய ஸ்ரீலங்கா விமானப் படைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை என்பது தெரிந்ததே.

ஆனையிறவுப் போரில் ஸ்ரீலங்காவின் இரா

கங்கணம் கட்டி நிற்கிறார்.

முன்னைய ஆட்சியாளர்கள் போலவே சனாதிபதி சந்திரிகாவின் சிந்தனையும் செயலும் இருந்து வருகிறது. அவர்கள் போட்ட தப்புக் கணக்கையே இவரும் போடுகிறார்.

பிடல் கஸ்ரோ என்ற தனிமனிதனை ஒழித்து விட்டால் கியூபா நாட்டின் பிரச்சினையை தீர்த்து விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுவரும் அமெரிக்க ஆட்சியாளர்களைப் போலவே சனாதிபதி சந்திரிகாவும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் என்ற தனிமனிதனை அழித்து விட்டால் தமிழீழப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று தப்புக் கணக்குப் போடுகிறார்.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தமிழ் தேசிய இனத்தின் அரசியலுரிமை, நிலவுரிமை, கல்வியுரிமை, தொழிலுரிமை, வாழ்வியலுரிமை மறுக்கப்பட்டதன் காரணமாகவே ஒரு பிரபாகரன் தமிழ் மண்ணில் உருவாக்கப்பட்டார் என்பதே

# முன்னைய சனாதிபதிகளை பின்பற்றும் இன்றைய சனாதிபதி சந்திரிகா !

தமிழ் ஈழத்துக்கும் - சிங்கள ஸ்ரீலங்காவிற்கும் இடையிலான யுத்தத்தினால் இராணுவ உயரதிகாரிகள், இராணுவதளபாட விற்பனையாளர்கள், இவர்களுக்கு இடையில் நிற்கும் தரகர்கள், இப்படிப் பலபேர் குபேரர்களாக மாறியிருக்கிறார்கள்.

பத்தாயிரத்தை முழுமையாகப் பார்க்காத இராணுவ அதிகாரிகள், பத்து இலட்சம் என்ன பத்துகோடி பணத்துக்கு அதிபதியாகிவிட்டார்கள். இதை நான் சொல்லவில்லை கடந்த ஆண்டு நடந்த தேர்தல் பிரசார மேடைகளில் சாட்சாத் சந்திரிகா குமாரணதுங்காவே இந்தமாதிரியான குற்றச் சாட்டுக்களை வீசியிருந்தார்.

இராணுவ உயரதிகாரிகள், ஆயுதகொள்வனவாளர்கள், தரகர்கள்போல் பணத்தைக் குவிக்காவிட்டாலும், தமிழ் ஈழத்துக்கும் - சிங்கள ஸ்ரீலங்காவிற்கும் இடையிலான போரினால் பத்திரிகைத் துறையில் பலருக்கு வேலைவாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு நிருபர்கள்
இராணுவ ஆய்வாளர்கள்
அரசியல் விமர்சகர்கள்
சிறப்பு நிருபர்கள்

இப்படித் தங்களை வர்ணித்துக் கொண்டு பலர் வயிற்றுப் பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மேலே சிறீலங்கா விமானப்படையைக் கடுமையாக அர்ச்சித்திருப்பவர் Island (7-5-1995) பத்திரிகையின் பாதுகாப்பு நிருபராவர்.

சென்றமுறை திருமலைக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படை இரண்டு பீரங்கிக் கப்பல்களை கடற்கரும்புலித் தாக்குதலில் இழந்த சோகத்தில் கொழும்பு பத்திரிகையாளர்கள் ஒப்பாரி வைத்து அழுததைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு "தென் தமிழீழத்தில் கட்டுமுறிப்புக் குளம் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகர மான தாக்குதல் பற்றி இந்தப் பத்திரிகையாளர்களுக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் நெஞ்சில் அடித்து இன்னும் பலத்த ஒப்பாரி வைத்திருப்பார்கள்" என்று எழுதியிருந்தேன்.

ஆனால் மரத்தாலே விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல, விடுதலைப் புலிகளது விமான எதிர்ப்புப் படையணியால் இரண்டு விமானங்கள் வட தமிழீழ வான்பரப்பில் வைத்துச் சுட்டு வீழ்த்தப்பட்ட அதிர்ச்சியால் தென் தமிழீழம் கட்டுமுறிப்புக்குளம் இர்ராணுவ முகாம் இழப்பிற்குப் பதில் இப்பத்திரிகையாளர்கள் அவ்ரோ விமானங்களின் இழப்பிற்கு ஒப்பாரி வைத்து அழுது தீர்த்து இருக்கிறார்கள்.

"விமானப்படை ஒரு விமானத்தை இழப்பதைப் புரிந்து கொள்ளலாம். பாவிகளே! பதினாறு மணித்தியால இடைவெளியில் இரண்டாவது விமானத்தையும் அதேஇடத்தில் அதே ஏவுகணைக்குப் பலிகொடுத்தீர்களே. இது மன்னிக்க முடியாத குற்றம்" என்று Island பத்திரிகையின்

ணுவ தரைநகர்வுக்கு ஸ்ரீலங்கா விமானப்படை கொடுத்த கவசம் இல்லா விட்டால், படையை நகர்த்தியிருக்க முடியாது. ஆனையிறவு இராணுவமுகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்திருக்கும்.

ஆனையிறவுப் போர்முனையில் மட்டுமல்ல, மற்றப் போர்முனைகளிலும் ஸ்ரீலங்கா விமானப் படையின் கவசம் கேந்திரமாக இருந்து வந்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் இலக்குகளைக் குண்டு போட்டு "பதமாக்கி"யதை (Softning enemy line) தொடர்ந்தே ஸ்ரீலங்கா இராணுவம் முகாம்களைவிட்டு முன்னேற எத்தனிப்பது வழக்கமாக இருந்துவந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளது உயிரிழப்புக்களுக்கும் பொதுமக்களது உயிர் இழப்புக்களுக்கும் இதே விமானப்படையின் குண்டு வீச்சுக்களே காரணமாக இருந்து வந்தது.

இப்போது, நிலைமை முற்றாகமாறிவிட்டது. தமிழீழ மண்ணும், அதன் மக்களும் சிங்களப்

**நக்கீரன்**

படைக்கு அந்நியமானது. முதலைக்கு தண்ணீரில் இருக்கும் மட்டும்தான் பலம். தண்ணீருக்கு வெளியே தரையில் அதனை பிற உயிரினங்கள் வென்று விடும்.

சிங்களப்படை, விமானக் கவசம் இழந்த நிலையில், தண்ணீருக்கு வெளியேவந்த முதலையைவிட பலவீனமான நிலையில் உள்ளது.

ஆனால் இந்த யதார்த்தத்தை முன்னைய ஆட்சியாளர்கள் போலவே சனாதிபதி சந்திரிகாவும் உள்வாங்க முடியாமல் இருக்கிறார்.

முன்னைய ஆட்சியாளர்களது இராணுவக் கோட்பாட்டையும், அணுகுமுறையையும் சனாதிபதி சந்திரிகாவும் அச்சொட்டாகப் பின்பற்றுகிறார்.

ஜே. ஆர், பிரேமதாசா இருவரும் ஏறிச் சறுக்கி விழுந்த இராணுவக் குதிரையில் சனாதிபதி சந்திரிகாவும் ஏறிச் சறுக்கிவிழக்

**தலைவர் பிரபாகரன் மட்டுமல்ல தமிழ் மக்களும் சமாதானத்தை எதிர்க்கவில்லை. மாறாக சமாதானத்தைவேறு யாரையும் விட மனதார விரும்புகிறார்கள். ஆனால், அந்த சமாதானம் நீதியானதாக இருக்க வேண்டும். நியாயமானதாக இருக்க வேண்டும், கௌரவத்துடன் கூடிய சமாதானமாக இருக்க வேண்டும்**

தமிழ்-சிங்கள தேசங்களுக்கிடையேயான போரின் யதார்த்தமாகும். இந்தப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்றால் போருக்கு வித்திட்ட காரணிகளுக்கு பரிகாரம் காணப்படவேண்டும்.

அதனை விடுத்து இந்த இனப்போர் ஏதோ சூனியத்தில் நடப்பது போலவும் அதற்கு பிரபாகரன் என்ற ஒரு தனி மனிதனே காரணம் என்றும் அந்த தமிழ் ஈழத் தேசியத்தலைவர் பிரபாகரனை அழித்துவிட்டால் போர் நின்று சமாதானம் விளைந்துவிடும் என்றும் சானதிபதி சந்திரிகா தப்புக் கணக்குப் போடுகிறார்.

The LTTE has no more logic to carry on the war now supposedly on behalf of the Tamil people except for the personal likes and dislikes of a handful of LTTE leaders.

ஒருசில தமிழீழ விடுதலைப் புலித் தலைவர்களது விருப்பு வெறுப்புக்கு அல்லாது தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் மக்கள் சார்பில் என்று சொல்லிக் கொண்ட இந்தப் போரைத் தொடர்வதில் எந்த நியாயமும் இல்லை.

சனாதிபதி சந்திரிகா மனோவியல்ரீதியாக எவ்வளவு தூரம் குழம்பிப்போயிருக்கிறார் என்பதற்கு India Today சஞ்சிகைக்கு அவர் அளித்த இந்தச் செவ்வி சாட்சிபகருகிறது.

அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகப் படித்த சந்திரிகா விடுதலைப் புலிகள் இந்தப் போரைத் தொடர்வதில் எந்த நியாயமும் இல்லை என்று சுயபுத்தி இழந்த நிலையிலேயே சொல்லியிருக்க வேண்டும்.

அப்படி இல்லையென்றால் இதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறு இருக்கமுடியாது. தமிழ்ஈழப்போருக்கு அடிகோலிய காரண காரியங்கள் அப்படியே இப்போதும் பூதாகரமாக எழுந்துநிற்க 'விடுதலைப் புலிகள் இந்தப் போரைத் தொடர்வதில் எந்த நியாயமும் இல்லை' என்று சொல்வது பைத்தியகாரத்தனம் இல்லாவிட்டால் வேறு எதுதான் பைத்தியக் காரத்தனம் என்று தெரியவில்லை.

பொருளாதாரத் தடையை நீக்கவில்லை, கொஞ்சம் தளர்த்திவிட்டால், இனப்பிரச்சினையை தீர்த்துவிட்டதாக சனாதிபதி சந்திரிகா கனவு காண்கிறார்.

ஏழாயிரத்துக்கும் அதிகமான விடுதலைப் புலி வீரர்கள் தங்கள் இளமைக்கால இனிமைக் கனவுகளைத் தொலைத்துவிட்டு செருக்களத்தில் தமிழீழக் கனவுகளை நெஞ்சில் சுமந்துகொண்டு களப்பலியானார்களே? இவர்கள் பொருளாதாரத் தடைத்தளர்வுக்காகவா செருக்களத்தில் வீழ்ந்துபட்டார்கள்?

"தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் சமாதானத்தைக் கண்டு பயப்படுகிறார்". என்று சனாதிபதி சந்திரிகா சொல்வது பத்திரிகையில்

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எல்லாரையும் எல்லா வேளையும் ஏமாற்ற முடியாது !

சந்திரிகா அம்மையாரின் அண்மைக்காலப் பேச்சுக்களைப் பார்க்கும்போது, முதுபெரும் இனவெறியன் ஜேஆர். ஞாபகத்திற்கு வருவதைத் தடுக்கமுடியாதுள்ளது.

சமாதான முகமூடி அணிந்த பேரினவாதிதான் சந்திரிகா என்ற கருத்தை, அவரே படிப்படியாக உறுதிப்படுத்தி வருகின்றார். புலிகள் இயக்கம் அவர்பற்றிய எதிர்வு கூறலை மிகச் சரியாகவே செய்துள்ளது.

சந்திரிகா அம்மையார் அவர்களுக்கு, தேர்தல் காலத்தில் அவர் கூறித்திரிந்தது போல, சமாதானம் தேவைப்பட்டிருக்கவில்லை. அவருக்கு சனாதிபதி பதவிதான் தேவைப்பட்டது. அந்தப் பதவியைப் பெற சமாதானப் பேச்சு என்ற தந்திரோபாய நிலைப்பாட்டை எடுத்து, அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். அதன் பின்னர், காலாவதியான அந்தத் தந்திரோபாயத்தை (பேச்சுவார்த்தை) தூக்கியெறிவதற்காக பின்வரும் சில உத்திகளை வகுத்தார்.



'உருப்படியாக எதையும் செய்யாது காலத்தை இழுத்தடித்தல்', 'சமாதான- 'யர்களைப் பேச்சிற்கு அனுப்புதல்', 'பேச்சு முறிவடையக்கூடிய சூழல்களை உருவாக்குதல்'.



அவர் வகுத்த உத்திகளும் வெற்றிகரமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு அவர் விரும்பியபடியே போரும் ஆரம்பித்துவிட்டது.

போர் ஆரம்பித்த கையோடு, ஒளிவு மறைவு இல்லாமல், சந்திரிகா அவர்கள் தனது உள்மனதை, தனது பேரினவாத முகத்தை, திறந்துகாட்ட ஆரம்பித்துவிட்டார். இந்தவகையில் சந்திரிகாவின் 'நேர்மைக்கு' எமது நன்றிகள்.

இந்த வேளையில், எமது மக்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது, நாங்கள் எல்லாருமே நம்பியது போல, சந்திரிகா அம்மையார் ஒரு சமாதான விரும்பி அல்ல: பதிலாக- ஜேஆர். ஜெயவர்த்தனாவைப் போல அல்லது லலித் அத்துலத்முதலியைப் போல அல்லது காமினி திசநாயக்கா போல, சந்திரிகா அம்மையாரும் ஒரு பேரினவாதத் தலைவரே ஆவார்!

பேச்சு வார்த்தைக் காலத்தில், தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிலவற்றின் மீதான தடையை நீக்குவதாக அறிவிப்புச்செய்துவிட்டு, இதைச் சரியாக நடைமுறைப்படுத்த கால அவகாசம் தேவை என்று சாட்டுகள் கூறி, சட்டப்படி அதை வர்த்தமானியில் வெளியிடுவதையும் 'கெட்டித்தனமாக' தவிர்த்தார். ஆனால், போர் தொடங்கிய அடுத்தகணம், தடை நீக்கிய பொருட்களுக்கும் தடை விதித்து, உடனடியாகவே வர்த்தமானியிலும் பதிந்து, எந்தவித நடைமுறைப் பிரச்சனைகளும் இல்லாது, சரியாகவும் விரைவாகவும் அதைச் சந்திரிகா நடைமுறைப்படுத்தினார். அவரது ஆறுமாத ஆட்சிக்காலத்தில் அவர் மிகவேகமாகச் செயற்பட்டது இந்த இடத்தில்தான் என்று கூறலாம்.

தமிழ் மக்களுக்குக் கொடுக்கும்போது "நடைமுறைப் பிரச்சினை" என்றும் "கால அவகாசம் தேவை" என்றுங் கூறும் சந்திரிகா, அவர்களுக்குக் கொடுத்ததைப் பறிக்கும்போது, மின்னலுக்கும் முழக்கத்திற்குமிடையிலான நேரமே எடுத்தார்.

இதை எப்படி அழைப்பது? தமிழின விரோத மனப்பான்மை என்பதா அல்லது தமிழ் மக்களுக்கு உதவ முயன்ற உத்தமி என்பதா?

தமிழ் மக்களுக்குச் செல்லும் பொருட்களுக்கத் தடையும் விதித்துவிட்டு, சந்திரிகா அவர்கள் 25. 04. 1995 இல் கூறினார். "தடையில்லாப்பொருட்களைக் கொண்டு செல்வதற்குக்கூட இராணுவம் அனுமதிக்கும் என உத்தரவாதம் அளிக்கமுடியாது." இந்த வார்த்தைகளை சந்திரிகாவின் திமிர்த்தனம் என்பதா அல்லது, தமிழ் மக்கள் மீதான வெறித்தனம் என்பதா!

தமிழரின் அரசியல் அரங்கிலிருந்து புலிகளை அப்புறப்படுத்தும் எண்ணத்துடன், புலிகளையும் தமிழ் மக்களையும் பிரித்து, தமிழ் மக்களது மனதில் நச்சு விதைகளை விதைக்கும் ஒரு சூழ்ச்சிகரத் திட்டத்தை எல்லாரும் செய்ய முற்பட்டதைப்போலவே சந்திரிகாவும் செய்ய முற்பட்டார். வெற்றுச் சொற்களாலும் பசப்பு வார்த்தைகளாலும் அதைச் சாதிக்க முயன்றார்.

தமிழ் மக்களுக்கு தனது அரசு உதவக் காத்திருக்கின்றது என்று வாஞ்சையுடன் அறிக்கைகளை விடும் சந்திரிகா அவர்கள் போர் தொடங்கியதும், தமிழ் மக்களின் ஒரேயொரு பயணப் பாதையான கிளாலிப் பாதையைத் தடைசெய்யும் அறிவிப்பை வெளியிட்டுவிட்டாரே! இது ஏன்? புலிகளின் பயணத்தைத் தடைசெய்வதற்கே இந் நடவடிக்கை என்று அரசு அறிவிப்பும் செய்துள்ளது. கிளாலி ஊடான புலிகளின் பயணத்தைத் தடுக்கும் சக்தி அரசக்கு "இல்லை" என்பது உலகிற்கே தெரியும். அப்படியாயின், கிளாலிப் பயணத் தடை யாருக்கு எதிரானது? அது தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கை அல்ல என்று அரசு விடும் அறிவிப்பை நம்பிக் கொண்டிருக்க, தமிழ்மக்கள் ஒன்றும் அரசியற் குருடர்கள் அல்லவே.



தமிழ் மக்கள் தமது உற்றாரையும் உறவினர்களையும் பார்த்துப் பேசவும், தமது அன்றாட ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ளும் ஒரு மார்க்கமாகவும் இருக்கும் கிளாலிப் படகுப் பயணத்தைத் தடைசெய்திருக்கும் சந்தரிகா அரசிடம், தமிழர்களுக்கு எதிரான உணர்வு எந்தளவில் உள்ளது என்பதை, வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது.

இந்த வேளையில் எமது மக்கள் ஒரு விடயத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது நாங்கள் எல்லாருமே நம்பியதுபோல, சந்தரிகா அம்மையார் ஒரு சமாதான விரும்பி அல்ல. பதிலாக- ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைப் போல அல்லது லலித் அத்துலத்முதலியைப் போல அல்லது காமினி திசநாயக்கா போல, சந்தரிகா அம்மையாரும் ஒரு பேரினவாதத் தலைவரே ஆவார்!

25. 4. 95 அன்று, ரூபவாகினியில், சந்தரிகா குமாரதுங்க அவர்கள் "செவ்வி" காணப்பட்டார். "வடபகுதி மக்களுக்கு நீங்கள் தெரிவிக்கும் செய்தி என்ன?" என்ற கேள்விக்கு, "முதலில் தென்பகுதி மக்கள் எமக்களித்த ஆதரவுக்கு நன்றி கூற வேண்டும்" என்று பதிலளிக்கத் தொடங்கி, சிங்கள மக்களை முதன்மைப்படுத்தித் தனது கருத்தைக்கூறியுள்ளார். "யாழ்ப்பாண மக்களைப்பற்றி எனக்குக் கவலையில்லை" என்று, 1982ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனா பகிரங்கமாகத் தெரிவித்த இனவாதக் கருத்தை, சந்திரிகா மறைமுகமாகத் தெரிவித்துள்ளார்.

இதே தொலைக்காட்சிச் செவ்வியில் கேட்கப்பட்ட இன்னொரு கேள்விக்கு, "சிங்கள இளைஞர்களைக் கொன்றவர்கள்", "சிங்களத் தலைவர்களைக் கொன்றவர்கள்", "கொழும்புக்கு வந்து குண்டுகளை வெடிக்க வைத்தவர்கள்" என்று. புலிகள் இயக்கம் மீது அடுக்கடுக்காகக் குற்றம் சுமத்தும் அம்மையார் அவர்கள், தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கும், தமிழ்ப் பெண்கள் பாலியல் வதைகளுக்கு உட்படுத்தப்பட்டதற்கும், ஆகாய, கடல் தாக்குதல்மூலம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், தமிழ் மக்களின் நிலங்கள் வன்கவர்வு செய்யபட்டதற்கும் யாரைக் குற்றம் சாட்டப்போகின்றார்? தமிழர்கள் அழிக்கப்படும்போது புலிகள் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்கவேண்டும் என்று சந்திரிகா போதிக்கிறாரா? அல்லது சிங்கள மக்களும் அவர்களது தலைவர்களும் மட்டும்தான் மனித உயிர்கள், அவர்களது இழப்புக்குத்தான் கவலைப்படவேண்டும். "தமிழர்கள் பற்றி எனக்குக் கவலை இல்லை" என்று, ஜே. ஆரின் பாணியில் சந்திரிகாவும் நினைக்கின்றாரா? அல்லது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சிந்தனைக் கருவூலமான மகாவம்சத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல, இன்றும் சிங்கள மாணவர்களுக்கு பாடசாலையில் போதிக்கப்படுவது போல, "தமிழர்களைக் கொன்றால் சொர்க்கத்திற்குப் போகலாம்" என்ற போதனை, சந்திரிகாவின் மனதை நிறைத்துள்ளதோ அல்லது, 'கொன்றவர்களைக்' கொல்லும்நிலைக்கு இன்று வளர்ந்துவிட்ட காரணத்தால் புலிகளைச் சந்திரிகாவுக்கு பிடிக்காமல்இருக்கலாம்.

"தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்கான அரசியல்த் தீர்வைப் புலிகள் இயக்கத்துடன் காண்பது கடினம்" என, அச்செவ்வியில் சந்திரிகா மேலும் தெரிவித்துள்ளார். இதனுடைய அர்த்தம் என்ன? புலிகள் இயக்கத்துடன் பேசி அரசியல்த் தீர்வு காண்பது என்பது கடினமா? அல்லது புலிகள் இயக்கத்தை ஏமாற்றி அரசியல்த்தீர்வு என்ற போர்வையில் தமிழ் இனத்தை அடிமைகொள்வது கடினமா?

சந்திரிகா அம்மையார் அவர்களே! சமாதான வழிமுறையில் தமிழ் இனத்திற்கு அரசியல்த்தீர்வை வழங்க நீங்கள் விரும்பவில்லை என்பதை, சமாதானப் பேச்சுக்களில் நீங்கள் காட்டிய அசிரத்தையும், அலட்சிய மனோபாவமும் அம்பலப் படுத்துகின்றன. பேச்சுமுறியப் போகின்றது என்ற ஒரு இக்கட்டான நிலை எழுந்தபோதுங்கூட மதகுருக்களையும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களையுமே பேச்சுக்கு அனுப்பி, பேச்சவார்த்தை மீதான உங்களது "அக்கறை"யைக்காட்டிவிட்டீர்கள்.



மேலைநாடுகள் சிலவற்றைக்கொண்டு புலிகளுக்கெதிரான கண்டன அறிக்கைகளை விடுக்கச்செய்து, புலிகளின் தலைமையைப் பணியச்செய்துவிடலாம் என்று எண்ணாதீர்கள். அந்தக் கண்டன அறிக்கைகளுக்குப் பின்னால் உள்ள 'அரசியல்', புலிகள் இயக்கத்திற்கு நன்கு பழக்கமானது. சர்வதேச அழுத்தத்திற்காக எமது மக்களின் அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுக்க, புலிகள் இயக்கம் என்றமே முயலமாட்டாது.

> தமிழர்கள் அழிக்கப்படும்போது புலிகள் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்கவேண்டும் என்று சந்திரிகா போதிக்கிறாரா? அல்லது சிங்கள மக்களும் அவர்களது தலைவர்களும் மட்டும்தான் மனித உயிர்கள், அவர்களது இழப்புக்குத்தான் கவலைப்படவேண்டும். "தமிழர்கள் பற்றி எனக்குக் கவலை இல்லை" என்று, ஜே. ஆரின் பாணியில் சந்திரிகாவும் நினைக்கின்றாரா?

www.tamilarangam.net



# உதிக்கும் திசை

## 3ஆம் ஈழப்போர் தொடங்கப்பட்ட பின் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்காப் படைகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் விபரங்கள்

### 19-04-95:- திருமலை மாவட்டம்

திருமலைத் துறைமுகத்தில் அதிவேகப் பீரங்கிக் கப்பல் இரண்டை விடுதலைப் புலிகளின் விசேட நீரடி நீச்சல் பிரிவினர் தாக்கியழித்தனர். இத்தாக்குதலிற் 12 கடற்படையினர் கொல்லப்பட்டும், 27 கடற்படையினர் படுகாயமடைந்துமுள்ளார்கள். இவ்வீரச் சாதனையில் 4 கடற் கரும் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

### 20-04 -95:- யாழ் மாவட்டம்

இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் இராணுவம் இழப்புகளைச் சந்தித்தது. இதில் எமது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

### 21-04-95:- திருமலை மாவட்டம்

சாம்பல்தீவிலுள்ள பொலிஸ் நிலையத்தின் வீதியோரத் தடையை அகற்றிக் கொண்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 6 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். ஒருவர் ஓடித்தப்பியுள்ளார். இவர்களிடமிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

திருமலைத் துறைமுகப்பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மீது நடத்திய தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டு 6 பேர் படுகாயமடைந்தனர்.

### 22-04-95:- மட்டக்களப்பு மாவட்டம்

கட்டுமுறிவு இராணுவமுகாம் தாக்கியழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 37 படையினர் கொல்லப்பட்டும் 50 திற்கு மேற்பட்ட படையினர் படுகாயமடைந்து முள்ளனர். பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர். இவ்வீரசாதனையில் 14 விடுதலைப்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

### 24-04-95:- மட்டக்களப்பு மாவட்டம்

போரதீவு விசேட அதிரடிப்படை முகாமின் காவலரண்மீது நடத்தப்பட்ட திடீர்த்தாக்குதலிற் பலபடையினர் கொல்லப்பட்டனர்.

### யாழ் மாவட்டம்

பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் நடைபெற்ற மோதலிற் பலபடையினர் கொல்லப்பட்டனர்.

### 27-04-95:- வன்னி மாவட்டம்

இறம்பைக் குளத்தில் இராணுவத்தினருடனான நேரடிமோதலில் இரு துணைப்படை வீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

### 28-04-95:- யாழ் மாவட்டம்

சரவணைக்குடாவில் (அராலித்துறை) சிறீலங்காப்படையினரின் தொடர் காவலரண் மீதான தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 14 பேர் படுகாயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

பலாலியிற் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான 'அவ்ரோ' விமானம் ஒன்று விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கியின் தாக்குதலுக்கு இலக்கானது. இத்தாக்குதலில் 43 படையினர் கொல்லப்பட்டனர்.

### 29-04-95:-

### யாழ் மாவட்டம் - மாதகல் வான்பரப்பு

மாதகற் பகுதியிற் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான மற்றொரு 'அவ்ரோ'விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் 49 படையினர் உட்பட மொத்தம் 52 பேர் கொல்லப்பட்டனர். இவர்களது உடல்களுடன் அராலித்துறையில் எம்மாற் கைப்பற்றப்பட்ட 4 படையினரது உடல்களும் சேர்த்து மொத்தம் 56 உடல்கள் யாழ் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேசமயம் மாதகலில் நிலை கொண்டுள்ள இராணுவம் வெளியேற முற்பட்ட போது நடத்தப்பட்ட தாக்குதலில் இழப்புகளுடன் இராணுவம் முகாம் திரும்பியது.

### 30-04-95:- மட்டக்களப்பு மாவட்டம்

இருதயபுரத்தில் ரோந்து சென்ற விசேட அதிரடிப் படையினர்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 3 அதிரடிப் படையினர் காயமடைந்தனர்.

### 01-05-95:- வன்னி மாவட்டம்

பூவரசங்குளத்திற் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் இராணுவம் பல இழப்புகளைச் சந்தித்தது. இதில் எமது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

### 03-05-95:- மட்டக்களப்பு மாவட்டம்

திகிலிவெட்டையில் ரோந்து செல்ல முற்பட்ட விசேட அதிரடிப்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். படுகாயமடைந்த இருவர் பின்னர் வைத்தியசாலையில் இறந்தனர். கொல்லப்பட்ட அதிரடிப்படையினரின் உடல்களும், ஆயுதங்களும் விடுதலைப்புலிகளாற் கைப்பற்றப்பட்டது.

இதே தினம் ஏறாவூர், கிரான்குளத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட வெவ்வேறான தாக்குதல்களில் இரு படையினர் கொல்லப்பட்டு ஒருவர் காயமடைந்துள்ளார்.

### 04-05-95:- மணலாறு மாவட்டம்

கொக்குத்தொடுவாய் இராணுவமுகாம் காவலரண்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட்டு நான்கு பேர் படுகாயமுற்றனர்.

### 04-05-95:- திருமலை மாவட்டம்

புல்மோட்டை இராணுவமுகாம் காவலரண்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

### 05-05-95:- முல்லைத்தீவு மாவட்டம்

தென்னமர வாடியில் சிறிலங்காப் படையினருடன் நடந்த நேரடிமோதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலின் போது சில இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### 06-05-95:- திருமலை மாவட்டம்

கும்புறுப்பிட்டி இராணுவ முகாமிலிருந்து ரோந்துசென்ற இராணுவத்தினருடன் நடந்த நேரடிமோதலில் இராணுவம் இழப்புகளைச் சந்தித்தது. இம்மோதலின்போது எமது போராளி ஒருவரும் வீரச்சாவடைந்துள்ளார்.

இதேதினம்

புல்மோட்டையில் இராணுவத்தினருடன் நடந்த மோதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### 07-05-95:- திருமலை மாவட்டம்

நகரப்பகுதியிற் படையினரின் அவதானிப்பு நிலையம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அதிகாரி ஒருவர்கொல்லப்பட்டார்.

### 08-05-95:- அம்பாறை மாவட்டம்

திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு அதிரடிப் படைமுகாமில் இருந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட அதிரடிப்படை அணியின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அவ்வணி முற்றாக அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 19 விசேட அதிரடிப்படையினர் கொல்லப்பட்டு இவர்களிடம் இருந்த பல நவீன ஆயுதங்கள் விடுதலைப் புலிகளாற் கைப்பற்றப்பட்டன.

### 11-05-95:- அனுராதபுர மாவட்டம்

பழம்புளியங்குளம் பொலிஸ்முகாம் தாக்கியழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 20 படையினர் கொல்லப்பட்டு 17 படை யினர் படுகாயமடைந்துள்ளனர். பெருந்தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின் போது எமது போராளி ஒருவரும் வீர மரணம் அடைந்தார்.



### 12-05-95:- மட்டக்களப்பு மாவட்டம்

வாழைச்சேனையில் எமது முகாமை முற்றுகையிட முயன்ற இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 15திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் எமது போராளியொருவர் வீரச்சாவடைந்தார்.

### திருமலை மாவட்டம்

கும்புறுப்பிட்டிக் காட்டுப்பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டுப் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

### யாழ் மாவட்டம்

கட்டுவன் பகுதியில் வெளியேற முயன்ற இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் இராணுவம் இழப்புக்களுடன் முகாம் திரும்பியது. இம் மோதலில் எமது 3 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

### 13-05-95:- வன்னி மாவட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நோக்கி...



செட்டிமலைப்பகுதியில் மறைந்திருந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிற் கடும் சண்டை மூண்டது. இச்சண்டையின் போது பல படையினர் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் 10 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## திருமலை மாவட்டம்

கல்லிரவு என்னுமிடத்தில் மறைந்திருந்து விடுதலைப் புலிகளைத் தாக்கும் நோக்கத்தில் இருந்துவிட்டு முகாம் திரும்புகையில் முகாமிற்கு 400 மீற்றர் தொலைவில் வைத்து இராணுவத்தினர் விடுதலைப் புலிகளாற் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயங்களுடன் தப்பி முகாமிற்குள் ஓடி விட்டனர். இவர்களிடமிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

## மட்டக்களப்பு மாவட்டம்

காத்தான்குடிப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட கடும் மோதலிற் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனால் இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டு முகாமிற்குத்திரும்பினர்.

## 13-05-95:- மட்டக்களப்பு மாவட்டம்

வாகரைப்பகுதியிற் சிறிலங்காப் படையினரின் பாரிய நடவடிக்கையின்போது ஏற்பட்ட நேரடிமோதலிற் பலபடையினர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்து முள்ளனர். இந்நடவடிக்கையின் போது எமது போராளிகள் 8 பேர் வீரச்சாவடைந்தனர்.

## 14-05-95:- யாழ் மாவட்டம்

ஆனையிறவு முன்னணிக் காவலரண்கள் மீது நடத்தப்பட்ட நேரடித்தாக்குதலின்போது 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டு 14 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலின்போது இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## மன்னார் மாவட்டம்

மன்னாரிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில் இராணுவம் இழப்புக்களைச் சந்தித்தது. இத்தாக்குதலின்போது எமது இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## 16-05-95:- திருமலை மாவட்டம்

திருகோணமலைக் கடற்பரப்பில் இலங்கைக் கடற் படையினருடன் எதிர் பாராமல் ஏற்பட்ட நேரடி மோதலிற் சிறிலங்காக் கடற்படை பல இழப்புக்களைச்சந்தித்தது. இம்மோதலில் எமது 7 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## 18-05-95:- மட்டக்களப்பு மாவட்டம்

புனானைக் காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப் படையினருடன் நடைபெற்ற நேரடிமோதலில் 4 விசேட அதிரடிப்படையினர் படுகாயமடைந்தனர்.



## யாழ் மாவட்டம்

பலாலி, அளவெட்டிப் பகுதியிலுள்ள இராணுவத்தினர் வெளியேற முற்பட்டபோது ஏற்பட்ட மோதலில் 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்துமுள்ளனர்.

## 19-05-95:- யாழ் மாவட்டம்

ஆனையிறவு இராணுவ முகாமின் தென்பகுதியிலுள்ள காவலரண்களிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் 8க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 14 படையினர் படுகாயமடைந்துமுள்ளனர். இந்நடவடிக்கையின் போது ஆயுத தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இத்தாக்குதலின்போது எமது 2 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## மட்டக்களப்பு மாவட்டம்

மகிழடித்தீவுச் சோதனைச் சாவடிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட்டனர்.

## 21-05-95:- திருமலை மாவட்டம்

புல்மோட்டையில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட நேரடி மோதலில் இராணுவம் இழப்புக்களைச் சந்தித்தது. எமது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

திரியாயில்
இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டார்.

## 22-05-95:- மட்டக்களப்பு மாவட்டம்

பனிச்சங்கேணியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் 27 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதலின்போது எமது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நாற்பெற்பாவி காட்டுப்புறத்தில் இடம்பெற்ற நேரடிமோதலில் இராணுவம் பலத்த இழப்புகளைச்சந்தித்தது. இத்தாக்குதலில் 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## 24-05-95:- மட்டக்களப்பு மாவட்டம்

தாளங்குடாவில் விசேட அதிரடிப்படையினர் ரோந்து சென்ற வாகனம்மீது விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் ஒரு அதிகாரி உட்பட இரு விசேட அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர்.

## 25-05-95:- யாழ் மாவட்டம்

காரைநகர்க் கடற்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் ஒரு கடற்படைச் சிப்பாய் கொல்லப்பட்டார்.

## 27-05-95:- மட்டக்களப்பு மாவட்டம்

புதுக்குடியிருப்பில் இருந்து ஆரையம்பதி நோக்கி வந்த அதிரடிப்படையினரின் வாகனத்தைப் புலிகள் தாக்கியதில் 3 அதிரடிப்படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காட்டுப் பகுதியில் இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் இராணுவம் பலத்த இழப்புக்களைச் சந்தித்தது. எமது தரப்பில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

## 31-05-95:- திருகோணமலை மாவட்டம்

திரியாய் காட்டுப் பகுதியிலுள்ள எமது முகாமை முற்றுகையிட முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடும் மோதல் இடம்பெற்றது. இம் மோதலில் இரு அதிகாரிகள் உட்பட 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 35க்கு மேற்பட்ட இராணுவத்தினர் காயப்படுத்தப்பட்டும் உள்ளனர். இதில் பெருமளவு இராணுவத் தளபாடங்களும், இறந்த இராணுவத்தினரது உடல்களும் கைப்பற்றப்பட்டது. எமது தரப்பில் எதுவித இழப்புக்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 01-06-95:- யாழ் மாவட்டம்

பூநகரிமுகாமில் இருந்து தடைகளை அகற்ற வந்த இராணுவத்தினர்மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டு பலர் காயப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்த ஆயுதத் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

## 02-06-95:- மன்னார் மாவட்டம்

ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 4 இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். இதேதினம் அதிரடிப்படை காவலரண்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 6 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதல் 14-05-95 அன்று மன்னாரில் வீரச்சாவடைந்த மேஜர்காளி, கப்டன்பூங்காவனம் ஆகியோரின் ஞாபகார்த்தமாகவே நடத்தப்பட்டது.

## திருமலை மாவட்டம்

திரியாய் காட்டுப்பகுதியிலுள்ள யான்ஓயாப் பகுதியில் சிறிலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் 11 மணிநேரம் கடும் சமர் இடம்பெற்றது. இதில் பல படையினர் கொல்லப்பட்டனர். பெரும் தொகையான படையினர் படுகாயமடைந்தனர். எமது தரப்பில் 12 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## மட்டக்களப்பு மாவட்டம்

காத்தான்குடியில் நிலைகொண்டிருந்த இராணுவக் காவலரண்மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டு பலர் படுகாயமடைந்தனர். இவர்களிடம் இருந்த ஆயுதத் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

## 04-06-95:- வன்னி மாவட்டம்

செட்டிக்குளம் ஆந்திரிமலையில் படையினரின் காவலரண்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 1 சிப்பாய் கொல்லப்பட்டு 5 சிப்பாய்கள் காயப்படுத்தப்பட்டுள்ளனர்.

## அனுராதபுர மாவட்டம்

தந்திரிமலைப் பகுதியில் உள்ள சிறியஇராணுவமுகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டும், பலர் படுகாயமடைந்தும் உள்ளனர். இவர்களிடம் இருந்து பெருமளவு இராணுவத் தளபாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## 07-06-95:- மட்டக்களப்பு மாவட்டம்

ஆயித்திய மலை என்னுமிடத்தில் விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கி 3 படையினர் கால்களை இழந்தனர்.

## 08-06-95:- வன்னி மாவட்டம்

6ஆம் கட்டை என்னுமிடத்தில் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கி 1 சிப்பாய் காலை இழந்தார்.

## 09-06-95:- யாழ் மாவட்டம

வளலாயில் படையினருக்கும் புலிகளுக்கும் கடும் மோதல் இடம்பெற்றது. பல படையினர் கொல்லப்பட்டும், பல படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனைத்து
# அணிதிரண்




## பிரான்சில்...

நீதியான சமாதானத்தை நோக்கி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் ஆனி மாதம் 10ஆம் நாள் சனிக்கிழமை மாலை ஓர் ஊர்வலத்தை நடாத்தினர்.

தற்போது நடைமுறையில் இருக்கும் பொருண்மியத்தடை, மீன்பிடித்தடை ஆகியவற்றுடன் பூநகரிமுகாமை நீக்கி கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதத்துடன் செல்ல அனுமதிப்பது பற்றியும் அரசு பேச்சுவார்த்தைக்கான தனது நல்லெண்ணத்தைக் காட்டி,
தமிழ்மக்கள் ஒரு தேசியஇனம் என்றும், அவர்களின் தாயகத்தை அங்கீகரித்தும், அவர்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்க வேண்டும். இதன்மூலமே சிங்கள அரசு, தமிழ்மக்களும், சிங்கள மக்களும் சுதந்திரமாகவும், சமாதானமாகவும் வாழக்கூடிய சமாதானத்தை அடைய முடியும் என்றும் ஊர்வலத்தின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

புலம் பெயர்ந்து வாழும் தமிழீழமக்கள் எமது தாயகத்தின் தேசிய பாதுகாப்பையும், பொருண்மியத்தையும் பேண தமது முழுப் பங்களிப்பையும் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இவ்வூர்வலம் பாரிஸ் Republique என்ற இடத்தில் இருந்து தொடங்கி Bastille என்ற இடத்தை வந்தடைந்தது. ஊர்வலத்தில் மழையையும் பொருட்படுத்தாது சிறுவர்கள், தலைவர் பிரபாகரனின் படத்தை ஏந்தியவாறு செல்ல ஏராளமான பெண்களும், ஆண்களும் சுதந்திர தமிழீழம்தான் தமக்குத் தேவை என்றும், எங்கள் தலைவர் பிரபாகரன் என்றும் கோசம் எழுப்பியவாறு பாரிஸ் நகர வீதிகளில் சென்றனர்.

ஊர்வலத்தின் இறுதியில் வண பிதா யூட், தமிழர் கல்வி நிலைய காப்பாளர் காராளபிள்ளை, தமிழ்ப் பெண்கள் அமைப்பின் தலைவி நிரஞ்சனா ஆகியோருடன் விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்.




## இலண்டனில்...

இலண்டனில், 03.06.95 சனிக்கிழமை அன்று ஐக்கிய தமிழர் அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஊர்வலத்தில் 2000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். பிற்பகல் 3மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம், இலண்டனின் மையப்பகுதியில் அமைந்துள்ள 'லங்காம் பிளேஸ்' எனுமிடத்தில் இருந்து இலண்டனின் பிரதான வீதிகளுக்கூடாகச் சென்று பிற்பகல் 4.45 மணியளவில் 'ரெம்பிள் பிளேஸ்' எனுமிடத்தில் முடிவுற்றது. காலையிலிருந்தே தொடர்ந்து பெய்த மழையையும் பொருட்படுத்தாது, வயது வேறுபாடின்றிக் கைக்குழந்தைகள் தொட்டு முதியோர் வரை ஊர்வலத்திற் பங்கெடுத்துத், தமது தாயக உணர்வுகளைச் சர்வதேச அரங்கில் வெளிப்படுத்தித், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான அங்கீகாரத்தைக் கோரி நின்றமை பார்ப்போரை மெய்சிலிர்க்க வைத்தது. கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற ஊர்வலங்களைவிட, இவ்வூர்வலத்திற் குழந்தைகளும், பெண்களும் அதிகமாகக் கலந்து கொண்டமை மிகவும் உணர்வுபூர்வமாக இருந்தது.

பேரணியிற், தமிழீழத் தேசபக்தர்கள் தனியாட்களாக, குடும்பங்களாகப் பங்குபற்றியதோடு, அமைப்பு ரீதியாகவும் பங்கெடுத்துத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையை, அதன் நியாயத் தன்மையை வெளிப்படுத்திச் சர்வதேச அங்கீகாரத்தை வேண்டிநின்றனர்.

உல்லாசப் பயணிகள் நிறைந்த நகர வீதிகளுக்கூடாகப் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு பேரணியினர் அணிவகுத்துச் சென்றமையாற், பல நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் கவனத்தையும் கவர்ந்த ஊர்வலமாகச் சிறப்புப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டவர் பலர் பேரணியைப் புகைப்படமெடுத்ததோடு, தமது ஒளிப்படக் கருவியிலும் (வீடியோக் கமரா) உள்வாங்கிக் கொண்டனர்.

ஊர்வலத்திற் பல்வேறு சுலோகங்கள் தாங்கிய நூற்றுக்கணக்கான பதாதைகள் எடுத்துச் செல்லப்பட்டதோடு, பேரணியினர் பல்வேறு குழுக்களாகக் குழுமித், தமது கோரிக்கைகளைக் கோசங்களாக வெளிப்படுத்தினர்.

**சர்வதேசமே!**

**சிறிலங்காவுக்கான ஆயுத, பொருண்மிய உதவிகளை நிறுத்து:**

**தமிழீழத்தை அங்கீகரி:**

**சிறிலங்காவே!**

**தமிழர்களைக் கொல்வதை நிறுத்து:**

**எங்கள் மக்கள் மீதான தடைகளை அகற்று:**

என்பன போன்ற கோசங்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டன. பேரணியின் மத்தியிற், தமிழீழ அங்கீகாரத்திற்கான கோரிக்கைகள் கொண்ட மகஜர் ஒன்றும் பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேஜரிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்...

தற்போது, வெளிநாடுகளில், தமிழீழ வி
விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்க
ஊர்வலங்கள் குறித்து தமிழீழத் தேசி
அவர்கள், தனது பாராட்டினைத்
ஊர்வலங்களைச் சிறப்பாக நடத்துமா
தாயகத்துக்கான அனைத்துலக
வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழீழ
செயல்பட வேண்டும் என்று கேட்டுக்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லிசெங்குறி
# ட மக்கள்

## ஜேர்மனியில்...

மேலைத்தேயம் தமிழர் நிலையைப் புரிந்தும் புரியாததுபோல் இருப்பது வேதனையானது என 'டோட்முன்ட்' நகரில் உலகத்தமிழர் இயக்கம் நடாத்திய ஊர்வலத்தின் இறுதியில் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கா. சிவநாதன் கூறினார்.




ந்தலைப் போராட்டத்தையும் தமிழீழ க் கோரி, நடைபெறும் ஆர்ப்பாட்ட ப் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார். இத்தகைய று அவர் கோரியுள்ளதோடு, தமிழீழத் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு, மக்கள் மேலும் கடுமையாகச் காண்டுள்ளார்.

### அவர் தொடர்ந்து பேசுகையில்

நாகரீக சமூகம் என தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள இந்த நாடுகள் நீதியைத் துணிந்து சொல்ல முன்வரவேண்டும்.

அடிக்கிறவனைப் பார்த்து "அடிக்காதே!" என்று சொல்வதை விடுத்து அடிபடுகிறவனைப் பார்த்து "தடுக்காதே!" என்று அறிக்கைகளை விடுவது வேதனையாக உள்ளது.

வெறிபிடித்த நாய் ஒன்று ஒரு சிறுவனை துரத்துகிறது என்று வைத்துக் கொள்வோம். ஈழத்தமிழரின் நிலை இதுதான். சுதந்திர இலங்கையாக பிரகடனப்படுத்தப்பட்ட நாளில் இருந்து இனவெறி அரசின் அடக்கு முறைகளால் நாம் விரட்டப்பட்டுக் கொண்டேயிருக்கின்றோம். சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, சிறுவனின் கால்சதைகள் இனவெறிநாயின் கோரப்பற்களால் கடித்துக் குதறப்பட்டது. நிமிரமுடியாமல் நொண்டினான் சிறுவன். அதையும் மீறி ஓடிய சிறுவனின் தோளிலே தொங்கிய பாடசாலைப் புத்தகப்பை நாயின் பற்களுக்கிடையில் சிக்கி புத்தகங்களும் புல்லாங்குழலும் சுக்கு நூறாகியது. தரப்படுத்தல் என்னும் வெறிப்பாய்ச்சல் அது. நிலப்பறிப்பு, மொழிப்பறிப்பு, உரிமைப்பறிப்பு இப்படித் தொடர்ந்து நடாத்தப்பட்ட இனவெறிப் பாய்ச்சல்களால் அடிமையாக்கப்பட்டு அழிக்கப்பட்டான் தமிழன். பாராளுமன்றத்தால் கூட பாதுகாப்பைப் பெற முடியாது என்ற இறுதிநிலையில், உயிர்கள் எல்லாவற்றிக்கும் இயற்கையாக உள்ள தற்பாதுகாப்பு முயற்சியாக கையிலே கல்லைத் தூக்கி வெறிநாயின் பாய்ச்சலை இடைநிறுத்தியிருக்கிறான் தமிழீழச் சிறுவன்.

1948 ஆம் ஆண்டில் இருந்து இனவெறி நாய் தமிழீழச் சிறுவனை கடித்துக்குதறி துரத்திக் கொண்டேயிருக்கின்றது.

இத்தனை ஆண்டுகளாக நாயை எச்சரிக்காத நாடுகள் கல்லைத்தூக்கி தன்னைக் காப்பாற்றிக் கொண்டுள்ள சிறுவனைப் பார்த்து கல்லைப் போட்டுவிட்டு நாயோடு கதை பேசச் சொல்வது எத்தனை கொடுமை?

பீப்பாய்க்குண்டுகள் தமிழீழ அப்பாவிமக்கள் மீது போடப்பட்டபோது பேசாத உதடுகள், அவற்றை போட்ட விமானங்களை சுட்டுவீழ்த்தியபோது அறிக்கைவிடுவது எப்படியானது?

நீதியை அடித்துச் சொல்லும் வல்லமை உள்ள வெளிநாடுகள் முரணான தீர்ப்புக்களைக் கூறுவது கேலிக்குரியதாக இல்லையா? இந்தத் தவறான பார்வை நாகரீக நாடுகள் என்று எண்ணும் எண்ணத்திற்கு மாசு கற்பித்துவிடும் அல்லவா?

இதனை மேலைத்தேய நாடுகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றார்.


மிக நீண்ட வரிசையில் 'டோட்மூண்ட்' நகரைச் சுற்றி வந்த ஊர்வலத்தில் தமிழீழத்தை அங்கீகரிக்க கோரி எழுதப்பட்ட அட்டைகள், சிங்கள இனவாத அரசை வெளிக்காட்டும் வகையில் அமைந்த சுலோகங்கள், இனவெறிக் கொடுமையைச் சித்தரிக்கும் படங்கள் ஆகியன தூக்கிச் செல்லப்பட்டன. தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படத்தையும் தமிழீழத் தேசியக் கொடிகளையும் தாங்கியவண்ணம் உலகத் தமிழர் இயக்கம் ஊர்வலத்தை நடாத்திச் சென்றது.

சிங்கள இனவாத அரசின் பொருண்மியத் தடையை உள்ளடக்கிய அனைத்து அடக்கு

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

ஜேர்மனியில்...






## கனடாவில்...

"தமிழீழத்தை அங்கீகரியுங்கள்", "எங்களுக்குத் தேவை நீதியான அமைதி", "பிரபாகரன் எங்கள் தலைவர்", "தமிழீழத்தின் அரசு நோக்கிய அரசை கனடாவே அங்கீகரி", "தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை கனடாவே அங்கீகரி"

என்ற கோசங்களுடன் நாலாயிரத்திற்கும் அதிகமான தமிழ்மக்கள் ஆனி 5ஆம் நாளன்று 'ஒட்டாவா'வின் பாராளுமன்ற முன்றில் ஒன்று திரண்டனர். தமிழீழத்தின் தேசியக் கொடிகளையும், சுலோக அட்டைகளையும், பதாகைகளையும் தாங்கிய தமிழர்கள் "தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை கனடாவே அங்கீகரி", "விடுதலைப் புலிகளின் தலைமைப் பங்களிப்பை கனடாவே அங்கீகரி", "வெளிநாட்டு உதவிகள் தமிழ்மக்களுக்கு எதிரான நீதியற்ற போரை வளர்க்க உதவுகின்றன" என்பன போன்ற கோசங்களையும் எழுப்பியபடி கனடா நாட்டின் 'ஒட்டாவா' நகரின் பிரதான வீதிகளுடாக சுமார் 2 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வெளிவிவகார அமைச்சின் கட்டடம் நோக்கிப் பேரணியாகச் சென்றனர். தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை கோரி கனடியத் தமிழர் அமைப்புக்களின் ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட இப்பிரமாண்டமான ஊர்வலத்தில் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் அரசு மீண்டும் தமிழ்மக்கள் மீதான பொருண்மியத் தடைகளை அமுலாக்கியதையும், அவரின் அரச படைகள் அப்பாவித் தமிழ்மக்களை வான்வழிக் குண்டு வீச்சாலும், தரை – கடல் வழி எறிகணை வீச்சுக்களாலும் கொன்று அழிப்பதை கண்டித்தும் மக்கள் உணர்ச்சிவசமாகக் குரல் எழுப்பி சிறீலங்கா அரசைக் கண்டித்தனர்.

கனடியப் பிரதமர் ஜீன் செறிடீன் (Rt. Hon. Jean Chorction) க்கு முகவரியிட்ட மகஜரை, தெற்காசியப் பிரிவின் பதில் இயக்குனர் திரு. பைரன் ஈ பேர்டன் (Mr. Bryan E Burton) வெளிவிவகார அமைச்சில் வைத்து மக்களிடம் இருந்து பெற்றுக் கொண்டார். மூன்று மில்லியன் தமிழீழமக்களின் தெளிவாக வரையறுக்கப்பட்ட எல்லைகளில் நாட்டினம் எனும் தகுதியுடன் வாழ்ந்து வருவதால் இயல்பாகவே உள்ள சுயநிர்ணய உரிமையை அனைத்துலக சமூகமும் சிறிலங்கா அரசும் அங்கீகரிப்பதற்கு கனடியப் பிரதமர் தனது செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டுமென அம் மகஜரில் கனடியப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தையும் தமிழீழ அரசு நோக்கிய அரசையும் அங்கீகரிக்கும்படி கனடிய அரசினை தமிழ்மக்கள் அம் மகஜரில் வலியுறுத்திக் கேட்டிருந்தனர்.

தொடர்ச்சி: 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகாவின் தடு...

சமாதானத்திற்கு எதிரான குழுவுடனேயே போர் தொடுத்துள்ளதாக புதுவிளக்கம் கொடுத்துள்ள சந்திரிகா, விடுதலைப் புலிகள் சிறிலங்காவுக்கு எதிராக அல்ல தமிழர்களுக்கு எதிராகவே போர் நடாத்துவதாக அற்புதமான கண்டுபிடிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

மேலும் கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக சிறிலங்காப் படையினர்க்கு வழங்கப்படாத பல உபகரணங்களை தாம் மோதல் நிறுத்த காலத்தில் படையினர்க்கு கொடுத்ததாகவும் சமாதானம் பேசிய ஆறு மாதங்களிலும் படையினரை சிறிதளவும் நலிவுற விடவில்லை எனவும் கூறியுள்ளார். தாம் நடாத்தும் போர் சமாதானத்துக்கான ஒரு போர் என வர்ணித்து மகிழ்ந்துள்ள சந்திரிகா, வெளிநாடுகள் சில தமக்கு இராணுவத் தளபாட உபகரணங்களைத் தந்து உதவிடத் தயாராக உள்ளதாகவும் கூறியுள்ளார். சந்திரிகாவின் பேச்சுக்களைக் கூர்ந்து அவதானிப்பவர்கள், மனக்குழப்பமுற்று போரிடும் ஆற்றல் குறைந்து சோர்வுற்ற சிறிலங்காப் படையினர்க்குத் தென்பூட்டி உயிர் வாயு கொடுக்கும் பணியில் சந்திரிகா ஈடுபட்டுள்ளதாகவே தெரிவிக்கின்றனர்.

ஆயினும் விடுதலைப் புலிகளை எதிர்க்கும் சக்தி தனது படைகளுக்கு இல்லாததினால் அனைத்துலக நாடுகளின் உதவியைப் பெறக்கூடியவகையில் உண்மைக்கு மாறான சம்பவங்களைச் சந்திரிகா அனைத்துலக சமூகத்திடையே பரப்பிவிட முனைகிறார். இதற்குக் கொழும்புத்தமிழ்க் குழுக்கள் மட்டுமல்ல, வெளிநாட்டுத் தமிழர்களில் உள்ள சுயநலத்தை நடுநாயகமாகக் கொண்டவர்களும் துணைபோவதாகத் தெரிகிறது.

## தந்திரமலை மினி...

மேற்படி முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதை அடுத்து அங்கிருந்த இராணுவத்தினர் தப்பிஓடி உள்ளனர். இதனையடுத்து புலிகள், இம்முகாமை முற்றாக கைப்பற்றினர். பின் அங்கிருந்த ஆயுத தளபாடங்கள் அனைத்தும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. தாக்குதலின் முன் முகாமில் 75 படையினர் இருந்ததாகத் தெரியவருகின்றது. இவ்வெற்றிகரத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் எந்தவிதசேதமுமில்லை.

# புலிகளின் ஏவுகணையில் இந்திய உளவுத்துறை அக்கறை

இந்திய இராணுவ உளவுத்துறையிற் தென்கிழக்காசியா, இலங்கை ஆகிய விவகாரங்களைக் கவனிப்பதற்கென்று தனியாக ஒரு பிரிவு இருக்கிறது. கடந்த ஏப்ரல் மாதம் விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து இரு அவ்ரோ விமானங்களைச் சுட்டு வீழ்த்தியபின் இந்த இராணுவ உளவுத்துறையின் முழுக்கவனமும் இந்தத் தரையிலிருந்து விண்ணுக்கு ஏவப்படும் ஏவுகணைகள் எங்கிருந்து புலிகளுக்குக் கிடைத்தன என்பது பற்றி அறிவதிலேயே இருந்தனர். இவ்வாறு பிபிசி. தனது ஆய்வுரைக் கண்ணோட்டத்திற் தெரிவித்தது.

மேலும் இதில் இந்திய விமானப்படையும் மற்றும் சில துணை இராணுவப்படைகளும் அவ்ரோ விமானங்களைப் பயன்படுத்துகின்றன என்பது மட்டுமல்ல இதற்குக் காரணம், இந்த ஏவுகணைகள் ஒரு கெரில்லாப்படையினரால் இந்தத் துணைக் கண்டத்திற் பறக்கும் விமானத்தைத் தாக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதே முக்கிய காரணம்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து மட்டுமல்லாது இந்தியா, காஸ்மீரில் பிரிவினைவாத வன்முறை, வடகிழக்கு மாநிலங்களில் கிளர்ச்சியாளர் அபாயம், ஆந்திராவில் நக்ஸலைட் வன்முறை ஆகியவற்றை எதிர்நோக்குகிறது. இந்தக் கிளர்ச்சிக் குழுக்களோடு புலிகளுக்குச் சிறிது தொடர்பு உண்டு என்று உளவுத்துறைச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இந்தக் குழுக்களிற் சில ஏற்கனவே சர்வதேச ஆயுதச் சந்தைகளுடன் தொடர்பு கொண்டுள்ளன.

விடுதலைப் புலிகள் ஏவும் ஏவுகணைகள் அமெரிக்கத் தயாரிப்பாக இருக்கலாமென்றும் இவை ஆப்கானிஸ்தான் முஜாகுதின் குழுக்களிடம் இருந்து பெறப்பட்டிருக்கலாம் என்பதே உளவுத்துறையின் இப்போதைய கணிப்பாகும்.

உக்ரேனில் அதிகாரபூர்வமற்ற வழிகளிலிருந்தும் புலிகள் இவற்றைப் பெற்றிருக்கலாமென்றும் கூறப்படுகிறது. தொடக்கத்தில் வந்த செய்திகள் இரண்டு மாதங்களுக்கு முன் சட்டவிரோத ஆயுதங்கள் ஏற்றிய கப்பல் ஒன்று இலங்கை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உக்ரேன் அரசு இலங்கையை எச்சரித்ததாகக் கூறப்படுகின்றது.

இதுவரையில் இந்தியாவிலுள்ள குழுக்கள் எதுவும் தரையிலிருந்து விண்ணுக்குச் செலுத்தும் ஏவுகணைகளைப் பயன்படுத்தியதில்லை. ஆனால் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காஸ்மீரில் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே குத்பாரா மாவட்டத்தில் இந்திய இராணுவ ரோந்து அணி ரசியாவிற் செய்யப்பட்ட எஸ்.ஏ.7 (ஸ்ரல்) ஏவுகணையைக் கண்டுபிடித்தது. எஸ்.ஏ. ஏவுகணைகள் தரத்திலும் செயற்பாட்டிலும் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய ஏவுகணைகள் போன்றவையே. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இந்தியாவின் பாதுகாப்புச் சூழலில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இவற்றைக் கண்காணித்து வரவேண்டும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

காஸ்மீரில் இராணுவ மற்றும் ஏனைய விமானங்கள் பறக்கும்போது தக்க முன் எச்சரிக்கையுடன் பறக்கின்றன. இவை இரவு நேரத்திற் பறப்பதில்லை.

பறக்கும்போது குறைந்தது 5000 அடி உயரத்தில் பறக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

# புலனாய்வுத் தலைவர் மீது சந்திரிகா பாய்ச்சல்

பாதுகாப்புச் சபைக் கூட்டம் ஒன்றிற் தேசியப் புலனாய்வுப் பணியகத் தலைவர் சேர்மி விஜயஆரியாவைச் சிறிலங்காச் சனாதிபதி கடிந்து பேசியுள்ளார். விடுதலைப் புலிகளின் தாக்குதல் தொடர்பாகப் புலனாய்வு நடவடிக்கைகளைச் சரியான முறையிற் கையாளவில்லை எனவும் தவறான தகவல்களைப் படையினருக்கு வழங்கியுள்ளார் எனவும் சந்திரிகா குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை இவரைச் சந்திரிகா பதவிநீக்கம் செய்யவுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசியப் புலனாய்வுப் பணியகத்தில் அண்மைக்காலச் செயற்பாடுகளிற் சந்திரிகா அதிருப்தியுற்றுள்ளார்.

சேர்மி விஜயஆரியா நான்கு சனாபதிகளின் கீழ்த் தேசியப் புலனாய்வுப் பணியகத்தலைவராக இருந்தவர். இவர் இம்மாதம் யூன் மாதத்துடன் ஓய்வு பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பெரும் படை எடுப்பிற்காக...

அடுத்து இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னியின் எல்லைப்புறப் பகுதியிலுள்ள மக்கள் பதட்டநிலை கொண்டுள்ளனர். நாம்பன்குளம், ஓமந்தை, இரம்பைக்குளம், சேமமடு, இலக்குவைத்தகுளம், கொண்டபாறைக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் தமது வீடுகள், கடைகளில் உள்ள பொருட்களை எடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. புளியங்குளம், கனகராயன்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் இரவு வேளைகளில் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி நின்று வருகின்றனர். அண்மையில் தாண்டிக்குளம் ஊடாக வந்த பயணி ஒருவர், தாண்டிக்குள தடைநிலையத்தில் சிறீலங்காக் காவல்துறையில் உள்ள தமிழ்ப்பெண் ஒருவர், இராணுவத்தின் இவ்ஏற்பாடு குறித்து அபாய அறிவிப்பு வெளியிட்டதாகவும் இதனைத் தொடர்ந்து அந்தப் பெண்காவல்துறை ஊழியருடன் இருந்த இராணுவத்தினர் அவருடன் கடும் வாக்குவாதப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. வவுனியாப் பகுதியில் படையினரின் சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

## தட்டுவன் கொட்டியில்...

வெளியிட்ட சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள், ஆனையிறவு இராணுவ முகாமின் தென்பகுதி முன்னணிக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்கியதாகவும் இத்தாக்குதலானது சுமார் 45 நிமிடங்கள் நீடித்ததாகவும் தெரிவித்ததுடன், இம்மோதலின் போது ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 14 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தன.

# அனைத்துலகெங்கும்...

## கனடாவில்...

ஊர்வல முடிவில், ஆசிய பசுபிக் விவகார அரச செயலர் மதிப்புக்குரிய ரேமண்ட் சான் (Hon. Raymond Chan, Secretary of state Asia Pacific), பதில் சபாநாயகர் மதிப்பிற்குரிய டேவிட் கில்கோர் (Hon. David Kilgour, Deputy Speaker), மார்லின் கட்டர்ரேல் (Marlene Catterall), மார்க் கார்ப் (Marc Harb), ஜோன் பில்பொட் (John Philpot) ஆகியோருடன் வடஅமெரிக்க யூரிகள் சங்க செயலரும் உரை நிகழ்த்தினர். பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஊர்வலத்தின் பிரமாண்டமான நீளத்தையும் உணர்ச்சியை வெளிப்படுத்திய ஆவேசத்தன்மையையும் கண்டு, தாம் தமிழீழமக்கள் அனுபவிக்கும் துன்பத்தின் தன்மையையும், அது கனடியத் தமிழரினால் மிக ஒற்றுமை, ஒருமைப்பாட்டுடன் வெளியுலகுக்கு எடுத்துக் காட்டப்படும் பாங்கினையும் உணரக்கூடியதாக இருப்பதாகக் கூறினர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையில் தீர்வு ஒன்று உருவாவதற்கான பேச்சுவார்த்தை ஒன்று ஏற்படுவதற்கு கனடிய அரசை உதவுமாறு தாம் வலியுறுத்தப் போவதாக அவர்கள் மக்களுக்கு வாக்குறுதியளித்தனர்.

# தமிழினத்தின் அடிப்படை...

அவர் படம் வர உதவுமேதவிர இனப் பிரச்சினையைத் தீர்க்க அது உதவாது. சொல்லப் போனால் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கவே அது உதவும்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் மட்டுமல்ல, தமிழ்மக்களும் சமாதானத்தை எதிர்க்கவில்லை. மாறாக சமாதானத்தை வேறுயாரையும் விட மனதார விரும்புகிறார்கள். ஆனால் அந்தச் சமாதானம் நீதியானதாக (Just Peace) இருக்கவேண்டும். நியாயமானதாக இருக்க வேண்டும். கௌரவத்துடன் கூடிய சமாதானமாக (Peace with honour) இருக்கவேண்டும். சுடுகாட்டில் நிலவும் சமாதான மாக அந்தச் சமாதானம் இருக்கக் கூடாது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் நீதியான, நியாயமான, கௌரவமான சமாதானத்துக்கான வழிவகைகளை, நிபந்தனைகளல்ல, ஒரு முறைக்கு பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீலங்கா அரசு பொருளாதாரத் தடை, கடல் வலயத் தடை, போக்குவரத்துத் தடை இவற்றை நீக்கி சமாதானத்துக்கான ஒரு நிரந்தர போர் நிறுத்த உடன்பாட்டின் மூலமாக சமாதானத் துக்கான சூழ்நிலையை முதலில் உருவாக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களது தேசிய அந்தஸ்து, தேசிய இனங்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமையும், வடக்கும்-கிழக்கும் அவர்களது தாயகபூமி என்ற கோட்பாடும் அங்கீகரிக்கப்பட்டு தமிழ் ஈழத்துக்கு மாற்றாக ஒரு இணைப்பாட்சி அரசி யல் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு முன்வைக்க வேண்டும்.

இதுவே இனப்பிரச்சினையை சமாதான வழிகளில், அரசியல் ரீதியாகத் தீர்த்து வைப்பதற்கு தலைவர் பிரபாகரன் முன் வைத்திருக்கும் யோசனைகளாகும். இதுவே தமிழ் மக்களது அபிலாசைகளுமாகும்.

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் முன்னைய ஆட்சியாளர்களால் மறுக்கப்பட்டதே இன்றைய போருக்கான காரணியாகும்.

சனாதிபதி சந்திரிகாவும் முன்னைய ஆட்சி யாளர்களைப் போல தமிழ் இனத்தின் அழிப்படை உரிமைகளை மறுத்து விட்டதே போர் தொடங்குவதற்கான காரணியாகும். எனவே, சமாதானத்தின் எதிரி ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளுக்குப் போராடும் தலைவர் பிரபாகரன் அல்ல. மாறாக அந்த அடிப்படை உரிமைகளை மறுக்கும் சனாதிபதி சந்திரிகாவே உண்மையான எதிரியாவார்.

# அனைத்துலகெங்கும்...

## ஜேர்மனியில்...

முறைகளையும் கூறி தமிழீழ மண்ணில் நீதி நிலவ வெளிநாடுகள் உதவவேண்டும் எனக் கோரிய வார்த்தைகள் யேர்மன் மொழியில் ஒலிபெருக்கி மூலம் உருக்கமான வேண்டுகோளாக விடுத்தபடியே ஊர்வலம் நடந்தது. அழிந்துகொண்டிருக்கும் அந்தத் தமிழீழ மக்களைக் காப்பாற்ற உதவும்படி கோரி யேர்மன் மொழியில் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரம் நகரமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. ஏற்கனவே சேகரிக்கப்பட்ட, வெளிநாடுகளை உதவிகோரி கையெழுத்திடப்பட்ட படிவங்கள் பிரதிகள் எடுக்கப்பட்டு அரசுத்தலைவர், அரசியற் கட்சிகள், வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் ஆகியவற்றிக்கு கொடுக்கப்பட்டது.

முடிவில் உணர்வோடு பங்குபற்றி தமிழீழத்தில் பற்றுவைத்து ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாம் ஈழப்போரின் பின்னால்...

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## காலத்தை இழுத்தடிக்கும் தந்திரம்

இராணுவத் தீர்வை நாடும் தனது சதி நோக்கத்தை நிறைவு செய்வதற்கான மூலத் தந்திரோபாயமாக, சந்திரிகாவின் அரசு, காலத்தை இழுத்தடிப்பதைக் கையாண்டது. கால தாமதம் என்ற ஆயுதம் மூலம் தனது சதி நோக்கத்தை நிறைவேற்றத் திட்டமிட்டது.

மக்களின் அன்றாடப்பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் பேச்சுவார்த்தையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த புலிகள் சம்மதிக்கவே மாட்டார்கள் என்பதில்

**சந்திரிகா அம்மையாரின் சுய ரூபத்தை அம்பலப்படுத்துவதற்காகவும், அமைதியை முகத்திற் காட்டியபோதும் போரையே அகத்தில் வைத்திருக்கும் ஒரு பேரினவாதியே சந்திரிகா என்பதை இனங்காட்டவும், சமாதானத்தை வெளியில் பேசியபோதும் யுத்தத்திற்காக உள்ளுக்குள் திட்டந்தீட்டிய ஒரு வழமையான சிங்களத்தலைவரே சந்திரிகா என்பதை வெளிப்படுத்தவும், முள்ளை முள்ளால் எடுப்பதுபோல மூன்றாவது ஈழப்போரை தொடக்குவது புலிகளுக்குஅத்தியாவசியமாகிவிட்டது.**

அரசுக்கு எந்தவித ஐயப்பாடுமே இருக்கவில்லை. அத்தோடு, மீண்டும் தான் போரைப் பிரகடனப்படுத்துவதற்கு இடையில்- அமைதி நிலவுகின்ற இந்தக் கொஞ்சக் காலத்துக்குள்ளே தமிழ் மக்களுக்குச் சொற்ப சலுகைகள் தன்னும் கிடைத்து விடுவதையும் அரசு விரும்பவில்லை. மேலும், மீண்டும் போர் துவங்கும் நோக்கம் இருக்கும்போது- மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக- தனது படைகளின் போரியல் தந்திரங்களை கைவிடவும் அது தயாராக இல்லை. இவை முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

பாரிசில் நடைபெற்ற சிறிலங்காவிற்கு உதவும் நாடுகளின் மாநாட்டின் மூலமும் (ஏப்ரில் 28) 'சார்க்' அமைப்பு மாநாட்டின் மூலமும் (மே 02) மீண்டும் போரைத் தொடங்குவதற்கான உகந்த நிலையை சர்வதேச ஆதரவுடன் உருவாக்கும்வரை- அன்றாடப் பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட மேற்சொன்ன விடயங்களை தனக்குச் சாதகமாக்குவதற்காகவே, அரசாங்கம் காலம் கடத்தும் வழிமுறையினைக் கையாண்டது எனலாம்.

இதே வேளையில்-அன்றாடப் பிரச்சினைகள் பற்றிய தமது கோரிக்கையை தற்செயலாகப் புலிகள் விட்டுக்கொடுக்க முன்வந்து அரசியற் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய களநிலை உருவாகி விடுமானால்-

அன்றாடப் பிரச்சினைகளில் காலத்தை இழுத்தடிக்கும் தந்திரோபாயம் செயலிழந்து போனால் கூட, வெளிநாட்டு

## சர்வதேச ஆதரவு

மாநாடுகளில் பயன்படுத்தவென அவர் மாற்று வழிகளையும் வைத்துக் கொண்டுதானிருந்தார்.

அன்றாடப்பிரச்சினை பற்றிய புலிகளின் அழுங்குப்பிடியும், அதைத் தட்டிக்கழிக்கும் அரசின் கால இழுத்தடிப்புமாக, ஒரு இழுபறியான சூழ்நிலை நிலவும் போது அவ்விரு மாநாடுகளும் நடைபெறுமானால்-

புலிகளின் மீது அவப்பெயரை உண்டுபண்ணி, தன்மீது நற்பெயரை ஏற்படுத்தும் விதமாக தனது செயற்பாடுகள் நியாயம் கற்பிக்கும் களங்களாக அந்த மாநாட்டு மண்டபங்களைப்பயன்படுத்தவே சந்திரிகா தீர்மானித்திருந்தார். அவர் ஏற்கனவே செவ்விகளிலும் உரைகளிலும் குறிப்பிட்டது போல, 'புலிகளுக்கு சமாதானத்தில் நாட்டமில்லை. எமது அரசு எவ்வளவோ சலுகைகளை வழங்கிய போதும், பேச்சுவார்த்தைகளுக்கு நிபந்தனைகளைப்போட்டு சமாதான முயற்சிக்கு அவர்கள் தடையாக நிற்கின்றார்கள். ஒவ்வொரு சுற்றுச்சந்திப்பின் போதும் ஒவ்வொரு நிபந்தனையை விதிக்கிறார்கள்.

அந்த நிபந்தனைகள் மிகவும் சிக்கலானவையாக இருக்கின்றன. நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பவையாக உள்ளன. அரசியற் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் அவர்களுக்குச் சம்மதமில்லை. அரசியற் பேச்சுக்களை ஆரம்பித்தாலே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். இவ்வாறாக அமைதி-வழியில் சமாதானம் காணும் எனது முயற்சிக்கு இடையூறு தந்து புலிகள் தடையாக உள்ளார்கள். எனவே அவர்களைப் புறந்தள்ளிவிட்டு பிரச்சினைக்குத்தீர்வு காண நான் நிர்ப்பந்திக்கப்படலாம்.' என்றவாறாக தன்னை நியாயவாதியாகவும் புலிகளைக் குற்றவாளிகளாகவும் காட்டித் தனது இராணுவத்தீர்வு நோக்கிய சிந்தனையை மறைமுகமாக வெளிப்படுத்தி அனைத்துலக ஆதரவை தன்பக்கம் ஈர்த்துக்கொள்ளவே அவர் உத்தேசித்திருந்தார்.

இவ்வாறான ஒரு இராஜதந்திர நகர்வினைக் கையாண்டு சர்வதேச நாடுகளின் உதவிகளையும் தார்மீக ஆதரவையும் நிறைந்த அளவில் பெற்றுக்கொண்டபின்னர் நேரடியாகவே யுத்தத்தைப் பிரகடனப்படுத்தும் கபட உள்நோக்கத்தையே அவர் கொண்டிருந்தார். அந்த யுத்தத்துக்கு சமாதானத்துக்கான போர் எனப்பெயர் சூட்டவும் காத்திருந்தார். இவ்வாறாக இல்லாமல் எதிர்பாராதவிதமாக அன்றாடப்பிரச்சனைகள் பற்றிய தமது இறுக்கத்தைத் தளர்த்தி புலிகள் இயக்கம் திடீரென அரசியல் பேச்சுக்களுக்குச் சம்மதம் தெரிவிக்குமானால் அப்போது தோன்றக்கூடிய ஒரு பாரதூரமான சூழ்நிலையையும் அனைத்துலக மட்டத்தில்



தனக்குச் சார்பாக மாற்றியெடுக்க சந்திரிகா அரசு ஒரு உத்தியை வைத்துக்கொண்டுதானிருந்தது.

**சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, எந்த விலையையும் கொடுத்து சமாதானம் காணவேண்டும் என்றில்லை. அமைதி வழியில் தீர்வு காண நாம் எல்லா வழியிலும் முயற்சி செய்தோம். இயலக்கூடிய அளவுக்கு விட்டுக்கொடுத்தோம். ஆனால் முடியவில்லை. அதனால் நாம் இராணுவரீதியில் சமாதானத்தைக் காண நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.**

அரசியற் பேச்சுக்களை ஆரம்பித்தால், தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தனது தீர்வுத் திட்டத்தை உடனடியாக வெளியிட வேண்டும். ஆனால், தான் தயாரிக்கவுள்ள தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யாததாகவே இருக்கப்போகின்றது. அதனால், புலிகள் இயக்கம் அதனை நிராகரித்துத் தூக்கியெறியும் என்பதில் அவருக்கு எவ்வித ஐயப்பாடுமே இல்லை.

உப்புச்சப்பற்ற அந்தத் தீர்வுத்திட்டத்தினால் பேச்சுவார்த்தைகளில் குழப்பமேற்படும் 'இதற்குமேல் எதுவும் தரமுடியாது' என்னும்போது, 'பிரயோசனமற்ற வேலை' என்று புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளை முறித்துவிடலாம். மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்து விலகலாம். மீண்டும் போர் வெடிப்பது தவிர்க்க முடியாததாகலாம். இவ்வாறாக, சமாதானப் பேச்சுக்கள் முறிந்து போர் தொடங்கிவிடும் ஒரு சூழ்நிலையில் அவ்விரு வெளிநாட்டு மகாநாடுகளும் நடைபெறுமானால் அந்த மாநாட்டு மண்டபங்களில் ஏற்கெனவே செவ்விகளிலும் உரைகளிலும் தான்

தெரிவித்திருப்பதுபோல, பின்வருமாறு கூறச் சந்திரிகா திட்டமிட்டிருந்தார்.

'புலிகள் இயக்கத்திற்கு நாம் அதிக சலுகைகளை ஏற்கெனவே கொடுத்துவிட்டோம். எமது தீர்வுத் திட்டத்தில் தமிழர்களுக்கு போதுமான அளவு உரிமைகள் வழங்கப் பட்டுள்ளன. ஆனால், அவர்கள் திருப்திப்படு கிறார்களில்லை. தமிழர்களுக்காக நாம் ஏனைய மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாது. சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, எந்த விலையையும் கொடுத்து சமாதானம் காணவேண்டும் என்றில்லை. அமைதி வழியில்த் தீர்வு காண நாம் எல்லா வழியிலும் முயற்சி செய்தோம். இயலக்கூடிய அளவுக்கு விட்டுக்கொடுத்தோம். ஆனால் முடியவில்லை. அதனால் நாம் இராணுவ ரீதியில் சமாதானத்தைக் காண

## புலிகள் இயக்கத்தின் காலக்கெடு

நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இப்போது நடப்பது சமாதானத்துக்கான போர். புலிகள் ஒரு ஆயுதக்குழுவினர், ஈவிரக்கமற்ற, கருணையற்ற ஒரு பயங்கரவாத இயக்கம், எனது நாட்டின் பயங்கரவாதத்தை ஒழித்து, நிரந்தரமான சமாதானத்தை நான் ஏற்படுத்துவதற்காக உங்கள் எல்லா நாடுகளினதும் பேராதரவையும், பேருதவியையும் வேண்டி நிற்கின்றேன்.

இவ்விதமாக மிகவும் சூட்சுமமாகத் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த நாசகாரத்திட்டத்தை முறியடிப்பதற்காகத்தான் புலிகள் இயக்கம் காலக்கெடு விதிக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளானது. அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்க்காமல் இழுத்தடிப்பதன் மூலமும் அரசியற் பிரச்சனைகளைப் பேசி விட்டு அவற்றைக் குழப்பியடிப்பதன் மூலமும், என ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட-இருவேறு வழிமுறைகளினூடாகப் பேரினவாத யுத்தத்தை நோக்கி நுட்பமாக நகர்த்திச் செல்லப்பட்ட இச் சதி நடவடிக்கையை முடியடித்து அம்பலப்படுத்துவதற்காகப் பேச்சுவார்த்தையிலிருந்தும், மோதற் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் விலகிக்கொள்ள வேண்டியது புலிகளுக்குத் தவிர்க்கமுடியாததாக இருந்தது.

சந்திரிகா அம்மையாரின் சுயரூபத்தை அம்பலப்படுத்துவதற்காகவும், அமைதியை முகத்திற் காட்டியபோதும் போரையே அகத்தில் வைத்திருக்கும் ஒரு பேரினவாதியே சந்திரிகா என்பதை இனங்காட்டவும், சமாதானத்தை வெளியில் பேசியபோதும் யுத்தத்திற்காக உள்ளுக்குள் திட்டந்தீட்டிய ஒரு வழமையான சிங்களத் தலைவரே சந்திரிகா என்பதை வெளிப்படுத்தவும், முள்ளை முள்ளால் எடுப்பதுபோல மூன்றாவது ஈழப்போரைத் தொடக்குவது புலிகளுக்கு அத்தியாவசியமாகிவிட்டது.

மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்காமல் காலத்தைக் கடத்திக்கொண்டு வெளிநாட்டு உதவிகளைப் பெற்று தன் படைகளைப் பலப்படுத்திக்கொண்டு அரசாங்கமானது ஒரு பெரும் போருக்குத் தன்னை தயார் படுத்திக்கொண்டிருந்தபோது காலக்கெடு விதிப்பதையும், அதற்கமையச் செயற்படுவதையும் தவிர, விடுதலைப்புலிகளுக்கு மாற்று வழி எதுவுமே இருக்கவில்லை. இப்போது பேச்சுக்களிலிருந்து விலகிப் போரை ஆரம்பித்தமைக்காக வரிந்து கட்டிக்கொண்டு நின்று மாறிமாறிப் புலிகள் இயக்கத்தைக் கண்டிக்கும் மேற்குலகமானது, பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும் போது சிங்கள அரசாங்கம் வெளிநாடுகளில்த் தனது படைகளுக்காக வானூர்திகளையும், கடலூர்திகளையும் வாங்க ஆட்களை அனுப்பியபோது கண்டிக்காமல் இருந்தது ஏன்?

துன்பத்துக்குள் துவண்டு போய்க் கிடக்கும் எமது மக்களின் அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்க்காமல் இழுத்தடித்தபோது தட்டிக்கேட்காதது ஏன்?, அதனைச் செய்யுமாறு சந்திரிகா அம்மையாரை நிர்ப்பந்திக்காதது ஏன்?

சர்வதேசத்தின் இந்த பாரபட்சங் காட்டும் பக்க சார்பான தன்மை கவலைக்குரியதும், கண்டனத்துக்குரியதுமாகும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தழும்புகள்

செல்லக்கிளி அம்மானின் நினைவு தூபி தாண்டி பலாலிவீதியில்.

வீதியில் வழக்கத்திற்கு மாறாக அதிக சன நடமாட்டம் பரபரப்போடு கூடிய ஏதோ ஒன்றிற்கான எதிர்பார்ப்போடு அவர்கள் அலைந்துகொண்டிருப்பதாகத் தெரிந்தது. முகங்களில் ஏதோ ஒரு ஒளியோடு. வாழ்வின் சந்தோசமான கணங்கள் இவைதான் என்ற பாவனையில் வீதியில் கூட்டம் கூட்டமாக சிரித்துக் கதைத்தவாறு மக்கள். என்ன இன்று! எனது சிந்தனையைத் தன்து கேள்விகளால் துளைத்துக் கொண்டிருந்தான், எனது நான்கு வயது மகன். கான்ரிலைக் கைகளால் இறுகப் பற்றியபடி. வீதியில் போவோர் வரு வோர் பற்றி எல்லாம் கேள்விகள். கேள்விகளுக்குப் பதில் சொல்வதா! இல்லை ஏதோ ஒரு மயக்கத்தில் மிதக்கும் சனங்களோடு மோதாது சைக்கிள் ஓடுவதா! கேள்வி கேட்டு அவன் சலிப்படைந்ததில்லை. பதில் சொல்லித்தான் நான் அலுத்துப் போனதுண்டு. சனங்கள் என்றால் அவனுக்கு வலு சந்தோசம். ஒவ்வொருத்தர் பற்றியும் ஒவ்வொன்று பற்றியும் ஆயிரம் சந்தேகங்கள் அவனுக்கு. அத்தனையும் கேள்விகளாக மாறும். அப்பா ஏன் எல்லாரும் ஒரே பக்கமாகப் போகினம். நான் கவனித்தும் சிந்தனையில் எடுக்காததை அவன் கவனித்து விட்டான். ஓம், சனம் எல்லாம் பரமேஸ்வராச்சந்திப் பக்கமாகத்தான் போகுதுகள். அங்கயிருந்து யாரும் வருவதாகத் தெரியவில்லை. சந்தியிலும் சரியான சனம் நிற்பது தெரிகிறது. என்ன நடந்தது இவர்களுக்கு. இடிச்ச விழுத்திக் கொண்டு. குழந்தையளைக் கூடக் கவனிக்காமல். இன்டைக்கு என்ன..! அண்ணை வழிவிடுங்கோ மூன்று மணியாகப் போகுது யாரோ ஒருவர் இடித்து விழுத்தி விடுபவர் போல கூறிக்கொண்டே ஓட. மூன்று மணிக்கு என்ன!.. அட நான்தான் மறந்துபோனன். அதற்காகத்தானா? இத்தனை பேருக்கும் இவ்வளவு அவசரம். நேரம் பார்க்கிறேன் 2.56 காலையில் வந்தவர்கள் இப்போது போகப் போகிறார்கள் அதற்காகவா இத்தனை பேரும். காலையில் அவர்கள் வந்திறங்கியபோது நடந்த வைகளை நேரில் கண்டவர்கள் கூறியது மீண்டும் நினைவில் வந்து கொஞ்சம் வலித்தது. இவ்வளவு சனத்தையும் விலத்தி அங்கால போக ஏலுமா! நான் ரவுணுக்கு போக வேணும், தயவு செய்து ஒருக்கா வழி விட்டுத்தாரீங்களா? சைக்கிளை உருட்டியவாறு வழியை மறித்தபடி மேலே பார்த்த வாறு நிற்பவர்களிடம் கேட்கிறேன். எப்படியும் இந்த இடத்தைவிட்டு போய்விடவேண்டும் என்ற நினைப்புடன். ஆனால் யாரும் அசைவதாக இல்லை. சிலருக்கு எனது வேண்டுதல் எரிச்சலைக் கூடத் தருகிறது.

கூட்டத்தில் நின்ற வயதான ஒருவர் தம்பி இந்த சைக்கிளை ஒரு பக்கமாக வைச்சக்கொண்டு நில்லு. இப்ப அங்கால போக ஏலாது. போனால் இடிச்சத்தான் விழுத்துங்கள். குழந்தைப்பிள்ளையையும் வைச்சிருக்கிறாய்.

அவர் சொல்வதும் நியாயம்தான். குழந்தைக்கும் அதைப்பார்க்க ஆசையாக இருக்கும் எங்கயிருந்தோ எல்லாம் சனம் வந்திருக்கு நீ றோட்டில நின்று குழந்தைக்கு காட்டன் தம்பி. மகனுக்கும் அதைப்பார்க்க ஆசையிருக்குமா! இருக்கலாம் குழந்தைதானே. ஓரமாக சைக்கிளை நிறுத்தி நானும் நிற்கிறேன். சிறுவர்கள், இளைஞர்கள், வயதானவர்கள், பெண்கள் என எல்லோரும் முண்டியடித்தபடி வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்க.

என்னைப்போல் வீதியால் வந்து கூட்டத்துக்குள் அகப்பட்டவர்களும் தங்கள். தங்கள் வேலைகள் தடைப்பட்ட எரிச்சலில் முகத்தைச் சுளித்தவாறு ஆங்காங்கு. இங்க இவ்வளவு சனமெண்டால் வளாக மைதானத்தில். ஒரு முறையாவது பார்த்துவிடவேண்டும் என்ற அவசரத்தில் எத்தனை பேர் முண்டியடிப்பார்கள். நாங்கள் நின்ற வீதியில் வலதுபக்கமாக அம்பலவாணர் ஒழுங்கைக்குள்ளால் அது மைதானத்தை அடையும் என நினைத்துச் சிலர் ஓடி ஏமாற்றத்தோடு திரும்பி வந்தனர். எல்லோரின் வாய்களும் அதைப்பற்றியும் அவர்களைப்பற்றியுமே பல்வேறு ஊகங்களையும் உண்மைகளையும் பேசிக் கொண்டிருந்தன.

எனதுநெஞ்சக்குள் என்னவென இனங்காணாத உணர்வொன்று. எரிச்சலா. கோபமா. துக்கமா. எதுவெனப் புரிந்துகொள்ள முடியாத உணர்வு. மகனுக்கு அந்தக் கூட்டம் சிரிப்பையும் சந்தோசத்தையும் ஏற்படுத்த. கண்கள் மின்ன சிரித்தவாறு என் கழுத்தைக் கட்டிப்பிடித்தவாறு துள்ளிக்கொண்டிருந்தான். அவனுக்குச் சந்தோசம் வந்தால் தூக்கி வைத்திருக்கும் போதே துள்ளத் தொடங்கிவிடுவான், ஏதோ நினைத்தவன் போல அமைதியானவன்.

'அப்பா எங்களிட்ட பூ இல்லையே'

'ஏனப்பன் பூ'

'மாமாக்களுக்குப் போட்டுக்கும்பிடத்தான்'

'ம். சனங்கள் வீதியில் கூடியிருப்பதைப் பார்த்து மாவீரனின் வித்துடல் தாங்கிய ஊர்தி வரப்போகுது என நினைத்துவிட்டான்.

'இல்லை செந்தூ இப்ப மாமாக்கள் வரேல்ல'

'அப்பா பகல்ல அம்புலி மாமா தெரியுமா?'

'சரியான விசர் இவைக்கு என்னப்பா' மகன் சொல்வதும் சனங்கள் நின்ற நிலையும் சிரிப்பைத்தான் தந்தது. சிலர் வீட்டுக் கூரைகளிலும், மதில்களிலும், மரங்களிலும் கூட ஏறி நின்றனர்.

நாங்கள் நின்ற வீதியின் அருகிலுள்ள பெரிய மரம் ஒன்றில் ஏற முயன்ற இளைஞர் ஒருவர் விழ. காலில் பலமான அடி. ரத்தம் வழிய மீண்டும் ஏறமுயன்றார்.

'மானம் இல்லாததுகள்' பக்கத்தில் நின்ற ஒருவரின் முணுமுணுப்பு. அவரை நிமிர்ந்து பார்த்தேன். கண்களில் ஏதோ ஒரு சோகம். அவ்விடத்தில் நிற்க விருப்பம் இல்லாதவர்போல அந்தரப்பட்டவாறு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தார். இலேசாகச் சிரிக்கமுயன்ற என்னையும் கவனியாதவர் போல.



சிறுகதை

அவருள்ளும் ஏதோ ஒரு உணர்வொன்று பொங்கிக்கொண்டிருந்ததோ. என்னவோ. காலையில் வந்திறங்கியபோது அவர்கள் வழங்கிய இனிப்புப் பரிசுகள் பற்றியும் அவர்களின் கைகளை. கால்களை. தொடக்கிடைத்த சந்தர்ப்பங்கள் பற்றியும் கூட அருகில் பேச்சுக்கள்.

கிடைத்தவர்கள் கூற. கிடைக்காதவர்கள் ஏங்க. வந்தவர்கள் தேவ தூதர்களோ என்று கூட எனக்குள் சந்தேகம். சரியான மறதிக்காரச் சனம் காலையில் நடந்தவைகளை எப்படி ஞாபகம் வைச்சிருந்து கதைக்கிதுகளோ.

'இந்தமுறை எப்பிடியும் சரிவரும்' யாரோ ஒருவர்.

ஓமோம் முந்தின ஆக்கள் மாதிரி இல்லைத்தான் நம்பலாம், இன்னொருவர் என்ன நம்பிக்கை அதுவும் நாளைய உயிர்வாழ்வுக்கே நம்பிக்கையில்லாத இந்த மண்ணிலிருந்து கொண்டு.

சரியாக மூன்று மணி. வானத்தில் வடக்குப்பக்கமாக இரைச்சல் கேக்கத் தொடங்க வீதியில் நின்றவர்களின் பாதங்கள் நிலத்திலிருந்து துள்ளத் தொடங்கின. கைகள் அசைப்பதற்கு ஆயத்தமாகின. ஆனாலும். என்னவென்று யாருக்கும் அதைத் தெரியவில்லை. வெறுமனே காற்றாடியின் சத்தமும் இரைச்சலுமே கேட்டது. கொஞ்சம் கொஞ்சமாக சத்தம் அதிகமாகிப் பின்பு அதுவும் இல்லாமல் போகக் கூடியிருந்தவர்களின் முகங்களில் ஏமாற்றம். 'அட அவன் மற்றப்பக்கத்தால் போயிட்டான்' பிறவுண் றோட்டில் நிண்டிருந்தால் வடிவாகப் பாத்திருக்கலாம்'



சிலர் விரக்தியோடு கூற வேறு சிலர் பிறவுண் வீதிக்குப் போக வழிதேடினர். 'போகேக்க இந்தப் பக்கமாகத்தான் வருவான்'

காலமை. என்ன வடிவா பாத்தனாங்கள்'

இவர்கள் அதைப் பார்த்ததே இல்லையோ எனச்சந்தேகம் வந்தது. இந்த மண்ணில இருந்து கொண்டு அதை பார்க்காமல் என்ன! அது என்ன இன்னும் எத்தனை விதம்விதமான பெயர்களில பார்த்திருக்கிறம். யுத்தம் கஸ்ரங்களைத் தந்தாலும் எத்தனையோ வித்தியாசமான வாழ்வனுபவங்களையும் எங்களுக்குத் தந்திருக்கிறது.

இந்தக் காலத்திற்கே உரித்தான நிகழ்வுகள். எங்களுக்கு முன் வாழ்ந்தவர்களோ இனி வாழப்போகிறவர்களோ உணர முடியாத சம்பவங்கள்.

சுதந்திரத்திற்கான ஒரு போர். அதற்கான உன்னதமான அர்ப்பணிப்புக்கள். இருபது வருடங்களிற்கு முன் வாழ்ந்த தமிழன் எண்ணிக்கூடப் பார்த்திருக்காதவை.

சர்வதேசங்களில் பெருமையோடு பேசப்படும் ஒரு இனமாக தமிழினம் மாறினாலும் அவர்களிலேயே ஒரு பகுதியினருக்கு தமது இன்றைய நிலையோ. நடக்கும் சுதந்திரப் போருக்கான அர்ப்பணிப்புகளையோ புரிந்து கொள்ள முடியாதது. வேதனையானது.

இரு நிமிடங்களின் பின் மீண்டும் அதன் சடசட ஒலி. நீண்ட நாள் காணாத நண்பன் ஒருவனைக் காணப் போவது போல் முகங்கள் புன்னகையால் மலர்ந்தன. மெல்ல மெல்ல மேலெழுந்து தெரியத் தொடங்கச் சிலர் கைகளை அசைத்தவாறு கூச்சலிடத் தொடங்கினர். மேலெழுந்து வடக்குப்பக்கமாக விரையத் தொடங்கியது. இவர்களின் ஆனந்தக் கூச்சல் கேட்டோ என்னவோ அப்பிரதேசத்தை வட்டமிடத்தொடங்க. ஆனந்தத் தாங்கமுடியாத சிலர் அங்குமிங்கும் ஓடியவாறு கையசைக்க. சிலர் வெறுமனே வேடிக்கை பார்க்க. வேறு சிலர் முகங்களில் ஒளியற்று இறுகிப்போய். மகனின் கரங்கள் முன்பைவிட அதிகமாகக் கழுத்தை இறுக்க. 'என்னப்பன் '. முகம் சிவந்து கண்களில் இதோ என்பது போல வழியத் தயாராகக் கண்ணீர், உதடுகளின் துடிப்பை அடக்க வாயை இறுக மூடியவாறு.

இவன் அதுக்கு பயப்பிடுகிறானா.

'செந்தூஅது ஒண்டும் செய்யாது குஞ்சு'

'அப்பா நீங்கள் அதைப் பாக்காதேங்கோ' என் குரலையும் மீறி அவன் குரல் ஒலிக்கிறது.



அருகில் நின்றவர்களின் பார்வை எங்கள்மேல் படிய.

'தம்பி அது ஒண்டும் செய்யாது கையைத் தூக்கிக் காட்டுங்கோ பாப்பம்' அருகில் நின்ற ஒருவர் சந்தேகத்தோடு கூற.

அவன் விம்மி விம்மி அழ. என்னால் எது சொல் லியும் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அம்மா. அம்மா. எனக் கைகளை உதறியவாறு மிகப் பரிதாபமாக எனது மகன்.

அதன் சத்தத்தைக் கூடக் கேட்க விரும்பாதவன் போல இரு காதுகளையும் பொத்தியவாறு என் தோளில் தலையைப் புதைத்து அம்மா. அம்மா. என என் பிள்ளை சத்தமிட்டு அழ.

ஏன் நான் இந்த நேரம் இங்க வந்தன். எதை அவன் மறந்துவிட வேண்டும் என்று நான் நினைக்கிறேனோ, அதை அவன் அடிப்படையிலிருந்தே ஞாபகம் வைச்சிருக்கிறான்.

அவன் சிரிப்பது விளையாடுவதெல்லாம் அந்த நிகழ்வைத் தற்காலிகமாக மறந்த சில நிமிடங்களில்தான்.

அந்த ஞாபகங்கள் அவனை விட்டு என்றுமே போகாது.

அவனுடைய அன்பான அம்மா. எந்தக் குழந்தையும் ஆசையோடு நேசிக்கும் அம்மா.

அவன்ரை கண்ணுக்கு முன்னால துடிச்ச.

இத்தனை பேரும் சந்தோசக் கூச்சலுடன் பார்க்கும் இதுதானே அவன்ர அம்மாவை அவனுடைய கண்ணுக்கு முன்னால் சுட்டு. என்ரை பிள்ளையின்ரை உயிரான அம்மா. அவனைச் சிரிக்கச் செய்து தானும் சிரித்துக் கடைசி வினாடிவரை கூட அவனுடன் உயிரும் உணர்வுமாக விளையாடிக்கொண்டிருந்தவள்.

> 'இந்தமுறை எப்பிடியும் சரிவரும்' யாரோ ஒருவர். ஓமோம் முந்தின ஆக்கள் மாதிரி இல்லை த்தான் நம்பலாம், இன்னொருவர்

ஒரு வினாடியில் எல்லாம் கனவாகிப் போனது. ஒரு வருசம் என்ன எத்தனை வருசமானாலும் மறக்கக் கூடியதா! எனக்குக் இடையில் கிடைத்த துணை அவள்.

இவனுக்கு. இந்த பூமியில் கண் விழித்தது முதல் அவள் தான் உலகமே. உலகையே இவனுக்கு அறிமுகப்படுத்தியது கூட அவள்தான். அன்பு. பாசம். எல்லாம் அவள் அவனுக்குச் சொல்லிக் கொடுத்தவை.

ஒரு பொம்மையைக் கூட தன்னிடமிருந்து பிரித்தால் அழும் குழந்தையிடமிருந்து அம்மாவை ஒரே வினாடியில் பிரித்தால்.

'செந்தூ அப்பாவைப் பாருங்கோ'

எப்போதும் சிரிப்பைச் சிந்தியபடி. சதா கேள்விகள் கேட்கும் உதடுகள். நெஞ்சத்து விம்மல் ஒலி வெளியே கேட்காதவாறு இறுக மூடியிருக்க. வாய்கோணியவாறு. 'மா அம்மா'.

என் கண்களும் என்னையறியாது கலங்க அவனைத் தூக்கி வைத்திருக்க முடியாதபடி கைகால்கள் நடுங்க மதிலோடு சாய்ந்து கொள்கிறேன்.

www.tamilarangam.net



# ஏவுகணைத் தொழில்நுட்பம்

இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட கெடுபிடி நிலைகாரணமாகவும் விண்வெளி ஆராய்ச்சியில் ஏற்பட்ட போட்டி காரணமாகவும் இன்று ஏவுகணைத் தொழில்நுட்பம் பெரும்வளர்ச்சியை அடைந்துள்ளது. போராயுதங்களாகவும், ஆக்கப் பணிகளுக்காகவும் தயாரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஏவுகணைகள் இன்று உலகம் முழுவதிலும் பரவிக்கிடக்கின்றன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் மூலம் இன்று உலகம் முழுதும் குறிவைக்கப்பட்டுள்ள அதே வேளை நவீன தொடர்பு யுகத்தின் திறவுகோலாகவும், இந்த ஏவுகணைகள் காணப்படுகின்றன.

ஏவுகணைத் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளுடன் இலத்திரனியல்-கணனி தொழில்நுட்பமும் ஒன்றிணைந்த உலகின்

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஏவுகணை ஆராய்ச்சி மையத்தின் தலைவர் வெணர்வொன் உட்பட 468 ஜேர்மனிய விஞ்ஞானிகள் அமெரிக்கத் துருப்புகளிடம் சரணடைந்தனர். இவர்களின் உதவியுடன் அமெரிக்கா நியூ மெக்சிக்கோவில் ஒரு ஏவுகணை ஆராய்ச்சித்தளமொன்றை நிறுவியது.

தவிர்க்கமுடியாத ஒரு அங்கமாக இந்த ஏவுகணைகள் வளர்ச்சிபெற்றுள்ளன. ஜேர்மனியின் இளம் விஞ்ஞானி டாக்டர் வெணர்வொன் பிரோணிக்கு 2310 இறாத்தல் எடையுள்ள குண்டுகளை 162மைல் தூரம் கொண்டு சென்று வீசக்கூடிய ஏவுகணையொன்றைத் தயாரிக்குமாறு ஹிட்லர் அரசு உத்தரவிட்டிருந்தது. இதற்கிணங்க பால்மோடிக் கடலோரமாக அமைந்துள்ள பீனிமண்ட் எனும் இடத்தில் ஏவுகணை ஆராய்ச்சித்தளத்தில் ஆராய்ச்சிகள் துரித கதியில் நடைபெற்றன.

பரீட்சித்துப் பார்க்கப்பட்ட ஏவுகணைகளுக்கு 'ஏ' வரிசையில் ஏ1, ஏ2, ஏ3, ஏ4 என பெயரிடப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் பலனாக ஹிட்லரின் உத்தரவுக்கும் மேலாக *2150* இறாத்தல் வெடிப்பொருளை 200 மைல் தூர்த்திற்குக் கொண்டு செல்லக்கூடிய ஏ4 எனும் ஏவுகணை தாயாரிக்கப்பட்டது. இதற்கு 'வி 2' எனப் பெயரிடப்பட்டு ஹிட்லரின் படையிலுள்ள அதிசக்தி வாய்ந்த ஆயுதமாக கொள்ளப்பட்டது. இந்த ரக ஏவுகணைகளில் லண்டன் நகரின் மீது 1944 செப்டெம்பரில்; 1115

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் வந்த அண்மித்த காலப் பகுதியில் வல்லரசகளிடம் மட்டும் இருந்து வந்த ஏவுகணைத் தொழில் நுட்பம் இன்று மூன்றாம் உலக நாடுகளின் வசமும் வந்தடைந்துள்ளது. யுத்தத்திற்கோ அல்லது வேறு அபிவிருத்திக்கோ இவை பயன்படுத்தப்படவுள்ளன. ஏவுகணைகளின் நவீன தொழில் நுட்பம் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இஸ்லாமிய நாடுகளுக்கும் சென்றடைந்து விடக்கூடாது என்பதில் வல்லரசுகள் விடாப்பிடியாக நின்றபோதும் இவ்விடயத்தில் அவற்றின் முயற்சிகள் வெற்றியளிப்பதாக இல்லை என்றே கூறலாம்.

ஏவப்பட்டன.

1945 இல் அணுகுண்டுகள் தயாரிக்கப்படும் வரை இவையே உலகில் அதிசக்திவாய்ந்த ஆயுதமாகக் காணப்பட்டது. ஏவுகணையின் வரலாறு 13ம் நூற்றாண்டில் சீனரிடமிருந்து ஆரம்பித்த போதும்



ஹிட்லரின் இந்த வி2 ரக ஏவுகணைகளே, உலகிற்கு ஏவுகணைகளின் சக்தியைப் புரியவைத்தது ஹிட்லர் இவ்வகை ஏவுகணைகளைத் தயாரித்துக் கொண்டிருந்த வேளையில் நேசநாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை சிறிய ரகடாங்கிகளைத்தாக்கும் ஏவுகணைகளையே கொண்டிருந்தன.

1945 மேயில் ஜேர்மனி வீழ்ச்சியடைந்ததும் ஜேர்மனியிலிருந்து சமார் 100 வி2 ரக ஏவுகணைகளை உற்பத்தி செய்யக் கூடிய உதிரிப்பாகங்களையும் ஏவுகணை ஆராய்ச்சி தொடர்பான ஏராளமான இரகசிய அறிக்கைகள் குறிப்புக்களையும் அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது இந்த ஆராய்ச்சிப்பத்திரங்களை ஏற்றிச்செல்ல 300க்கு மேற்பட்ட வாகனங்கள் தேவைப்பட்டன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஏவுகணை ஆராய்ச்சி மையத்தின் தலைவர் வெணர்வொன் உட்பட 468 ஜேர்மனிய விஞ்ஞானிகள் அமெரிக்கத் துருப்புக்களிடம் சரணடைந்தனர். இவர்களின் உதவியுடன் அமெரிக்கா நியூ மெக்சிக்கோவில் ஒரு ஏவுகணை ஆராய்ச்சித்

## புதியதொரு போர்முனை

தளமொன்றை நிறுவியது.

இந்நிலையில் ஹிட்லரை ஒடுக்குவதில் பங்காளியான சோவியத் ரஸ்யா இந்த வி2 வின் பாகங்கள் சிலவற்றை தமக்கும் தரவேண்டும் என அமெரிக்காவிடம் கோரிய போது அமெரிக்கா சிலவற்றை அள்ளிக்கட்டி கப்பல் மூலம் சோவியத்திற்கு அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது எனினும், எஞ்சிய சில வி2 ஏவுகணைகளும் சில விஞ்ஞானிகளும் சோவியத் யூனியனுக்கு கிடைத்தனர். இன்றைய நவீன ஏவுகணைகளை நான்கு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம் ஒன்று தரை ஏவுகணைகள் என அழைக்கப்படுபவை. இவற்றை நெடுந்தூர, நடுத்தரவீச்சு, குறுந்தூர ஏவுகணைகள் என வகைப்படுத்தலாம். இவ்வாறான ஏவுகணைகள் தரையிலிருந்து வேறொரு தரையிலக்கைத் தாக்கப் பயன்படுத்தலாம், இவை அணு ஆயுதங்களை காவிச்செல்லக் கூடியதாகவும், சக்திவாய்ந்த பெருமளவு வெடிப்பொருள்களைக்காவிச் செல்லக் கூடியவையாகவும் அமைந்திருக்கும். நீர் மூழ்கிகளிலிருந்தும் யுத்தக் கப்பல்களிலிருந்தும் ஏவப்படும் ஏவுகணைகளும் இந்த வகையைச் சேர்ந்தவையாகவே கொள்ளப்படுகின்றன.

ஆரம்பத்தில் இவை ராடர்கள் மூலம் சிறிதளவு கட்டுப்படுத்தப்பட்டுவந்தன. அவ்வாறான போது, அவை இலக்கைத் தாக்குவதில் துல்லியமானவையாக இருக்கவில்லை. எனினும், கணனி மயமாக்கப்பட்ட நவீன தரை ஏவுகணைகள் கணனிகள் மூலம் இறுதிவரை கட்டுப்படுத்தப்பட்டு குறித்த இலக்கை துல்லியமாக தாக்குபவையாக அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வகை ஏவுகண்களை அழிக்கக் கூடிய மாற்று ஏறிகணைகள் தற்போது பாவனையில் உள்ளன. இம் மாற்று ஏவுகனைகள் தரையிலிருந்தோ அல்லது ஆகாயத்திலிருந்தோ ஏவப்படக் கூடியவை.

இராண்டாவது பிரிவாக, தரை- ஆகாய ஏவுகனைகள் (SAM- Surface to Air Missiles ) உள்ளன. இவ்வகை ஏவுகணைகள் விமானங்களைத் தாக்கியழிக்க பெரிதும் பயன்படுகின்றன. இவை மிகக் கூடிய உயரங்களில் பறக்கும் விமானங்களை அழிக்கக்கூடிய தரையிலுள்ள தளத்தில் வைத்து ஏவப்படும் ஏவுகணைகளிலிருந்து



தோளில் வைத்து ஏவப்படும் சிறிய ரக ஏவுகணைகள் வரை பல்வேறு ரகங்களில் காணப்படுகின்றன. இவ்வகை ஏவுகணைகளில் சில ராடர் மூலம் செலுத்தப்படுபவையாகக் காணப்படுகின்றன.

நவீன ஏவுகணைகள் பலவாறு இலக்கை தேடிக்கண்டு பிடித்து அழிக்கும் வகையினதாகக் காணப்படுகின்றன. வெப்பத்தை நாடிச் செல்வன, குறிப்பிட்ட டெசிபல்களுக்கு மேற்பட்ட ஒலியை நாடிச் செல்வன, சில வகை விசேட உலோகங்களை நாடிச்செல்வன என இவை தொடர் கின்றன.

வித்தியாசமான தொழில் நுட்ப அமைப்புக்களில் இவற்றின் பயன்படு ஆற்றல் தீர்மானிக்கப்படுகின்றது.

இவ்வை குறித்த இலக்கைத் தாக்குவதிற் திறமையாக உள்ளன.

இதேவேளையில் தரை தரை (SSM - Surface to Surface Missiles ) ஏவுகணைகளைத் தாக்கி அழிக்க சிலவகை தரை ஆகாய ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன.

மூன்றாவது பிரிவாக ஆகாய தரை ஏவுகணைகள் (ASM -Air to Surface Missiles ) காணப்படுகின்றன. விமானங்களிலிருந்து தரையிலுள்ள இலக்குகளை இவ்வகை ஏவுகணைகள், மிகவும் திறமையாகத் தாக்கக் கூடியவை. போர்க்கப்பல், டாங்கிப் பிரிவு என்பவற்றை ஆகாயத்திலிருந்து தாக்க இவ்வகை ஏவுகணைகள் பயன்படுகின்றன.

நான்காவது பிரிவாக, ஆகாய- ஆகாய ஏவுகணைகள் (AAM -Air to Air Missiles) பாவனையில் உள்ளன, இவை பொதுவாக சண்டை விமானங்களிலிருந்து தாக்கவும் சில தரை தரை ஏவுகணைகளை விமானங்களிலிருந்து தாக்கவும் பயன்படுகின்றன. இவ்வகை ஏவுகணைகள் தயாரிப்பில் மிக நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில் ஏவுகணைகள் பெரிய தளம் அமைக்கப்பட்டு அவற்றிலிருந்தே ஏவப்பட்டு வந்தன. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக கைக்கடக்கமான எடுத்துச் செல்லக்கூடிய ஏவுகணைகள் தாயாரிக்கப்பட்டுவருகின்றன. ஆரம்பகால ஏவுகணைகளில் வெடிமருந்து போன்ற திண்ம எரிபொருள்க்ளே பயன்படுத்தப்பட்டுவந்தன. ஆனால், இவை எரியத்தொடங்கிவிட்டால் அவற்றை நிறுத்துவது கடினமான காரியமாகும். பின்னர் அவற்றுக்குப் பதிலாக திரவ எரிபொருள்கள் பயன்படுத்தப்பட்டன. இவை திண்ம எரிபொருள்களை விடக்கூடிய சக்தியை வழங்கின. இவற்றில் திரவ ஒட்சிசன், திரவ ஐதரசன், மண்ணெண்ணெய் போன்றதொரு திரவ ஐதரோகாபன் என்பன ஏவுகணைகளில் எரிபொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. மின்காந்த சக்தி, அணுசக்தி என்பனவும் ஏவுகணைகளில் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

இன்றையநிலையில் யுத்தகளங்களில் தவிர்க்க முடியாத அங்கமாக ஏவுகணைகள் காணப்படுகின்றன. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின் வந்த அண்மித்த காலப் பகுதியில் வல்லரசுகளிடம் மட்டும் இருந்து வந்த ஏவுகணைத் தொழில் நுட்பம் இன்று மூன்றாம் உலக நாடுகளின் வசமும் வந்தடைந்துள்ளது. யுத்தத்திற்கோ அல்லது வேறு அபிவிருத்திக்கோ இவை பயன்படுத்தப்படவுள்ளன. ஏவுகணைகளின் நவீன தொழில் நுட்பம் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இஸ்லாமிய நாடுகளுக்கும் சென்றடைந்து விடக்கூடாது என்பதில் வல்லரசுகள் விடாப்பிடியாக நின்றபோதும் இவ்விடயத்தில் அவற்றின் முயற்சிகள் வெற்றியளிப்பதாக இல்லை என்றே கூறலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பண்டிதர் வீ.பரந்தாமனுடன் நேர்காணல்

## நேர்முகம்: கருணாகரன்



தமிழீழவிடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையையும் ஏற்று போராளிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டு விடுதலைக்காக உழைத்து வரும் இவர் தமிழ் முனிக் கந்தமுருகேசனா ரிடம் பாடம் கற்றவர்களில் முக்கியமானவர். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் இலக்கிய ஈடுபாடும் கொண்ட தீவிர மொழிப் பற்றாளருமாவார். நல்ல கவிதைகளை எழுதும் மனிதா பிமானம் மிக்க இவரை எப்பொழுதும் புன்னகையுடன் பார்க்கமுடியும்

★ நீண்ட காலமாக மரபில் தோய்ந்ததும் புதியன தேடியும் தமிழிலக்கிய ஈடுபாடு கொண்டுள்ள தங்களின் தோற்றுவாய் மூலத்தையும் தொடர்ந்து வாழ்க்கைப் பின்னணியையும் வெளிச்சத்துக்கு விபரித்துக் கூறுங்கள்?

● தென்புலோலியில் வறுமையுற்ற ஒரு குடும்பத்தில் பிறந்தேன். நான் இரண்டாவது பிள்ளை. எனக்கு உடன் பிறந்தோர் ஐவர் ஆண்களும் இருவர் பெண்களுமாக எழுவராவர். தொடக்கக் கல்வியை புற்றளைப் பள்ளியில் பெற்றேன். பின்னர் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் ஆறாம் வகுப்பிலிருந்து கற்றேன். ஒன்பதாம் வகுப்பிலிருந்து ஆங்கில மொழிமூலம் கற்று க.பொ.த (சா.தா) தேர்வில் அறிவியல் (விஞ்ஞானம்) மாணவனாகத் தேறினேன். எங்கள் கல்விச் செலவை எமதுமாமனார் ஏற்றுதவினார். மேலும் கல்வியைத் தொடரும் எண்ணம் குடும்ப வறுமையால் தளர்வுற்றது. பின் தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனாரிடம் கற்று பாலபண்டித, பண்டிதத்தேர்வுகளில் தேறினேன். பின்பு மாணவ ஆசிரியனாகத் தெரிவு செய்யப்பட்டு 1970ஆம் ஆண்டில் கற்பித்தல் பணியில் புகுந்தேன். 1973 –1974இல் பயிற்சிக் கல்லூரியில் கற்று பயிற்றப்பட்ட ஆசிரியனானேன். இன்னமும் அப்பணியிலேயே தொடருகிறேன். நான் பிறந்தது ஒரு சிற்றூர். அப்பொழுது அது மிகவும் இயற்கை அழகு வாய்ந்ததாய் இருந்தது. மக்கள் வாழ்க்கையும் இயற்கையோடிணைந்த இயல்பு வாழ்க்கையாய் அமைந்திருந்தது. ஆங்காங்கே சுற்றமாய்ச் சூழ்ந்திருந்த பல குடும்பங்களும்தமக்குள் நெருக்கமான உறவைப் பேணி வந்தன. நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையில் காணப்பட்ட நயமான சூழலில் எனது சிறுவம் கழிவதாயிற்று. தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டு, தொழில், கொண்டாட்டம் தொடர்பான பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள் முதலிய வாய்மொழி இலக்கியங்களின் இன்பத்தை நாடோறும் நுகரும் சூழலில் வளர்ந்தேன். இந்தச் சூழலே எனக்கு தமிழின்பத்தைத் தந்து தமிழுணர்வை ஊட்டியது. அதுவளர்ந்து ஆழமான மொழிப்பற்றை ஏற்படுத்தியது. இம்மொழிப்பற்றே, இனப்பற்றையும் நாட்டுப்பற்றையும் என்னுள் வளர்த்தது எனலாம்.

★ தமிழ்முனி கந்தமுருகேசனாரின் மாணவரில் இன்றுள்ள சிலரில் நீங்களும் ஒருவர். அவரின் ஆளுமையையும் அவரிடம் கல்வி கற்ற அனுபவத்தையும் வெளிச்சத்துக்குக் கூறுங்கள்?

● தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் எங்கள் ஊரிலேயே தோன்றினார். அவருடைய "தமிழகம்" – அவரது சிறுகுடிலுக்கு அது பெயர்– எமது வீட்டிலிருந்து அரைக்கல்தொலைவிலிருந்தது. என் தந்தையார் கந்தமுருகேசனாருக்கு சிறுவப்பருவத்திலிருந்து நண்பராய் இருந்தார். எனது கல்லூரிப் படிப்பு நின்றபோது, தமிழ் கற்கவேண்டும் என்னும் ஆவல் என்னுள்ளே பெருகியது. அந்தவேளை தமிழ்நூற்பயிற்சி சிறிதே உடைய தந்தையார் பெரிதும் ஆர்வத்தோடு என்னை கந்தமுருகேசனாரிடம் போக்கி வைத்தார். இது நிகழ்ந்தது1959ம் ஆண்டிலாகும்.
கந்தமுருகேசனார் "தமிழகத்தில்" திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருந்தார். திண்ணைப் பள்ளியிலே அரிவரிப் பிள்ளைகள் முதல் முதியோர் வரை கற்றுச் சென்றார்கள். தமிழ், எண் கணிதம், தருக்கம், அரசியல், மெய்யியல், சமூகவியல் முதலானவற்றின் அறிவு, புரட்சிகரமாகவும் உண்மையாகவும் கற்பிக்கப்பட்டது. வெண்தாடி அசைய, களங்கமற்ற, கூரியபார்வையோடு, திண்ணையிலிட்ட தடுக்கின் மீது (சிறுபாய்) "சப்பாணம்" கொட்டி (கால்மடித்திருக்கும் ஒரு வகையான இருப்பு) இரண்டு கைகளால் மடித்த காலைப் பிடித்துக் கொண்டோ இருபக்கங்களிலும் கைகளை ஊன்றிக்கொண்டோ இருக்கும் தோற்றம், மெய்யியல் முனியைத், தவத்தோரை நினைவூட்டும். அவர் ஒரு இருக்கை முடவர். அவருடைய பதினான்காம் அகவையிலிருந்து அக்கோலவிருக்கைதானாம். அறுபதை அடைந்த போதும் முகத்தில் குழந்தைமை குன்றாத ஒளி குழைந்திருந்தது. தோற்றத்தாலும் பார்வையாலும் உண்மையோடு கூடிய இனிய பேச்சாலும் எவ்வெவரையும் ஒடுங்கச் செய்யும் ஆளுமை இயற்கையாகவே அமைந்து விட்டது. அவர் தெய்வநம்பிக்கையற்றவர், சிந்தனையாளர், சீர்திருத்தவாதி, பொதுவுடைமைவாதி, நாவன்மை உடையவர். தூயதமிழ் அவர்உயிர்மூச்சு. தமிழுக்கு தொண்டு செய்வதே தம் வாழ்விலக்கு என்று வாழ்ந்தவர். நல்லை நாவலர்மீது கோவையொன்றைப் பாடியுள்ளார். நான் அவரிடத்துச் சென்றஅன்றே அவருக்கு ஆட்பட்டுவிட்டேன்.
திண்ணைப் பள்ளியிலே எனது தமிழ்க் கல்வி, குருகுலக்கல்வி முறையாக மலர்ந்து சிறந்தது. ஓராண்டு கற்று பால பண்டிதத் தேர்விலும் மேலும் இரண்டாண்டு கற்று பண்டிதத் தேர்விலும் தேறினேன். அவர் இறக்கும்வரை அவருடனேயே குருகுல வாழ்வு வாழ்ந்தேன். என்னுள்ளே முன்னமை முளையிட்ட தமிழுணர்வு, புரட்சிகரமான எண்ணங்கள் முதலியன, அக்காலத்திலே தான் ஆழமாக வேரோடி வளர்ந்து மலர்ந்து உறுதி பெற்றன என்பேன். அவரிடம் பாடம் கேட்டதால் பெற்ற அறிவை விட, அவருடன் வாழ்ந்ததால் பெற்ற அறிவே மிகுதியாகும். அவர் தந்த அடிப்படை அறிவின் ஒளியிலே, பல்துறைகளிலும் நானாகத் தேடிக்கொண்ட அறிவு இன்னும் பெரிதாகும். எனக்கு இன்றுள்ள, அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை ஆகியவற்றின் கணிசமான பகுதி, எனது குருவின் அருளினால் என்னை அடைந்ததே.

★ தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நெஞ்சார நேசிக்கும் நீங்கள் பணியாலும் இலக்கியப் படைப்புகளாலும் தமிழீழப் போருக்கு அணி சேர்த்து வருகின்றீர்கள். இந்த உணர்வு உங்களுக்கு ஏற்பட்ட விதத்தையும் பணியையும் கூறமுடியுமா?

● எனது பன்னிரண்டாவது அகவையில் ஈ.வே.ரா பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சமுதாய சீர்திருத்த கருத்துகளினால் பெரிதும் கவரப்பட்டேன். அக்காலம் இலங்கையில்"பொதுவுடைமை" அரசியற் கருத்துக்கள் என்னை ஈர்த்தன. அக்காலத்திலிருந்து 1970ஆம் ஆண்டு வரை பொதுவுடைமைக் கட்சி ஆர்வலனாக இயங்கினேன். அதே வேளையில் அக்கட்சியால் இரண்டாம் நிலையில் கருதப்பட்ட மொழிப்பற்று இனப்பற்றுகள், பொருளியக் கோட்பாட்டு உணர்வுகட்கு சமமாக அல்லது சற்று முனைப்பாக என்னுள்ளே வளர்ந்து வந்தன. 56ம் ஆண்டில் தனிச்சிங்கள ஆட்சி மொழிச் சட்டம் வந்தபோதும் 58ம் ஆண்டில் இனக்கலவரம் நடந்த போதும் பேரினவாதம் வளர்ந்தபோதும் இடது சாரிகள் நடந்து கொண்ட முறைகள், அக்கட்சியினர் மீதுவெறுப்பை உண்டாக்கின. "ஐக்கிய இலங்கையில் இனங்களின் சமத்துவம்" என்ற மாயை –த்திரையை கிழித்துவிட்டன. எனது விடுதலை உணர்வு கொழுந்து விட்டெரியத் தொடங்கியது.
எழுபதிலிருந்து பொதுவுடைமைக் கட்சிமீது வெறுப்புற்றிருந்த நான் 1972ம் ஆண்டில் "புதிய குடியரசு" அமைப்பு நிறைவேற்றப்பட்டதும் முற்றாகவே அக்கட்சியினின்றும் (பொதுவுடைமைக் கோட்பாடுகளினின்றும் அல்ல) ஒதுங்கிவிட்டேன். 1974 வரை தமிழ் இளைஞர் குழுக்கள் பால் என் கவனம் திரும்பியது. 1974 ஆம் ஆண்டு "பங்குனி" மாதம் என்று நினைக்கின்றேன். திரு. பொன். சிவகுமாரன் தன் தோழர்கள் இருவருடன் வந்து என்னை என் வீட்டில் சந்தித்தார். அப்பொழுது தமிழர் ஆயுதப்போராட்டத்தில் ஒரு நம்பிக்கை ஒளிமின்னலிட்டது. இந்த 1974 ஆம் ஆண்டிலேயே புதிய புலிகள் இயக்கத்தை இனம் கண்டு கொண்டேன். அப்போது அது தலைமறைவியக்கமாக இருந்தது. அதன் தலைவரை அறியமுடியவில்லை. 1976 இல் தலைவரை பெயரளவில் அறிந்துகொண்டேன். அப்பொழுதிருந்து இயக்கத்தின் வளர்ச்சிக்கும் போராட்டத்திற்குமாக பலவழிகளில் உழைத்து வருகிறேன். நான் மூன்று பத்தாண்டுகட்கு மேலாக எழுத்துலகில் உலவி கவிதை, கட்டுரை, நாடகம் ஆகிய வடிவங்களில் எழுதிவந்திருக்கிறேன்.
என் எழுத்துகளின் கருப்பொருள்களாக தமிழ், தமிழர் விடுதலை, அரசியல், சமூக சீர்திருத்தம் என்பனவே அமைந்துள்ளன. தொடர்ந்தும் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் போராட்டம் வெல்வதற்கும் எழுதியும் பணிபுரிந்தும் வருகிறேன். தமிழும் தமிழராட்சியும் என்னுயிர்த் தாகம்.

**தமிழீழத்தில் மண்விடுதலை, பொருண்மிய விடுதலை, பெண் விடுதலை, சமூக விடுதலைக்கான தேவையும் சூழலும் தற்காலம் அமைந்துள்ளன. ஆகவே, இலக்கியப் படைப்பாளிகள் இக் காலத்தில் விடுதலை இலக்கியங் களைப் படைத்தல் வேண்டும்**

★ தமிழீழ இலக்கிய வளர்ச்சி பற்றியும் விடுதலை இலக்கியங்கள் எவ்வாறு அமையவேண்டுமென்றும் நீங்கள் கருதுகின்றீர்கள்?

● தமிழீழ இலக்கியங்களில் அறுபதுகளிலிருந்து வளர்ச்சிப்போக்கு காணப்படுகின்றது. குறிப்பாக சிறுகதைகளில் இந்த வளர்ச்சி விளங்கத் தெரிகிறது. தொடக்கத்தில் எல்லாவகை இலக்கியங்களும் தமிழ்நாட்டு இலக்கியப் போக்கையே பின்பற்றி எழுந்தன எனினும் சில காலத்தில் தம்போக்கை மாற்றி தனித்தன்மையுடன் வளர்ச்சியடைந்து வருகின்றன. தமிழ்நாட்டு இலக்கியங்கங்களில் பெரும்பாலானவை, பொழுதுபோக்குத்தன்மையும் கற்பனைச் சுவையின்பமும் வணிக நோக்கும் கொண்டவையாகவே உள்ளன. தமிழீழ இலக்கியங்கள் பெரும்பாலானவை சமூக முன்னேற்ற இலக்கும் உண்மையும் கொண்ட ஆக்க இலக்கியங்களாகத் திகழ்கின்றன. ஆனால், பின்னவை மக்கள் உள்ளத்தை வென்றெடுப்பதற்கு காலம் செல்லும். விடுதலை இலக்கியங்கள், அவை எந்த வடிவத்தில் தோன்றினாலும் எந்த விடுதலை பற்றிப் பேசினாலும் அவ்வச்சூழலும் தேவையும் உள்ள இடத்திலேயே தோன்றமுடியும். விடுதலை இலக்கியங்களைக் கற்பனையில் படைக்க முடியாது. ஒருகால் முயன்று படைத்தாலும் அவற்றில் உண்மையிராததால் நம்பகத்தன்மையும் இராது. மக்கள் அவற்றை நாடார். தமிழீழத்தில் மண்விடுதலை, பொருண்மிய விடுதலை, பெண் விடுதலை, சமூக விடுதலைக்கான தேவையும் சூழலும் தற்காலம் அமைந்துள்ளன. ஆகவே, இலக்கியப் படைப்பாளிகள் இக்காலத்தில் விடுதலை இலக்கியங்களைப் படைத்தல் வேண்டும். விடுதலை இலக்கியங்கள், உடனடியாக

**தமிழீழத்தில் மண்விடுதலை, பொருண்மிய விடுதலை, பெண் விடுதலை, சமூக விடுதலைக்கான தேவையும் சூழலும் தற்காலம் அமைந்துள்ளன. ஆகவே, இலக்கியப் படைப்பாளிகள் இக்காலத்தில் விடுதலை இலக்கி யங்களைப் படைத்தல் வேண்டும்.**

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பண்டிதர் வீ. பரந்தாமனுடன் நேர்காணல்...

மக்களை எழுச்சியடையச் செய்தும் எதிர்காலத்தில் வரலாறாக நின்று நிலைக்கத்தக்க வகையிலும் அமைதல் வேண்டும். வடிவங்களைப் பொறுத்த மட்டில், எந்த வடிவம் மக்களை ஈர்க்குமோ, எளிதில் சென்றடையவும் புரியவும் செய்யுமோ அந்த வடிவங்களில் படைக்கலாம்.

★ மரபுக்கவிதை, புதுக்கவிதை என்ற வகைப்படுத்தல் இன்றுவரை தொடர்கிறது. தாங்கள் இருவகைக் கவிதை வடிவங்களையும் ஏற்றுக்கொண்டவர் என்பதை நாமறிவோம். எனவே கவிதை பற்றியும் இந்த வகைப்படுத்தல் பற்றியும் தங்கள் கருத்து என்ன?

**தமிழர்க்கு மேன்மை தரும் உயர் விழுமியங்களை பழையமரபு என்னும் பெயரால் ஒதுக்கிவிடும் கண்மூடித்தனக்கதை எதிர்ப்பவன் என்பதுதான் உண்மையாகும்.**

● கவிதை என்பது ஒரு கருத்துப் பொருள். காட்சிப் பொருளைச் சுட்டி விளக்குவது போல விளக்க முடியாது. அது சொன்னயம், பொருணயம், ஓசை நயம், அணிநயம், உணர்ச்சிநயம், யாப்பு நயம் ஆகியவற்றின் கூட்டுப்பண்பாய் அமைந்தது. இப் பண்புகளை ஒன்று சேர்ப்பதற்காகவே மாத்திரை (எழுத்து) அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய வரையறைகளை சான்றோர் வகுத்தனர். அகவல், செப்பல், துள்ளல், தூங்கல் என்னும் நால்வகை ஓசைகளின் அடிப் படையில் முறையே அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாக்களை வரைந்து கொண்டனர், இவற்றின் வரை-யறை வேறுபாடாக தாழிசைதுறை, விருத்தம் ஆகிய பாவினங்கள் பிறந்தன.

அவையும் ஓசை வேறுபாடுகளைப் பெற்று பலவகையாகும். தொல்காப்பியர், தொடைவகையை பதின்மூவாயிரத்து எழுநூற்றெட்டாகக் கண்டு மேலும் "தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பல்கும்" என்றும் கூறிப்போந்தார். இதிலிருந்து ஒன்றை உய்த்துணரலாம், முன்சொன்ன வரையறைகள் வேறுபடக்கூடியன என்பது. கவிதைப் பண்புகள் மாற்ற மடையா ஆனால், வரையறைகள் மாற்றமடையும் தன்மையன. மாறாத கவிதைப் பண்புகளையும் மாறுந் தன்மையனவாகிய வரையறைகளையும் மரபுகள் என்று கூறிவருகின்றனர். இன்று சிலர், வரையறைகளில் மாற்றம் செய்தும், பலர் கவிதைப் பண்புகள் வரையறைகள் இரண்டையும் கைவிட்டும் "புதுக்கவிதைகள்" என்று எழுதிவருகின்றனர். வரையறை மாற்றம் பெற்றவையே புதுக்கவிதை எனலாம். மற்றையது கவிதையே அன்று கவிதைப்பண்புகள் இல்லாமல் வரையறை மட்டும் பேணப்பட்டு எழுதப்படுவதும் கவிதைப்போலியே. இதையே "கல்லாதான் கற்ற கவி" என்று ஔவையார் கூறினார். ஆழமான பார்வையில் மேற்சொன்ன புதுக்கவிதையும் மரபுக்கவிதைகளிலேயே அடங்குவதை உணரலாம். புதுக்கவிதை சிலவற்றுள் பேச்சோசை நடைபயின்று வருகின்றது. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் புதுக் கவிதைகளிலே மேற்படி பண்பு மிகுந்திருப்பதைக் காண்கிறேன். இது சான்றோர் சொன்ன உரைச் செய்யுள் (உரைப்பாட்டு) வகையைச் சார்ந்துள்ளது.

மொழிக்கு பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இருவகை வழக்குகள் உள்ளன. அவையும் உரைநடை, செய்யுள்நடை என இரு நடை பெற்றியங்கும். செய்யுள்நடை தழுவிய உரை நடையும் உண்டு. இதனையே சான்றோர் உரைச்செய்யுள் என்றனர். இது தற்காலத்தில் "வசன கவிதை" என்றும் "கவியுரை" என்றுங் கூறப்படுகின்றது. கவிஞர். இ. முருகையன் அவர்கள் கவியரங்குகளில் உரைச்செய்யுளைக் கையாண்டு வருவதைக்கண்டிருக்கிறேன். மரபுகளை நன்குணர்ந்தவர்களே புதுக்கவிதையிலும் வெற்றி பெறுவதைக் காண்கிறேன். இவ்வேளையில் என்னை யாரும் மரபுகளிலிருந்து விடுபட விரும் பாதவர் என்று கணித்து விடக்கூடாது. நான் மற்றவர் பலரும் விடுபடமுடியாத மரபு, மூடநம்பிக்கைகள், சமுதாயச் சீர்கேடுகளிலிருந்தே உள்ளத் தூய்மையுடன் விடுபட்டவன். ஆனால், தமிழர்க்கு மேன்மை தரும் உயர் விழுமியங்களை "பழையமரபு" என்னும் பெயரால் ஒதுக்கிவிடும் கண்மூடித்தனத்தையும் எதிர்ப்பவன் என்பது தான் உண்மையாகும்.

ஏனையோரை இகழமாட்டேன். எல்லோரும் எழுதட்டும். காலப்போக்கில் சிலரேனும் கவியாற்றல் வாய்க்கப்பெற்று, மக்கள் நயக்கும் நல்ல கவிதைகளைப் படைப்பார்கள் என நம்புகிறேன்.

★ சங்க கால இலக்கியங்களிலும் இலக்கண அறிவிலும் தங்கள் புலமையை நாங்கள் அறிந்துள்ளோம். எனவே இந்த மரபு சார்ந்த அறிவு புதியவர்களுக்கு எப்படி வலுச்சேர்க்கும் என்பதைக் கூறமுடியுமா?

● மொழி, இன விழுமியங்கள் மரபைப் பேணுவதன் மூலமே புதிய தலை முறைகளை வந்தடைகின்றன. சங்ககாலத் தமிழர்வாழ்க்கையின் உயர்விழுமியங்களை இன்றும் நாம் விரும்புகிறோம். புதைந்து போன ஒரு வீர மரபை புதுப்பித்துக் காண்பதே எங்கள் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களினதும் உயிருந்தலாக

**ஏனையோரைஇகழமாட்டேன் எல்லோரும் எழுதட்டும் காலப்போக்கில் சிலரேனும் கவியாற்றல் வாய்க்கப் பெற்று, மக்கள் நயக்கும் நல்ல கவிதைகளைப் படைப்பார்கள் என நம்புகிறேன்.**

இருக்கிறது. பண்டைக்கால விழு - மியங்களை அறிந்து எழுச்சி பெறுவதன் மூலம், விடுதலைப் போராட்டத்திற்கு வலு உண்டாகும்.

எங்கள் மரபுகளாய் உள்ள தேசிய விழுமியங்களே தமிழினத்திற்குத் தனிச் சிறப்பையும் உலகத்தில் முதன்மையையும் தருவன. அதேவேளை, புதிய அறிவியல் தொழில்நுட்ப அறிவையும் நாம் பெருக்கிக் கொள்ளல் வேண்டும். அந்த வகையிலே தான் எனது மரபு சார்ந்த அறிவு, புதியவர்க்கு வலுச்சேர்க்கும் எனக் கருதுகிறேன்.

★ எமது விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிணைந்து நிற்கும் தாங்கள் விடுத-லைப் போரின் பால் ஈடுபாடு கொண்ட தற்கான காரணங்களையும் அதனால் உங்களுக்குள் ஏற்படும் உணர்வுகளையும் கூறுங்கள்?

● நான் பிறந்து வளர்ந்த சூழல், எனக்குத் தமிழுணர்வைத் தந்ததென்று முன்பே கூறினேன். சிறுவயதிலேயே தமிழ் இலக்கியங்களை படிக்கலானேன். தமிழின் சிறப்பையும் தமிழர் வரலாற்றுப் பெருமை யையும் அறிய அறிய தமிழினம் மீண்டும் அத்தகைய உயர் நிலையை அடைய வேண்டும், ஆளவேண்டும் என்ற உந்தல் என்னுள் எழுந்து வளர்ந்து கொண்டி ருந்தது. சொந்த உரிமையையும், சுதந்திரத்தையும் நுகர, பிறர் இயைபுக்காகக் காத்திருக்கும் இயலாமையை, அடிமைத்தனத்தை மிகவும் வெறுத்தேன். இயல்பாகவே போர் விருப்பம் (போரூக்கம்) உடையவனாய் இருந்தேன். அதனால் இலக்கியங்களில் போர் கூறும் பகுதிகளை சுவைத்துப் படிப்பேன். போராட்டம், போர்ச்செய்திகள் பற்றிக் கூறும் நூல்களையும் கட்டுரைகளையும் விரும்பிப் படித்து வந்தேன். இந்தப் போர்க்கலையிலே "கெரிலா" போர்க்கலை எனக்கு மிகவும் பிடித்தது. இக்கலை பற்றி, 'பண்டைக் கால போர் முறையும் தற்காலப் போர் முறையும்' என்னும் தலைப்பிலே 1985 ஆம் ஆண்டில் "ஈழநாடு" ஏட்டில் ஒரு கட்டுரை கூட எழுதியிருக்கிறேன். இந்த இயல்பூக்கங் காரணமாக எக்காலத்தும் போராடுவோர் பக்கமாகவே நின்று வந்துள்ளேன். அதனாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தொடக்க காலத்திலேயே அதன் ஓர் ஆர்வலனாக இணைந்துவிட்டேன். எங்கள் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் அருங்குணங்கள் குறிப்பாக அஞ்சாமை, நேர்மை, அன்பு, அறிவு, ஊக்கம் என்னும் பண்புகள் என்னை மிகவும் கவர்ந்தன. அவர், தமிழர் தவத்தால் அரிதிற் பெற்ற ஒரு "திருமாமணி". என் சாவுவரை, என்னால் இயக்கத்திற்கு உதவமுடியாத இயலாமையுற்ற காலத்தும், அவர் அன்பைப் பெற்று இருக்கவே விரும்புகின்றேன். தமிழ் வெல்லும்!

நன்றி வெளிச்சம்

---

# எமது தேச சட்ட ஒழுங்கும், நீதி நிர்வாகமும் தேசிய கட்டமைப்பை வலுவாக்க வேண்டும்.

### செய்தியாளர் மத்தியில் தலைவர் பிரபாகரன்

எமது தேசிய பண்பாட்டிற்கு அமையவும், மாறிவரும் உலகின் நவீன அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் எமது சட்டமுறை அமைக்கப்பட வேண்டும். எமது தேசத்தை அடிமைப்படுத்திய அந்நியர்கள் எமது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தைக் கொண்டுவர முயன்றார்கள். தமது சட்டங்களையும் திணித்தார்கள். அன்று அடிமைப்பட்ட மக்களாக நாம் வாழ்ந்ததால் பலத்தின் மூலமாக அந்நியர்கள் எம்மீது திணித்த சட்டங்களை நாம் ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. ஆனால் இன்று நிலைமை வேறு. இப்பொழுது நாம் எமது சொந்தபலத்தின் மூலமாக எமது மண்ணை மீட்டு வருகிறோம். எமது தேசத்தில் ஒரு சட்டநிர்வாக ஒழுங்கைக் கட்டமைத்து வருகிறோம். இந்த சட்டஒழுங்கும் நீதி நிர்வாகமும் எமது மக்கள் தேசியக் கட்டமைப்பை பலப்படுத்துவதாக அமைய வேண்டும்" இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் கடந்த மாதம் 20ஆம் நாள் தமிழீழ நீதியாளர்களின் உறுதிப்பிரமாண வைபவத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார். உயர்நீதிமன்ற நீதியாளர்களாக திரு. அன்பு, திரு. துணிகரன், திரு. பூவேந்தன் ஆகியோரும் மாவட்ட நீதியாளர்களாக திரு. செந்தூர், திரு. தியாளன், திரு. மனோகரன், செல்வி. அல்லிராணி, செல்வி. கண்மணி ஆகியோரும் தேசியத் தலைவர் முன்நிலையில் உறுதிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். தலைவர் பிரபாகரன் அவர்கள் இவ்வைபவத்தில் மேலும் பேசுகையில் கூறியதாவது, "தமிழீழ நீதி நிர்வாகத்துறை திறம்பட செயல்படுவதை அறிந்து பெருமகிழச்சி அடைகிறேன். யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மட்டுமன்றி சிங்களப் பத்திரிகையாளர்கள் கூட எமது நீதி நிர்வாக முறையைப் புகழ்ந்துரைத்திருக்கின்றார்கள். நேர்மையும் கண்ணியமும், ஒழுக்கமும் நிறைந்த எமது போராளிகள் சட்டவாளர்களாகவும், நீதியாளர்களாகவும் கடமை புரிவதால் நீதித்துறை ஊழல் அற்ற நிலையில் செம்மையாக செயற்படுகிறது. எனினும் எமது நீதிநிர்வாகத்துறை மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு இன்னும் திறமையாகச் செயற்படவேண்டுமென்பதே எனது ஆவல். நீதித்துறையில் சேவை புரியும் எமது போராளிகள் உணர்வுகளுக்கு, உறவுகளுக்கும் அடிமைப்படாது தகுந்த நீதிக்கு இடத்தைக்கொடுத்து செயற்பட்டால் எமது நீதித்துறை மேலும் உன்னதமடையும். எமது சமூகத்தில் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகள் தொடர்கிறது. அநீதிகள் திருந்தி வருகிறது. ஆனால் இங்கு கொடுமைகள் தொடர்கிறது. இந்த சமூக அநீதிகளில் இருந்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டங்கள் திருத்தப் படவேண்டும் என தலைவர் பிரபாகரன் மேலும் குறிப்பட்டார்.

தமிழீழ சட்டக்கல்லூரியின் காலாண்டு வெளியீடான 'சட்டத்தின் திறவுகோல்' என்ற இதழ் இவ்வைபவத்தில் வெளியிடப்பட்டது. தமிழீழ நீதிநிர்வாகத்துறை பொறுப்பாளர் திரு. பரா அவர்கள் முதல்பிரதியை தலைவர் அவர்களிடம் கையளித்து இதழை வெளியிட்டு வைத்தார். இவ்வைபவத்தில் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேசத்துரோகிகள் ஐவர் புலிகளால் கைது!

**துரோகத்தனங்களிற்கும் எம் தாயகம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது இத்துரோகிகள் எங்களிற்குள்ளேயே வாழ்கின்றார்கள். போராட்டத்தின் மீது பற்றுக்கொண்டவர்கள் போன்று நடிக்கின்றார்கள், இயக்க ஆதரவாளர்கள் போன்றும் செயற்படுகின்றார்கள், மேற்படி மறைப்பின் மூலம் மக்களை ஏமாற்றி எதிரிகளுக்குத் துணைபோகின்றார்கள்.**

தேசத்துரோகிகள் ஐவர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு அவர்களது துரோகத்தனங்களும் அடையாளம் காணப்பட்டு விசாரணைகளும் பூர்த்தியடைந்த நிலையில் உள்ளன. இவ்வாறான துரோகத்தனங்கள்



பூலோக ராசா

குறித்து விழிப்புடனும், பொறுப்புடனும், எச்சரிக்கையுடனும் இருப்பதன் மூலம் துரோகத்தனங்களை அடையாளம் கண்டு வெற்றிக்கு வழிவகுப்போம்; விடுதலையை விரைவாக்குவோம் என விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

**நாளுக்கு ஒரு கோலம்**
**நடிக்கத் தெரிந்தவன்**
**ஆளுக்கு ஆள்மாறும்**
**மாயம் தெரிந்தவன்**
**விழிகளைத் திறந்தால்**
**வேடங்கள் புரியும்.**

அந்த அறிக்கை வருமாறு: சிறிலங்கா அரச மீது எம்மக்கள் கொண்ட நம்பிக்கை அரும்புகள் தகர்ந்துபோய், சமாதான மேகமூட்டங்கள் விலகி எமது உரிமைகளுக்காக நாங்கள் சண்டையிடட்டே ஆகவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

எம் தேசத்தின் விடுதலைக்காக எம் இனிய போராளிகளது, மக்களது தியாகங்களும் தொடர்கதையாக இருந்து வருகின்றது. விடுதலைப் போராட்டத்தின் போது எம் தாயகம் எதிர்கொள்ளும் சொல்லொணாத் துன்பங்கள் தீர்ந்தபாடில்லை. இத்தனைக்கும் மத்தியிலும் துரோகத்தனங்களும், அற்ப சலு-



இராசதுரை

கைகளுக்காக தம் தாயகப்பூமியை காட்டிக்கொடுக்கத் துணியும் நயவஞ்சகத்தனங்களும் ஓய்ந்தபாடில்லை. இன்னும் எம்மினத்தின் மத்தியில் துரோகத்தனங்களிற்குத் துணைபோவோர் இருப்பது வேதனைக்குரியதே.

எமது விடுதலைப் போராட்ட

**கூட இருப்பான்**
**குழிபறிப்பான்**
**வேடத்தை விளங்கி**
**இனங்காணுங்கள்**

த்தைச் சிதைப்பதற்காக பல் வேறு வழிகளிலும் சதா முயன்றுகொண்டிருக்கும் எதிரியானவன் அற்ப சலுகைகளுக்காகவும் சொற்ப பணத்திற்காகவும் ஆட்பட்டு தான் பிறந்த மண்ணையும், தன் சொந்தச் சோதரரையும் எதிரிக்கு விற்கத் துணியும் அடிவருடிகளை எமக்கெதிராக ஏவிவிட்டுக்கொண்டே இருக்கின்றான். ஆனாலும் விடுதலையை அவாவி நிற்கும் எம் தாயக மக்களின் விழிப்புணர்வினாலும் அவர் தம் ஒத்துழைப்பாலும் காலத்திற்கு காலம் இவ்வாறான துரோகத்தனங்களை எம்மால் அடையாளம்காண முடிகின்றது.

அண்மைக் காலங்களில் இவ்வாறான துரோகிகள் ஐவர் எம்மால் கைது செய்யப்பட்டு அவர்களது துரோகத்தனங்களும் அடையாளம் காணப்பட்டு விசாரணைகளும் பூர்த்தியடைந்த நிலையில் உள்ளன. அவர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு.

**முருகுப்பிள்ளை பூலோகராசா. செம்மலை, அலம்பில், மணலாறு.**

சிட்டா என்று அழைக்கப்படும் மேற்படி பூலோகராசா தனது தொழில் நிமித்தமாக உடப்பிற்குச் சென்று வந்த வேளை இராணுவ உளவுப்பிரிவைச் சேர்ந்த சம்பத், சுரேஸ் ஆகியோருடன் தொடர்பேற்பட்டு அவர்கள் மூலம் இராணுவ உளவுப் பிரிவின் முக்கிய நபரான முத்தலிப் என்பவரின் தொடர்பினைப் பெற்று, எமதியக்க முகாம்கள், நடவடிக்கைகள் போன்றவற்றைக் காட்டிக்கொடுத்துள்ளார்.

முல்லைத்தீவு, மணலாறு பகுதிகளில் அமைந்திருந்த பல முகாம்கள் இவரால் காட்டிக்கொடுக்கப்பட்டு அம்முகாம்கள் விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாவதற்கும், அத்தாக்குதல்களால் பல போராளிகள் வீரச்சாவடைவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

மேலும் முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள மாத்தளனில் லெப். கேணல் சாள்ஸ் அவர்களின் ஞாபகார்த்த தூபி திறப்புவிழா பற்றிய தகவல்களை இராணுவ உளவாளிகளுக்கு வழங்கியுள்ளார், இக்காட்டிக் கொடுப்பினால் இந்நிகழ்வில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் மேஜர் மூர்த்தி மாஸ்ரர் உட்பட பல போராளிகள் வீரச்சாவடைவதற்கும், ஏதும் அறியாப் பச்சிளங் குழந்தைகள், அப்பாவிப் பொது மக்கள் உட்பட இருபதுக்கும் மேற்பட்டோர் பலியானதற்கும் இவர்காரணமாக இருந்துள்ளார்.

**வினாசி இராசதுரை. பன்றிக் கெய்த குளம், ஓமந்தை, வவுனியா.**

கிளி என்று அழைக்கப்படும் லொறி முதலாளியான மேற்படி இராசதுரை என்பவர் வவுனியா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை இராணுவ உளவுப்பிரிவின் முக்கிய நபரான முத்தலிப் என்பவரின் தொடர்பேற்பட்டு வவுனியாவில் உள்ள ஜோசப் இராணுவ முகாமிற்கு நேரடியாகச் சென்றுவரத் தொடங்கி காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்துள்ளார்.

தண்ணீரூற்று, ஒட்டிசுட்டான், கிளிநொச்சி போன்ற பகுதிகளில்



சங்கரப்பிள்ளை

அமைந்துள்ள பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை இராணுவ உளவுப் பிரிவிற்கு வழங்கியதுடன் அவை விமானத்தாக்குதல்களுக்கு உள்ளாவதற்கும் - காரணமாக இருந்துள்ளார்.

வியாபாரத்திற்காக இராணுவத்தினரிடமிருந்து சில அற்ப சலுகைகளைப் பெறுவதற்காகவும், தடைசெய்யப்பட்ட சில பொருட்களைக் கொண்டு வருவதற்கான அனுமதியைப் பெறுவதற்காகவுமே இவர் மேற்படி துரோகங்களில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சின்னையா சங்கரப்பிள்ளை. ஆனந்தபுரம், கிளிநொச்சி.**

மேற்படி சங்கரப்பிள்ளை லொறி ஒன்றிற் சாரதியாக வவுனியாவிற்குச் சென்று வந்த வேளை இராணுவ உளவுப் பிரிவைச் சேர்ந்த சமரவீர என்பவருடன் தொடர்பு ஏற்படுட்டுப் பல காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தார். வவுனியாவில் உள்ள எமதியக்கத்தடைமுகாம் நிலவரங்களையும் அப்பகுதிகளில் போராளிகளின் நடமாட்டங்களையும் எதிரிக்குக்காட்டிக் கொடுத்ததன் மூலம் அப்பகுதி இராணுவத்தினரின்தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் அதில் இரு



சண்முகநாதன்

போராளிகள் வீரச்சாவடைவதற்கும் இவரே காரணமாக இருந்துள்ளார்.

இது போன்று கிளிநொச்சிப் பகுதியில் அமைந்திருந்த எமதியக்க முகாம்கள் சிலவற்றையும் எதிரிக்குக் காட்டிக் கொடுத்துள்ளார்.

**அழகன் சண்முகநாதன். சேனைத்திடல், நெடுங்கேணி, முல்லைத்தீவு.**

சண்முகம் என்று அழைக்கப்படும் மேற்படி சண்முகநாதன் வியாபார நோக்கமாக வவுனியா சென்று வந்த வேளை இராணுவ உளவாளியான உபாலி என்பவரின் தொடர்பு ஏற்பட்டு புதுக்குடியிருப்பு நெடுங்கேணிப்பகுதியில் அமைந்திருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை எதிரிக்கு வழங்கியதுடன், சில முகாம்கள் விமானத்தாக்குதல்களுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

**உங்களைப்**
**பேசவைத்து**
**உள்ளதை**
**உருவிக்கொள்வான்**
**-உளவாளி**
**கள்ளமில்லாமல்**
**கண்டவருடனும்**
**-கதையாதீர்.**

அத்தோடு அப்பாவிப் பொது மக்களை எமதியக்க ஆதரவாளர்கள் என்று காட்டிக் கொடுத்து அவர்கள் அநியாயமாகக் கைது செய்யப்படுவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

**ஆண்டி அருணாசலம். 155 ம் கட்டை, விவேகானந்த நகர் கிளிநொச்சி.**

தாத்தா என்று அழைக்கப்படும் மேற்படி அருணாசலம் வியாபார நோக்கமாக வவுனியா சென்று வரும் போது இராணுவ உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி அத்தொடர்புகள் மூலமாக ஜோசப் இராணுவ முகாமிற்கு சென்றுவரத் தொடங்கினார்.

எமதியக்க முகாம்களின் அமைவிடங்கள் மற்றும் போராளிகளின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களையும் எதிரிக்கு வழங்கி வந்துள்ளார். சுமார் பத்துக்கு மேற்பட்ட முகாம்கள் இவரால் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குச் சன்மானமாக ஓரிரு முறை தடைசெய்யப்பட்ட பொருட்கள்கொண்டு வருவதற்கான அனுமதியையும், ஒரு தொகைப் பணத்தையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பிற்குரிய மக்களே எம் தாயகம் மீண்டுமொரு யுத்தத்தினுள் தள்ளப்பட்டிருக்கின்றது. யுத்தம் எமக்கு விருப்பமான ஒன்றல்ல ஆனாலும் எம் உரிமைகளைப் பெற எமக்கு அதைத் தவிர வேறுவழி இல்லை. இந்த நிலையில் எதிரியானவன் தனது முழுப்பலத்தையும் எம்மீது பிரயோகித்துள்ளதுடன், தனது முப்படைகளையும் எமக்கு எதிராகக்



அருணாசலம்

கட்டவிழ்த்து விட்டுள்ளான்.

அத்தோடு மேற்படி துரோகிகளையும் எம்மீது ஏவிவிட்டுக்கொண்டிருக்கின்றான்.

யுத்தகளத்தில் எதிரிக்கு முகம் கொடுக்கும் அதே வேளை மேற்படி துரோகத்தனங்களிற்கும் எம் தாயகம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது இத்துரோகிகள் எங்களிற்குள்ளேயே வாழ்கின்றார்கள். போராட்டத்தின் மீது பற்றுக்கொண்டவர்கள் போன்று நடிக்கின்றார்கள், இயக்க ஆதரவாளர்கள் போன்றும் செயல்படுகின்றார்கள், மேற்படி மறைப்பின் மூலம் மக்களை ஏமாற்றி எதிரிகளுக்குத் துணைபோகின்றார்கள்.

யுத்தம் ஒன்றின் மூலம் எம்மக்களின் விடுதலையுணர்வை அழித்துவிடவோ, இப்போராட்டத்தை வெற்றி கொள்ளவோ முடியாதென்பது எதிரிக்கு நன்கு தெரியும். மேற்படி துரோகிகளை பயன்படுத்துவதன் மூலம் எம் போராட்டத்தைச் சிதைப்பதற்கு எதிரி இன்னும் இன்னும் அதிகமாக முயன்று கொண்டே இருப்பான். நாம், ஒவ்வொருவரும் விழிப்புடனும், பொறுப்புடனும், எச்சரிக்கையுடனும் இருப்பதன் மூலம் மேற்படி துரோகத்தனங்களை அடையாளம் கண்டு வெற்றிக்கு வழிவகுப்போம், விடுதலையை விரைவாக்குவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இத்தாலியில் இடம் பெற்ற...
# சப்தஸ்வரங்கள் இசை நிகழ்ச்சி




24.04.1995 ஞாயிற்றுக்கிழமை இத்தாலியின் பலெர்மோ நகரில் காந்தரூபன் அறிவுச்சோலை நிதிக்காக, தமிழர் கலை பண் பாட்டுக்கழகஇத்தாலிக்கிளையின் ஆதரவுடன், இளையதாரகை இசைக்குழுவினர்வழங்கிய 'சப்தஸ்வரங்கள்' இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இத்தாலி நாட்டவர்களான திரு.பிலிப்போ ஜிகாந்தி அவர்க –ளும், டாக்டர் தி.ஸ்தற்சியோனே அவர்களும், தமிழர் பண்பாட்டு –க்கமைய மங்கள விளக் கேற்றினர். தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டவரலாற்றில் வீரச்சாவடைந்தமாவீரர்களுக்கும், உயிர் நீத்த எம் தேசமக்களுக் கும் 2 நிமிட அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து. திரு. அன்ரிப்புறோ அவர்கள் கலை நிகழ்ச்சி பற் றியும், காந்தரூபன் அறிவுச் சோலை குறித்தும் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

முதலில் இளையதாரகை இசை க்குழுவினர் வழங்கிய தமிழீழ எழுச்சி கானங்களுடன், சில தென்னிந்தியப் பாடல்களும் கலந்து சப்தஸ்வரங்கள் என்ற இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து 'மாலதி கலைப்பள்ளி' மாணவ மாணவியர் இணைந்து வழங்கிய அபிநய நடனம் அரங் கேறியது.

'பரணிபாடுவோம்...' என்ற பாடலே சிறார்களின் அபிநயத்தில் காட்சி யாக்கப்பட்டது. வழமைபோல இந்நடனம் மக்களின் வரவேற் பையும் பாராட்டையும்பெற்றது.

இதனைத் தொடர்ந்து 'பாரில் தமிழன்.... ' என்ற கடற்புலிகளின் பாடலுக்கேற்ப தமிழர் கலை, பண்பாட்டுக்கழக இளைஞர்கள் இசை அசைவு வழங்கினர். இந் நடன முடிவில் தமிழீழப் போராட்ட முன்னெடுப்புக்களுக்காக தம் வாழ்வைக் கடலிலே கரைத்த படகோட்டிகளுக்காகவெளியிடப்ப ட்ட, 'கடலிலே காவியம் படைப் போம்' என்ற பாடல் இசைத் தட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பிரதிநிதி திரு.மேதா அவர்களால் வெளியி டப்பட, தமிழர் கலை பண்பாட்டு க்கழக இத்தாலிக் கிளைப் பொறுப்பாளர் திரு.ஈசன் பெற்றுக் கொண்டார்.

பின்னர் 10 நிமிட இடை வேளையின்போது, பலெர்மோவில் கடந்த 16.04.95 அன்று 'ஈழத் தமிழ் இளம் கலைஞர் மன்றம்' என்ற கழகம் நடாத்திய நிகழ்ச் சியில் பெற்ற பணத்தில் 1000 மில்லாக்களை (30,000ரூபா) தமிழீழத்தில் செயற்கைக் கால் கள் உருவாக்கி இலவசமாக வழங்கும் 'வெண்புறா செயற் கைக்கால்' தொழில் நிறுவனத் திடம் கையளிக்கும் படி, தமிழர் விடுதலைப்புலிகளின் இத்தாலிக்கிளைப் பிரதிநிதியிடம் மேடையில் ஒப்படைக்கப்பட்டது.

இறுதிக் கலை அம்சமாக பலெர்மோ வாழ் நகைச்சுவைக் கலைஞர்கள் வழங்கிய 'சற்குண –த்தார் வீதி' என்ற நாடகம் மேடை ஏற்றப்பட்டது. அரை மணிநேர இக் குறுகிய நாடகம், பார்வையாளர்களிடம் வரவேற்பைப் பெற்றது. இன் நிகழ்வுகள் அனைத்தையும் பலெர்மோவில் தமிழர் புனர் வாழ்வுக்கழக நிதிக்காக இயங்கி வரும் 'ஈழப்பிரியா' ஒலி ஒளி அகத்தினர் ஒளிப்பதிவு செய்தனர். இவற்றுடன் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.


தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிதிக்காக
தமிழீழத்தில் தமிழீழக் கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட
தமிழீழத் திரைக்காவியங்கள்

* ஒரு காட்சி மட்டும் *

உயிர்ப்பூ

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்

நிதம் நிதம் எமது கடற்பரப்பில் இராணுவ அவலங்களுக்கு உள்ளாக்கி தனது குடும்பத்தையே சிதைத்த கடற்படையை சிதறடிக்கும் ஒரு கரும்புலியின் கதை...

இடம்
LE TRIANON
80, Bld. Rochechouart,
75018 Paris
METRO : ANVERS

காலம்
25-06-95
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3.30 மணி

இன்னும் ஒரு நாடு



புனர்வாழ்வு
## போசாக்கு நிலையம்
முல்லை மாவட்டம் - உடையார்கட்டு

### அன்பார்ந்த பிரான்சு வாழ் தமிழீழ மக்களே !

சிங்கள இனவாத அரசின் இராணுவ வெறியாட்டத்தாலும், பொருளாதாரத் தடையினாலும் அப்பாவித் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அகதிகளாக்கப்பட்டு முகாம்களில் அவதியுறும் மக்கள் ஒரு புறம், தகுந்த சுகாதார வசதியின்றி பயங்கர நோய்க்கு ஆளாகும் அபாயம் இன்னுமொரு புறம். இதற்கிடையில் போரினால் ஏற்படும் தாக்கத்தால் போசாக்கற்றுப் பிறக்கும் குழந்தைகளினதும், இளம் பிள்ளைகளினதும் எதிர்காலம் கேள்விக்குறியாகவும், பரிதாபகரமானதாகவும் இருக்கின்றது.

...லையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போசாக்கற்ற குழந்தைகளை மரணப்பிடியிலிருந்து ...ாற்ற போசாக்கு நிலையங்களை உருவாக்கியது. 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ...ாக்கு நிலையங்களின் மனிதாபிமான செயற்பாட்டினால் இதுவரை 2300 குழந்தைகள் சாவின் விளிம்பிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறான போசாக்கு நிலையங்களில் ஒன்றுதான் முல்லைத்தீவு, மாவட்டம். உடையார்கட்டு என்னும் இடத்தில் அமைந்துள்ள " புனர்வாழ்வு போசாக்கு நிலையம் ". இப்பராமரிப்பு நிலையம் பணம் பற்றாக்குறையால் இயங்க முடியாமல் இருந்தவேளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரெஞ்சுக் கிளை, மேற்படி போசாக்கு நிலையத்தை நடாத்துவதற்கான பணப்பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இப் போசாக்கு நிலையத்தில் 100 போசாக்கற்ற குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இப் பராமரிப்புக்குத் தேவையான பெரும் தொகைப் பணத்தை நாம் மாதாந்தம் அனுப்பி வைக்க வேண்டிய பாரிய பொறுப்பில் உள்ளோம். மனித நேயமிக்கவர்கள் எமது இந்தப் புனிதமான திட்டத்திற்கு உதவ முன்வாருங்கள்.

இங்கு வெளிநாடுகளில் வாழும் நாங்கள் நினைத்தால், எமது இனத்தின் வித்துக்களை, எதிர்கால நட்சத்திரங்களை நிச்சயம் மரணப்பிடியில் இருந்து காப்பாற்றலாம். நாம் காப்பாற்றியே தீரவேண்டும். இது போன்ற கொடிய துன்பத்திலிருந்து இவர்களை நாம் காப்பாற்றும்போது, நாங்கள் புனிதமான தொண்டினைச் செய்த திருப்தியை அடைகின்றோம். ஒரு மனிதனானவன் ஆற்றும் புண்ணியச் செயற்பாடுகளே அவனது வாழ்வில் மகிழ்வையும் உயர்வையும் கொடுக்கிறது. அந் நேரத்தில் அவனுடைய வாழ்வின் பெறுமதியை அவனே மதிப்பிடுவான். எங்கள் மக்களின் பலர் இத போன்ற புனிதமான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருகின்றனர். எனினும் இங்கு வாழும் மக்கள் அனைவரும் இரக்க மனத்தோடு சிந்தித்துச் செயற்பட்டால், பட்டினிச் சாவு என்ற கொடிய நிலையிலிருந்து தமிழன் விடுபடுவான்.

### அன்பார்ந்த மக்களே !

உங்களை மீண்டும் மீண்டும் கேட்கின்றேம். இந்தப் பரிதாபகரமான நிலையை உணருங்கள். நல்ல முடிவு எடுங்கள். உங்களால் தரப்படும் ஒவ்வொரு பணமும் எங்கள் பிள்ளைகளை உயிர்ப்பிக்கின்றது. நல்ல உள்ளம் படைத்தவர்கள் இந்தப் பிஞ்சுகளைக் காப்பாற்ற முன் வாருங்கள்.

மேலதிக தொடர்புகட்கு:-

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரெஞ்சுக்கிளை
**188 Rue Ordener, 75018 Paris.**
வங்கி இலக்கம்: **408 5584 F (Credit Lyonnais)**



இத்தாலி - பலெர்மோ நகரில்
தமிழர் புனர்வாழ்வு நிதிக்காக
ஆரம்பிக்கப்பட்டு
புகலிச் சமரை படமாக்கிக் கொண்டிருந்த போது வீரச்சாவடைந்த ஈழப்பிரியாவின் ஞாபகார்த்தமாக
செயற்பட்டுவரும்
ஈழப்பிரியா ஒலி ஒளி அகம்
தொடர்புகளுக்கு :- ☎ 6113179



யேர்மன் அரங்குகளில்
தமிழீழக் கலைஞர்களின் உன்னத படைப்புக்களான
தமிழீழத் திரைக்காவியங்கள்

எல்லைக்கல்
உயிர்ப்பூ

காலம்: 17 - 06 - 95
சனிக்கிழமை
நேரம்: 14.30 மணி
இடம்:
SCHONSEATT - ALI
KAPELLEN STR - 60
BORKEN

காலம்: 25 - 06 - 95
ஞாயிறு
நேரம்: 11.00 மணி
இடம்: APOLLO KINO
ARNSBERG

காலம்: 02 - 07 - 95
ஞாயிறு
நேரம்: 12.15 மணி
இடம்: GLORIA KINO CENTER
BISMARKT STR - 02
35683 DILLENBERG

இன்னும் ஒரு நாடு
பிஞ்சு மனம்


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகள் அணியில் புலம்பெயர்ந்தோர்

புலத்தின் நலனை
நாடிடும் புலிகள்
நானிலம்அவரை
அங்கீகரி என்று
புலம்பெயர்ந்தோர்
திரண்டனர் பாரீர்!






களைவோம் புலிகள்
துயரை என்று
மழையிற் கூட
மகிழ்வாய் வந்தார்.




U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593

| | | | | |
|---|---|---|---|---|
| L.T.T.E<br>Post Box 47, 7400 HERNING<br>DENMARK.<br>Tel/Fax: 97-155299 | W.T.C.C<br>Lang STR - 206<br>8005 Zurich, Swiss.<br>T/F: 01/273-29-38 | T.C.G<br>Post Fach - 340251<br>51624 Gummersbach - 34<br>Germany | T.C.C<br>Via Mariano Stabile - 49<br>90139 Palermo, Italy<br>T/F: 091-611 3179 | W.T.C.C.<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica,<br>New York 11432, U.S.A.<br>T/F: 718-657-9463 |
| T.C.C<br>341 Rue des Pyrenees<br>75020 Paris, France<br>Tel: 435 81142, F 435 81191 | T.C.C<br>P.O.Box 375, Preston<br>Victoria 3072, Australia<br>T: 03-470 6441 F: 560 8224 | T.C.C<br>P.O.Box 1699 Vika<br>0110 Oslo -1, Norway<br>T: 022-191260 F: 190114 | T.C.C<br>Groot Hertoginnelaan<br>2517 BL Den Haag, Nederland<br>Tel: 070-346 1963 , F: 384 0683 | T.C.C<br>Glomminge Grand - 29<br>16362 Spanga, Sweden<br>Tel: 08-7612943 |


Printed by Observer Group Newspapers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்